@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

செப்டம்பர் 2018

Vol.1, Issue 4 | Price ₹ 35 | Annual Subscription ₹ 420



Rotary

ரோட்டரியின்
சுகாதார திட்டம்

ADVT

Rotary

Rotary District 3090

BE THE INSPIRATION

Dr. V.B. Dixit
District Governor 2018-19

Release of District Directory by
HE V.P. Singh Badnore, Governor of Punjab

Assistant Governors Review Meet

Installation of Rotary Club Ferozepur Cantt

Signature Project of The District : Water and Sanitation

உள்ளே

14 **தட்டம்மை, ஜெர்மன் தட்டம்மை, இந்தியாவில் ஒழிப்போம்**
தில்லியில் நடைபெற்ற தேசிய போலியோப்ளஸ் மற்றும் தட்டம்மை, ரூபெல்லா சந்திப்பு போலியோப்ளஸில் உள்ள ‘ப்ளஸ்’ ஐப் பற்றி விவரித்தது.

22 **போலியோ ஒழிப்பில் மெத்தனம் வேண்டாம்: RID C பாஸ்கர்**
RID C பாஸ்கர் இந்திய ரோட்டரியினர் அஃப்கானிஸ்தான், பாகிஸ்தானில் போலியோ உள்ளவரை விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார்.

26 **தகுதிக்கேற்ற அங்கீகாரம்**
போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் பணியை ரோட்டரியினர் முன்னிலைப்படுத்தும் வழிகளை INPPC தலைவர் தீபக் கபூர் விவரிக்கிறார்.

28 **பிரேக்அவுட் அமர்வுகள்**
ரோட்டரியின் மாநாட்டில் சில சுவாரஸ்யமான அமர்வுகள்.

32 **உள்ளூர் பள்ளிகளை மிளிரச் செய்யும் மொராதாபாத் ரோட்டரி**
மொராதாபாதில் ரோட்டரியினர் பள்ளிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நிகழ்வுகள்.

52 **கம்பீரமாக நிமிர்ந்து நிற்க கை கொடுப்போம்!**
கோவை மிட் டவுன் ரோட்டரி சங்கம் கால் இழந்தோருக்கு செயற்கைக் கால் பொருத்தி அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கிறது.

64 **குச்சுப்புடி நடனக்கலை**
ஆந்திர மாநிலத்தின் பாரம்பரிய நடனத்தைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்.

74 **அசாம் குழந்தைகளுக்கு மறுவாழ்வு**
இரு ரோட்டரி சங்கங்கள் அஸ்ஸாம் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சையளித்து புத்துயிர் பெறவைத்தன.



அட்டையில்: பள்ளிக்குழந்தைகளுக்கு ஆந்திரப் பிரதேசத்தில் ரோட்டரியினர் முறையாக கை கழுவ கற்றுத்தந்தனர்.

Inside - September 2018 - Tamil.indd 3 30-Aug-18 12:05:40 PM

ரூ.100 கோடி நன்கொடை ஊக்கமும் உத்வேகமும் அளிக்கிறது

TRFக்கு ரூ.100 கோடி ஒற்றைப் பரிசு என்கிற கட்டுரையில் ரவிசங்கரின் செயல், சமூகத்திற்கான நேசம் மற்றவர்களுக்கு உதவுவதில் அவரின் முயற்சி போன்றவற்றின் மூலம் கவரப்பட்டேன். சமூகத்திலிருந்து நிறைய எடுத்துகொண்டு, ஆனால் அதற்காக எதுவுமே திருப்பிச் செலுத்தாமல் இருப்பவர்களின் அறியாமையை போக்குவதாக அமைந்தது. இந்த வகையான நபர்கள் இன்னும் பூமியில் வாழ்கிறார்கள் என்பதை நான் அறிவதற்காக இந்த மாபெரும் மனிதரை சந்திக்க விரும்புகிறேன்.

கிரிபால் சிங்
RC துர்காபூர் ஸ்டீல் சிட்டி — D 3240

ரவிசங்கரின் வாழ்க்கை கதை படிக்க உண்மையிலேயே ஊக்கமும் உத்வேகமும் அளிப்பதாக இருக்கிறது. தன்னலம் மீறிய சேவை என்கிற ரோட்டரியின் நோக்கத்தில் நம்பிக்கையில் கொண்ட சிறப்பான மனிதர்கள் இருக்கிறார்கள். இந்த நம்பிக்கையை கெடாமல், நாம் அர்ப்பணிப்புடனும் ஒற்றுமையுடனும் கடினமாகப் பணியாற்ற வேண்டும்.

Dr சதீஷ் தாமங்கர்,
RC பெல்காம் — D 3170

TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையளித்துள்ள RC பெங்களூர் ஆர்சார்ட்ஸ் D 3190 பிரசிடென்ட் D ரவிசங்கரின் முன் மாதிரியான செயல் வியக்கத் தக்க, இரக்ககுணம் உள்ள, பெரிய மனதுள்ள செயல். மனித குணங்களிடையே, இது போன்ற தாராள மனப்பான்மையுள்ள நன்கொடையாளர்களைக் காண்பது மிக அரிது. ரவியையும் அவருடைய மனைவி பவோலாவையும்

அவர்களுடைய மாபெரும் நற்செயலுக்காக வாழ்த்துவோம். அவர்களின் குலம் பெருகி, நன்கொடையளிக்க நமக்கு ஊக்கமளிக்கட்டும்.

ஹேமந்த் காக்டே
RC அம்பர்நாத் — D 3142

TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையளித்த D ரவிசங்கரை பற்றி வாசிக்க வியப்பாக இருந்தது. அவருடைய கதை உண்மையாகவே அற்புதம், மிகப்பெரிய தொகையை கொடுப்பதற்கு அவர் சொன்ன விளக்கம் - என் அப்பாவின் ஸ்தானத்தில் இந்த சமுதாயம் இருந்தது - அதனால் இந்த பணத்தை நான் திருப்பிச் செலுத்துகிறேன். அவருடைய குடும்ப உறுப்பினர்களிடமிருந்து அவர் பெற்ற ஆதரவு பாராட்டத்தக்கது. டிரினிடாட், ஹம்மிங் பறவைகளின் நிலம், ரஷீதா பகத் எழுதிய கோபை ஆற்றை கௌரவித்தல் போன்ற கட்டுரைகளும் வாசிக்க அருமை. இந்திய மேப்பில் நம்முடைய DGகளின் படத்தை வெளிக் காட்டியது மூலம் நடுப்பக்கம் சிறப்புவாய்ந்ததாக இருந்தது.

M T ஃபிலிப்
RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211

கட்டுரைகள், அட்டைப் பக்கங்கள், ரோட்டரி திட்டப்பணிகளை பட்டியலிடுதல் மற்றும் ரோட்டரி குடும்பத்திலிருந்து வரும் கடிதங்களை ஊக்குவிப்பது

RIPN சுஷில் குப்தாவுக்கு வாழ்த்துக்கள்

காஜா சாஹேப் சிஸ்தி தர்கா மற்றும் இறைவன் பிரம்மாவின் உறைவிடமான ஆஜ்மீர் புண்ணிய தலத்திலிருந்து வாழ்த்துக்கள். 2020-21 ஆண்டுக்கான RI தலைவர் பரிந்துரைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட PRID சுஷில் குப்தாவுக்கு வாழ்த்துக்கள்.

விஷ்ணு அகர்வால்
RC ஆஜ்மீர் — D 3053

உறுப்பினர்களைத் தக்கவைப்பது முக்கியம்

உறுப்பினர்களைத் தக்க வைப்பது பற்றிய RID C பாஸ்கரின் செய்தி, பிரமிக்க வைத்தது. திரும்பத் திரும்ப அதை வாசிக்க சந்தோஷமாக இருந்தது. எனினும், நிறைய ரொட்டேரியன்கள் சேவையின் ஐந்து பிரிவுகளில் ஏதேனும் ஒன்றிலும் தங்களின் கூட்டுறவு அல்லது நேசம் இல்லாமல் இருப்பதன் காரணமாக தங்களின் பொறுப்புணர்வை புரிந்து கொள்வதில் தடுமாறுகிறார்கள். புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கு முன்பாக, அவர்களின் முன்னுரிமைகள், ஆர்வம் மற்றும் சேவை செய்வதற்கான நேரம் போன்றவற்றை ஆராயப்படவேண்டும், அதன் மூலம் ரோட்டரியில் சேவை மனப்பான்மையுள்ள நபர்களைப் பெறமுடியும் என்பதை நான் பரிந்துரைக்கிறேன். ஒரு சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் சேவையின் சில பிரிவுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும், எனவே ஒரு இலகுவான மற்றும் திறன் மிக்க செயல்பாட்டை உருவாக்க செயல்படக்கூடிய தலைவர்களின் வரிசையை உருவாக்கப்படமுடியும்.

Dr NRUK கர்த்தா, RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — D 3211

மனம் உடைதல் மற்றும் பெருந்தன்மை கொண்ட ஒரு பருவம் என்ற தலைப்பிட்ட தலையங்கத்தால்

போன்றவற்றின் மூலம் ஒரு இதழை வெளியிடுவதற்காக உங்களுக்கும், உங்கள் குழுவிற்கும் ரோட்டரி நியூஸ் இதழின் வழக்கமான வாடிக் கையாளராக பாராட்டுக்களை தெரிவிக்கிறேன். மேலும் TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையளித்த D ரவிசங்கரையும் நான் பாராட்டுகிறேன்.

டேனியல் சித்திலப்பில்லி
RC களூர் — D 3201

பவுண்டேஷனுக்கு ரூ.100 கோடி நன்கொடையளிக்க D ரவிசங்கருக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

Dr D K சோலங்கி, RC பன்பூர் பளுகாவுன் — D 3262

TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையளித்த D ரவிசங்கரைப் பற்றி வாசிக்க மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. அவரைப்பற்றிய விவரங்கள் அற்புதமானவை. அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தலைவணங்குகிறேன்.

MN மகேஸ்வரப்பா
RC தாவனகெரே வித்யாநகர் — D 3160

TRFக்கு ரூ.100 கோடி ஒற்றை பரிசாக அளித்த D ரவிசங்கர் அவர்களை பார்க்க இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்கள்.

N ஜகதீசன்
RC எலுரு — D 3020

உலகம் முழுவதும் ரோட்டரியின் நற் செயல்களுக்கான புகழை கொண்டு வந்து விட்ட D ரவிசங்கர் அடக்கமுடைய, அக்கறையுள்ள ரொட்டேரியன். அவரை நினைத்து ரோட்டரி கண்டிப் பாக பெருமைப்பட வேண்டும்.

நந்தனன் வாரியர்
RC வடக்கன்சேரி கொச்சின் — D 3201

வியப்பில் ஆழ்ந்தேன் மற்றும் அக்கட்டுரையை நான் படித்து முடிக்கும் வரை நிறுத்தவே இல்லை. இதழாசிரியர் விளையாட்டைப் பற்றி பேசுகிறார், அத்துடன் ரோட்டரியையும் விளையாட்டையும் ஒரே தளத்தில் கொண்டு வருகிறார். ரோஜர் ஃபெடரரிடம் பகட்டு காணப்படவில்லை என்று குறிப்பிடுவதை, நான் TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையளித்த கொடையாளி D ரவிசங்கரிடமும் கண்டறிந்தேன்.

PS கோகலே, RC டோம்பி
விலி மிட்டவுண் — D 3142

கோபை ஆறு : ஒரு அருமையான கதை

ஆகஸ்டு மாத இதழில் கோபை ஆறு பற்றிய கட்டுரையை பார்க்கப் பெருமையாக இருந்தது. என் எண்ணங்களை உங்கள் எழுத்தோட்டத்தில் மிகத் துல்லியமாக பிரதிபலித்தபோது நான் பூரிப்படைந்தேன். ஆறுகளைப் பற்றிய என் கொள்கைகள், ஆண்பெண் கண்ணோட்டத்தில் இருக்கும் வேறுபாடு மற்றும் பயணத்தின் போது நான் பார்த்த ஆற்றுடன் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை இந்த கட்டுரையில் மிக அருமையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

சஞ்சுக்தா பானிக், ஆராய்ச்சியாளர், விஸ்வ பாரதி

ரோட்டரி இந்தியாவின் மாபெரும் காட்சி

டொரான்டோ மாநாட்டில் தெற்காசியாவின் வரவேற்பு ரோட்டரி இந்தியாவின் அனைத்து தரப்பு சாதனைகளை எடுத்துக்காட்டுவது போல அமைந்தது, இந்தியாவின் செயல்பாடு பற்றிய முக்கிய RI தலைவர்களின் கருத்து என்கிற கட்டுரை. கடந்த ஆண்டு இந்தியா $19.1 மில்லியன் பங்களித்துள்ளது, மேலும் இப்போது D ரவிசங்கர் ரூ.100 கோடி கொடுத்துள்ளார்!

ஆர் முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262

இவான்ஸ்டனில் ரோட்டரி இதழாசிரியர்கள் சந்திப்பு

இவான்ஸ்டனில் ரோட்டரி இதழாசிரியர்கள் சந்திப்பில் முன்னாள் RI பிரசிடென்ட் இயான் ரைஸ்லி, ரோட்டரி இதழ்களின் தரம் மிக உயர்ந்துள்ளதாக சரியாக கணித்துள்ளார் (ஜூலை மாத இதழ்). நமது இந்திய இதழின் உள்ளடக்கம் இப்பொழுது தகவல் நிறைந்தும் புதுமையான கட்டுரைகளும் நன்றாக கலந்ததாக இருக்கிறது.

பியூஷ் தோஷி, RC பேளூர் — D 3291

இந்தியாவின் பிரதிநிதியாக ரஷீதா பகத் நமது பாரம்பரிய உடையில் கலந்துகொண்ட இவான்ஸ்டனில் ரோட்டரி இதழாசிரியர்கள் சந்திப்பு கட்டுரையை பார்க்க அற்புதமாக இருந்தது. படிப்பைக் கைவிட்ட சிறுமிகள் மீண்டும் பள்ளிப்படிப்பிற்கு திரும்ப வைத்த RC அங்லேஷ்வர், ரோட்டரியின் மந்திர செயல்பாட்டை மீண்டும் ஒருமுறை காண்பித்துள்ளது! Tallyஇல் இலவச கம்ப்யூட்டர் பயிற்சி போன்ற பயிற்சிகள் மற்றும் இதர பயிற்சி திட்டங்களை வேலையில்லா இளைஞர்களுக்காக வழங்க ரோட்டரி சங்கங்கள் தொழில் மையங்களை கட்டாயம் அமைக்க வேண்டும்.

சங்கங்கள் குக்கிராமங்களுக்கு மருத்துவ சேவைகள் போன்ற சமுதாய திட்டப்பணிகளையும் கட்டாயம் எடுக்க வேண்டும். இந்தியா முழுவதும் ரோட்டரி மேற்கொள்ளும் தொழில் திட்டப்பணிகள் மற்றும் சமுதாய சேவைகளை மற்ற சங்கங்களும் செயல்படுத்துவதற்கு, அதைப் பற்றிய அதிகமான கட்டுரைகளை வாசிக்க நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்.

நவீன் குமார் கார்க், RC சுணம் — D 3090

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

Governors Council

RI Dist 2981	DG	S Piraiyon
RI Dist 2982	DG	Nirmal Prakash A
RI Dist 3000	DG	RVN Kannan
RI Dist 3011	DG	Vinay Bhatia
RI Dist 3012	DG	Subhash Jain
RI Dist 3020	DG	Guddati Viswanadh
RI Dist 3030	DG	Rajiv Sharma
RI Dist 3040	DG	Gustad Anklesaria
RI Dist 3053	DG	Priyesh Bhandari
RI Dist 3054	DG	Neeraj Sogani
RI Dist 3060	DG	Pinky Patel
RI Dist 3070	DG	Barjesh Singhal
RI Dist 3080	DG	Praveen Chander Goyal
RI Dist 3090	DG	Dr Vishwa Bandhu Dixit
RI Dist 3100	DG	Deepak Jain
RI Dist 3110	DG	Arun Kumar Jain
RI Dist 3120	DG	Stuti Agrawal
RI Dist 3131	DG	Dr Shailesh Palekar
RI Dist 3132	DG	Vishnu S Mondhe
RI Dist 3141	DG	Shashi Sharma
RI Dist 3142	DG	Dr Ashes Ganguly
RI Dist 3150	DG	Ramesh Vangala
RI Dist 3160	DG	Konidala Muni Girish
RI Dist 3170	DG	Ravikiran Janradan Kulkarni
RI Dist 3181	DG	Rohinath P
RI Dist 3182	DG	Abhinandan A Shetty
RI Dist 3190	DG	Suresh Hari S
RI Dist 3201	DG	A Venkatachalapathy
RI Dist 3202	DG	Dr E K Ummer
RI Dist 3211	DG	E K Luke
RI Dist 3212	DG	K Raja Gopalan
RI Dist 3231	DG	C R Chandra Bob
RI Dist 3232	DG	Babu Peram
RI Dist 3240	DG	Dr Sayantan Gupta
RI Dist 3250	DG	Kumar Prasad Sinha
RI Dist 3261	DG	Nikhilesh M Trivedi
RI Dist 3262	DG	Bhabani Prasad Chowdhury
RI Dist 3291	DG	Mukul Sinha

Board of Permanent Trustees & Executive Committee

PRIP	Rajendra K Saboo	RI Dist 3080
PRIP	Kalyan Banerjee	RI Dist 3060
PRID	Sudarshan Agarwal	RI Dist 3011
PRID	Panduranga Setty	RI Dist 3190
PRID	Sushil Gupta	RI Dist 3011
PRID	Ashok Mahajan	RI Dist 3141
PRID	Yash Pal Das	RI Dist 3080
PRID	Shekhar Mehta	RI Dist 3291
PRID	P T Prabhakar	RI Dist 3232
PRID	Dr Manoj D Desai	RI Dist 3060
RID	C Basker	RI Dist 3000
TRF Trustee	Gulam A Vahanvaty	RI Dist 3141
RIDE	Dr Bharat Pandya	RI Dist 3141
RIDE	Kamal Sanghvi	RI Dist 3250

Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma Chair – Governors Council	RI Dist 3030
DG Pinky Patel Secretary – Governors Council	RI Dist 3060
DG Subhash Jain Secretary – Executive Committee	RI Dist 3012
DG A Venkatachalapathy Treasurer – Executive Committee	RI Dist 3201
DG Shashi Sharma Member – Advisory Committee	RI Dist 3141

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

தலைவர்களின் இழப்பையும் இயற்கை பேரிடரையும் சமாளித்தல்

கடந்த சில வாரங்கள் இந்தியாவிற்கு பல துயரங்களைக் கொடுத்தது. பத்திரிக்கை ஆசிரியரும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் மீடியா ஆலோசகருமான சஞ்சயா பாரு தனது டிவிட்டர் பக்கத்தில், ''அடல்ஜி போன்று எந்தவொரு இந்திய அரசியல்வாதியையும் உலகம் இந்தளவுக்கு நேசித்ததில்லை,'' என்று பதிவிட்டதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். காந்திஜியோ அல்லது ஜவஹர்லால் நேருவோ இந்தளவு நேசிக்கப்பட்டிருக்கலாம் என்று விவாதிக்கலாம். ஆனால் முன்னாள் இந்திய பிரதமர் AB வாஜ்பாய் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்ட போது, இழப்பின் முழுமையை நிஜமாக உணரமுடிந்தது. அவரின் அரசியல் கொள்கைகளை நீங்கள் ஒப்புக்கொண்டாலோ அல்லது மறுத்தாலோ, உங்களின் ஈர்ப்பு, போற்றுதல், மரியாதை மற்றும் ஒப்புதலை வாஜ்பாய் பெற்றார். அவருடைய அற்புதமான பலவித தகுதிகளில்... ஒரு கவிஞனாக இருந்தது தான் முதன்மையானது. 'கீத் நஹி காதா ஹூ' என்ற அவரின் மெய்சிலிர்க்க வைக்கும் கவிதை வாசிப்பை யாரால் மறக்க முடியும், இது பலவித உள்ளார்ந்த அர்த்தங்களை, அதாவது... சோகம், அழுத்தம் அதன்பிறகு எதிர்ப்பு, நம்பிக்கை மற்றும் நேர்மறை எண்ணம் போன்றவற்றைக் கொண்டிருக்கிறது அல்லது அவருடைய பேச்சுத்திறமை... 1996ல் பாராளுமன்றத்தில் பேசியதும், 1999ல் அவருடைய அரசு முழு காலத்தையும் பூர்த்தி செய்ய முடியாத போது பேசியதும் நினைவு இருக்கிறதா? அவற்றை யூ-டியூப் இல் பாருங்கள், ஒரு தலைசிறந்த பேச்சாளரின் அற்புதங்கள்-குரல் ஏற்ற இறக்கம், அதை வெளிப்படுத்தும் விதம், ஆனால் சத்தம் போடாமல், ஓலம் எழுப்பாமல், பழிசுமர்த்துதல் அல்லது நாடகமாடுதல் போன்றவை இல்லாமல் தன் எதிராளிகளை வெளுத்துவாங்கினார். இவை அனைத்தையும் இந்த சிறந்த ஒரே சொற்றொடரில் அடக்கிவிடலாம் அது ஜோர் கா ஜட்கா தீரே சே, இதை தமிழில் மொழி பெயர்த்தால் ''அழுத்தமாகத் தள்ளி, ஆனால் மென்மையாக முடிந்தது''. அவருடைய இணக்கத் தன்மையும் வேற்றுக்கொள்கை உடையவர்களையும் தன்னுடன் இணைக்கும் திறன் போன்றவை தான் தன்னை கடுமையாக விமர்சிப்பவரையும் இன்று அவருடைய இழப்பிற்கு வருந்த வைக்கிறது.

வாஜ்பாய் உடன், திமுக தலைவரும் தமிழகத்தின் ஐந்து-முறை முதல்வருமான மு கருணாநிதியும், CPI (M) தலைவர் மற்றும் முன்னாள் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜியும் இறந்துவிட்டனர். சொல்வதை செய்யக்கூடிய பல தலைவர்களை இந்த தேசம் இழந்து கொண்டிருக்கிறது, அவர்கள் ஆட்சியில் இருந்தாலோ அல்லது எதிர்கட்சியாக அமர்ந்தாலோ தங்களின் சாந்த தன்மையையும் உணர்வுகளையும் தக்கவைப்பதில் திறன் உடையவர்கள்.

ஒரு அரசியல் வெற்றிடத்தை விட்டுச் சென்ற இவர்களுடன், இயற்கையின் சீற்றத்தை சந்தித்த கேரள மக்களுக்காகவும் இந்த நாடு துக்கம் அனுசரிக்கிறது, இந்த நூற்றாண்டின் மோசமான மழைக்காலம் என சொல்லலாம். தென்மாநிலத்தின் பல மாவட்டங்கள் ஆண்டுதோறும் விளம்பரப்படுத்தும் 'மழைக்கால மாயாஜாலம்' என்ற விடுமுறை திட்டங்களை அடைமழை அடித்துச் சென்றுவிட்டது, நம்பமுடியாத அளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டனர், மாட்டுக்கறி சாப்பிடுவது அல்லது சபரிமலையில் பெண்கள் தங்கள் மாதவிடாய் காலத்தில் நுழைவது போன்ற சில கொடூரமான காரணங்கள் கேரளாவில் இயற்கை சீற்றத்திற்கான சொல்லப்படும் உண்மையான காரணம் என்னவென்றால் மேற்கு மலைத்தொடரில் ஏற்பட்ட சுற்றுப்புற சூழல் பாதிப்பு தான். இந்திய அரசின் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனப்பகுதி அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட, மாதவ் கட்கில் தலைமையிலான ஒரு நிபுணர் குழு 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்த பிராந்தியத்தின் இயற்கை சுற்றுச்சூழலை பராமரிக்கும் கணக்கீட்டை பரிந்துரை செய்தது. கேரளா உட்பட ஆறு மாநிலங்களில் பரவியிருக்கும் இந்த ஒட்டுமொத்த மலைத்தொடரை சுற்றுச்சூழல் பராமரிப்பு பகுதி என்று அறிவிக்க வேண்டும் என இந்த குழு பரிந்துரை செய்தது. ஆனால் சிலவகையான தொழிற்சாலை மற்றும் சுரங்க நடவடிக்கைகளின் ''வளர்ச்சி'' நடவடிக்கைகளை தடை செய்திருக்கணும் என்று கூட அர்த்தமாகும். பழி சுமர்த்துவதை தவிர்த்து, பல்வேறு ரொட்டேரியன்கள் உட்பட கேரளாவிலும் மற்ற மாநில மக்களும் வெள்ளம் பாதித்த பகுதிகளை மறுசீரமைப்பதில் உதவி செய்ய ஆரம்பித்துள்ளனர். உங்களால் எப்படி உதவலாம் என்பது பற்றி 54 பக்கத்தில் விளக்கத்துடன் ஒரு சிறு கட்டுரை இருக்கிறது. இயற்கையால் ஏற்பட்ட மற்றும் மனிதனால் ஏற்பட்ட பேரிடர்களில் ரொட்டேரியன்கள் எப்போதும் பெருந்தன்மையுடன் கொடுப்பார்கள்... தங்கள் நேரம், திறன் மற்றும் பணம். உடனடியாக கேரளா நமது உதவியை எதிர்பார்க்கிறது, எனவே கண்டிப்பாக நீங்கள் உதவி செய்வீர்கள்...

ரஷீதா பகத்



உலக நன்மைக்கு பாடுபட வலுவான சங்கங்கள் அவசியம்

BE THE INSPIRATION

ரோட்டரி அமைப்பு நிறைவேற்றிய எல்லாப் பணிகளையும் புகைப்படங்களாக எடுத்துப் பார்ப்பதாக நினைத்துக் கொள்வோம். இவ்வளவு பணிகளையும் ஒரே ஒரு அமைப்பு மட்டுமே செய்து முடித்திருக்கிறதா என்று ரொட்டேரியன்களைத் தவிர வேறு யாரும் நம்பமாட்டார்கள். அந்தப் புகைப்படங்களில் அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஏராளமான தன்னார்வலர்கள் போலியோ ஒழிப்பு, சிறுகடனுதவி, தூய்மையான குடிநீர் அளிக்கும் பணி ஆகியவற்றில் ஈடுபடுவதைக் காணலாம்.

நாம் சார்ந்திருக்கும் பகுதியில் சமுதாயத் தின் தேவைகள் என்னென்ன, எப்படியெல்லாம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்பது ரோட்டரி சங்கத்தினருக்குத் தெரியும். அதனால்தான், ஒவ்வொரு சங்கத்திலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது.

எகிப்து, இந்தோனேசியா, கென்யா நாடுகளில் உள்ள ரோட்டரி அமைப்புகளில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தை நெருங்கிவிட்டது. நமது சங்கங்களில் வயது வரம்பைக்கூடத் தளர்த்தி வருகிறோம். ஒவ்வொரு சமுதாயத்திலும் இளைஞர்கள் தங்களது திறமை, ஆற்றலை சமுதாயத்துக்குப் பயன்படுத்துவதிலும் வழிகாட்டிகளிடமிருந்து கற்றுக் கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களிடம் ரோட்டரி குறித்த விவரத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். இளம் தொழில்நிபுணர்களை https://www.rotary.org/en/engaging&younger&professionals&toolkit என்ற இணையதளம் இளம் தலைவர்களையும் பழைய ரோட்டரியினரையும் தொடர்புகொள்ள உதவும்.

அதையடுத்து ரோட்டராக்ட் சங்கங்களைச் சேர்ந்த இரண்டரை லட்சம் இளம் உறுப்பினர்கள் பணியாற்ற பெரிதும் உதவுவார்கள். ரோட்டராக்ட் உறுப்பினர்கள் நமது கூட்டாளிகள். பல திட்டங்களில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களது நிகழ்ச்சிகளில் அவர்களைப் பேச வையுங்கள். உங்களது சங்கத்தில் இணைய அழையுங்கள். அர்ப்பணிப்புள்ள ரோட்டராக்ட் உறுப்பினர்கள் பிறகு ரோட்டரி உறுப்பினர்கள் ஆகிறார்கள். சிலர் புதிய ரோட்டரி சங்கங்களையும் தொடங்குகிறார்கள்.

உலகத்துக்கு ரோட்டரி தேவைப்படுகிறது. ரோட்டரி நிறுவனத்திற்கு வலுவான ரோட்டரி சங்கங்களும் ஈடுபாடும் கொண்ட உறுப்பினர்களும் தேவை. ஆர்வமுள்ள ஒவ்வொருவரையும் நமது ரோட்டரியில் இணைக்க அழைப்பு விடுக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் ரோட்டரியில் நீடிக்க வேண்டியதை உறுதிசெய்யுங்கள். பயனுள்ள திட்டங்களில் ஈடுபடும் வலுவான சங்கங்களை உருவாக்குங்கள். வேறெங்கும் கிடைக்காத மதிப்பை நமது ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கு வழங்குவோம்.

சமுதாயத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில் உள்ள ஆண்கள், பெண்கள், அனைத்து வயதினரை அழையுங்கள். அப்படிச் செய்தால், உங்கள் சமுதாயத்தில் நீங்களே உத்வேகம் அளிப்போராகத் திகழ்வீர்கள். அது ரோட்டரி தொடர்ந்து நற்பணிகளில் ஈடுபடவும் உதவும்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்

எழுத்தறிவை மக்களிடையே வளர்ப்போம்

அன்பு ரொட்டேரியன்களே,
அடிப்படைக் கல்வி என்பது பரிணமித்து வளர்ந்து வரும் ஒரு கற்பித்தல் திட்டம். மாணவர்கள் பொறுப்புள்ள உலகளாவிய குடிமகன்களாக உருவாகவும், தங்கள் சமுதாயங்களின் பொருளாதார, சமூக நல்வாழ்விற்கு பங்களிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே அதன் நோக்கம். ரோட்டரி அடிப்படைக் கல்விக்கான காரணத்தையும், கல்வியறிவை உலகம் முழுவதும் பரவலாக்கவும் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

மாணவர்களுக்கு சிறந்தது எது என்பதை பெற்றோர்களும், ஆசிரியர்களும் அறிவார்கள் என்று ரோட்டரி நம்புகிறது. உள்ளூர் சங்கங்கள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தங்கள் உதவிகளை வழங்குவதுடன் கற்றலின் குறிப்பிடத்தக்க உயர்நிலைகளை அவர்கள் அடைய வாய்ப்பளிக்கிறது. தொழில்நுட்பம் சார்ந்த உதவிகள் மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதோடு கற்றல் குறைபாடு உள்ளவர்களின் அத்தியாவசியக் கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது.

எழுத்தறிவு மற்றும் அடிப்படை கல்வி முயற்சிகளுக்கான நிதியுதவி அம்சங்களின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். 2018-2019 நிதியாண்டுக்கான யூனியன் பட்ஜெட்டில் பள்ளிக் கல்வி ரூ.50,000 கோடி பங்கை ஒதுக்கீடாக பெற்றுள்ளது. மாநில அளவில், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, சத்தீஸ்கர், பீகார், மேற்கு வங்கம் ஆகிய ஆறு மாநிலங்களில் எடுக்கப்பட்ட CRY மற்றும் பட்ஜெட் அண்ட் கவர்னன்ஸ் அக்கவுண்ட்டபிலிட்டி மையம் என்கிற சிந்தனைக் களஞ்சியத்தின் சமீபத்திய ஆய்வு மாநிலங்கள் தங்களின் வருடாந்திர நிதிநிலை திட்டத்தில் 14-20 சதவீதத்தை பள்ளிக்கல்விக்கு ஒதுக்குவதாகக் காட்டுகிறது. எழுத்தறிவை வளர்க்க பணம் ஒரு தடையில்லை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

டிஜிட்டல் கல்வியறிவே எதிர்காலம் ஆகும். யுனெஸ்கோ, வோர்ல்ட் ரீடர் மற்றும் நோக்கியா நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய மொபைல் வாசிப்பு குறித்த மிகப்பெரிய கணக்கெடுப்பின் படி, வளரும் நாடுகளில் கல்வியறிவை வளர்ப்பதிலும் மக்களை வாசிக்கத் தூண்டுவதிலும் மொபைல்கள் முக்கியப் பங்காற்றுவது தெரிய வந்துள்ளது. எத்தியோப்பியா, கானா, இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளில் மொபைல்கள் குறிப்பிடத்தகுந்த வகையில் கல்வியறிவுத் திறன்களை மேம்படுத்துகின்றன. மொபைல் வாசிப்பு ஒரு எதிர்கால நிகழ்வு அல்ல, அது இங்கே இப்போது நடந்து கொண்டிருக்கும் நிதர்சனம், என்று அறிக்கை தெரிவிக்கிறது. மொபைல் வாசிப்பு கிட்டத்தட்ட ஏழு பில்லியன் மக்களுக்கு கல்வி வாய்ப்புகளை உருவாக்கலாம்.

வாசிக்க மொபைல் கருவிகள் அணுகுமுறையின் மூலம் சிறுமிகளும் பெண்களுமே அதிகம் பயனடைவதாக ஒரு மகிழ்ச்சியூட்டும் யுனெஸ்கோ ஆய்வு கூறுகிறது. அவர்கள் சிறுவர்கள் மற்றும் ஆண்களை விட ஆறு மடங்கு அதிகம் வாசிக்கிறார்கள்.

பூமியில் வசிக்கும் 700 கோடி மக்களில் 600 கோடி பேருக்கு ஒரு கைபேசி வசதி கைவரப் பெற்றிருப்பதாக ஐக்கிய நாடுகளின் தரவுகள் அறிவிக்கின்றன. உலகம் முழுவதும் உள்ள குறைசேவைகள் பெற்ற சமூகங்களின் கல்வியறிவையும் கற்றலையும் உயர்த்த கைபேசி தொழில்நுட்பம் உதவும். மிக வேகமாக வளர்ந்து வரும் இத்தொழில்நுட்பத்தோடு பொருத்திக்கொள்ள ரோட்டரி தன்னை தயார் செய்துகொள்வதோடு அதனை பயன்படுத்தி அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவை வளர்க்க உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

இது சிந்தனைக்கான விருந்து!

திரு.கோஃபி அன்னான் அவர்களின் வரிகளோடு நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்: கல்வியறிவு அவலத்திலிருந்து நம்பிக்கைக்கு இட்டுச் செல்லும் பாலம்.

உந்துசக்தியாக இருங்கள், உந்துசக்தியாக இருந்து, உலகிலும் நம் ஒவ்வொருவரிடத்திலும் மாற்றம் கொண்டு வரவும் நாம் ஊக்குவிக்கலாம்.

C பாஸ்கர்
டைரக்டர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

District Wise TRF Contributions as on June 2018

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
				India			
2981	83,817	6,577	0	11,000	101,394	688	15.9
2982	137,880	12,357	2,725	0	152,961	697	25.7
3000	336,550	26,050	732,892	176,199	1,271,692	2,432	48.1
3011	438,463	2,506	416,349	22,977	880,295	795	26.2
3012	138,839	7,291	112,590	3,016	261,736	359	10.3
3020	151,992	27,437	110,475	58,728	348,632	680	15.9
3030	46,213	22,924	1,050	0	70,187	94	1.9
3040	43,586	93	42,344	127	86,150	237	11.1
3053	67,768	78	22,129	12,500	102,476	110	3.8
3054	85,841	223	531,342	26,000	643,406	171	2.9
3060	413,859	2,323	542,916	138,568	1,097,666	2,110	55.4
3070	83,465	198	25,794	1,084	110,542	562	19.0
3080	240,826	39,261	30,211	4,386	314,685	765	23.5
3090	4,509	0	2,500	0	7,009	10	0.5
3100	14,929	0	30	0	14,960	0	0
3110	137,151	4,516	127,931	0	269,597	298	7.8
3120	123,885	508	87,073	14,993	226,458	212	7.3
3131	622,032	16,917	455,495	121,399	1,215,843	2,237	43.9
3132	149,356	4,975	7,875	20,000	182,206	452	10.4
3141	898,670	35,464	1,076,054	147,751	2,157,938	2,024	39.7
3142	522,121	18,641	140,192	(1,000)	679,954	1,272	47.1
3150	77,619	12,557	52,932	143,882	286,990	786	21.9
3160	236,178	3,588	0	15,914	255,681	376	16.1
3170	430,554	12,405	153,231	0	596,189	1,515	28.4
3181	130,234	1,091	0	78	131,403	941	31.1
3182	102,863	462	40,126	0	143,451	795	25.3
3190	506,342	118,018	482,937	27,570	1,134,867	180	3.6
3201	480,598	27,738	343,092	5,323	856,750	675	13.2
3202	69,903	18,890	58,824	2,773	150,390	160	3.3
3211	239,790	1,100	0	179,186	420,076	302	7.0
3212	393,152	62,621	32,500	2,000	490,273	1,282	34.7
3231	355,222	78,101	551,431	130,914	1,115,668	121	4.8
3232	615,299	40,788	354,293	38,250	1,048,630	878	23.8
3240	129,775	5,338	0	8,367	143,480	595	20.4
3250	203,573	6,431	63,793	26,000	299,797	365	10.3
3261	114,366	130	66,129	1,000	181,625	197	8.4
3262	93,696	14,925	88,529	71,033	268,182	317	9.6
3291	158,517	26,790	131,036	119,294	435,637	200	5.3
India	17,175	1,000,658	3,313		1,021,145		
India Total	**9,096,606**	**1,659,970**	**6,890,131**	**1,529,313**	**19,176,020**	**25,890**	**19.0**
3220 **Sri Lanka**	164,292	10,652	12,538	4,217	191,699	654	34.3
3271 **Pakistan**	48,115	73,197	11,752	0	133,064	90	6.3
3272 **Pakistan**	37,137	3,301	3,150	3,000	46,588	109	4.0
3281 **Bangladesh**	482,839	15,306	427,921	106,038	1,032,104	855	15.2
3282 **Bangladesh**	136,432	14,023	3,600	3,000	157,055	641	17.0
3292 **Nepal**	171,451	33,566	712,104	0	917,120	735	16.8
South Asia Total	**10,136,872**	**1,810,014**	**8,061,196**	**1,645,568**	**21,653,650**	**28,974**	**18.0**
World Total	**131,229,704**	**38,938,693**	**21,571,652**	**26,087,901**	**217,827,950**		

Source: RI South Asia Office

ART ACROSS GENERATIONS

The german kitchen.
Since 1898.

Head Office and Showroom:

A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037

[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

Häcker
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

AHMEDABAD	BANGALURU	CHENNAI	COIMBATORE	DELHI
9879538977	9740999350	9442081111	9500210555	9313134488

HYDERABAD	INDORE	JAIPUR	KOCHI	LUDHIANA	MUMBAI	MANGALURU	THRISSUR
9700058285	9425803599	9414058718	9895058285	9815048222	9322987229	7899119955	7025991000

RI 2020–21 ஆண்டு தலைவர் பதவிக்கு

சுஷில் குப்தா நியமனம்

தெரசா ஷ்மெட்டிங்

மத்திய மேற்கு தில்லி ரோட்டரி சங்கத்தை (D 3011) சேர்ந்த சுஷில் குமார் குப்தா RI அமைப்பின் 2020–21ம் ஆண்டுக்கான தலைவர் பதவிக்கு RI குழு நியமனம் செய்துள்ளது. போட்டியில்லாவிட்டால், அவர் தலைவராக அக்டோபர் 1ம் தேதி முறைப்படி அறிவிக்கப்படுவார்.

புதிய தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள குப்தா ரோட்டரியின் மனிதாபிமான செயல்பாட்டை அதிகரிக்கப் போவதாகக் கூறினார். அத்துடன் ரோட்டரி அமைப்பில் பல தரப்பட்டவர்களும் இணைவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாகக் கூறினார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில், நாம் எல்லோரும் தனி நபர்களாக ஏராளமான பணிகளைச் செய்ய இயலும். இருந்தாலும் 12 லட்சம் ரோட்டேரியன்கள் இணைந்து செயல்பட்டால், சாதனை புரிவதற்கு அளவே இருக்காது. அதையடுத்து உலகையே மாற்றிவிடலாம் என்றார்.

சுஷில் குப்தா ரோட்டரி அமைப்பில் 1977ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். மாவட்ட ஆளுநர், பயிற்சித் தலைவர், குழு ஆலோசகர், பல்வேறு கமிட்டிகளில் உறுப்பினர், துணைத் தலைவர், தலைவர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டிருக்கிறார். இவரது நீர்மேலாண்மை பங்களிப்புக்காக ஜெய்ப்பூர் IIS பல்கலைக்கழகம் கவுரவ டாக்டர் பட்டத்தை அளித்துள்ளது.

பத்மஸ்ரீ: நாட்டின் உயரிய கவுரவம் மிக்க பத்மஸ்ரீ விருதினை இந்தியக் குடியரசுத் தலைவரின் கரங்களால் இவர் பெற்றிருக்கிறார். சுற்றுலா சேவை மற்றும் சமூகப் பணிகளுக்காக இந்த விருதினை அவர் பெற்றார்.

அது மட்டுமின்றி, சுஷில் குப்தாவின் மனித நேயப் பணிகளையும் கல்வித் திட்டங்களையும் பாராட்டி TRF கவுரவம் மிக்க விருதினை வழங்கியிருக்கிறது. சுஷில் குப்தாவும் அவரது மனைவி வினிதாவும் TRFன் நன்கொடையாளர்களாகத் திகழ்ந்துள்ளனர். இவர்கள் இருவரும் சிறப்பு மிக்க ஆர்ச் க்ளம்ப் சொசைட்டியில் (Arch Klumph Society) உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

ஆசிய ஹோட்டல்கள் (மேற்கு) நிறுவனத்தின் (Asian Hotels (West) Ltd) தலைவர், மேலாண் இயக்குநராக இருக்கும் சுஷில் குமார் குப்தா, மும்பையில் ஹயாத் ரீகன்ஸி (Hyatt Regency), புது தில்லியில் ஏரோசிட்டியில் உள்ள ஜேடபிள்யூ மாரியட் ஹோட்டல் (JW Marriott Hotel) ஆகியவற்றின் உரிமையாளர் ஆவார். இந்திய ஹோட்டல்கள் ரெஸ்டாரண்ட் கூட்டமைப்பின் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். இந்திய சுற்றுலா நிதிக் கழகத்தின் (Tourism Finance Corporation of India Ltd.) இயக்குநர்கள் குழுவில் சுஷில் குமார் குப்தா இடம் பெற்றிருக்கிறார். சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இந்திய அனுபவங்கள் சொசைட்டி (Experience India Society) தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ஹிமாலய சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார் சுஷில் குப்தா.

RI தலைவர் பதவிக்கு அவரது பெயரைப் பரிந்துரை செய்துள்ள குழுவில் இடம் பெற்றுள்ளோர் விவரம்:

இந்தியா: மனோஜ் K. தாஸ் (பரோடா மெட்ரோ), சேகர் மேத்தா (கல்கத்தா-மகாநகர்).

அமெரிக்கா: ப்ராட்ஃபோர்டு R. ஹார்வர்டு (ஆக்லாந்து அப்டவுன், கலிபோர்னியா), மிச்சேல் T ணெக்கல்லோ (டிரென்டன், மிச்சிகன்), கேரன் K. வென்ட்ஸ் (மேரிவில்லி, டென்னிஸி), மிச்சேல் K. மெக்கோவன் (தெற்கு போர்ட் லாண்ட் கேப் எலிசபெத், மைனி), ஜான் C. ஸ்மார்ஜ் (நேபிள்ஸ் ப்ளோரிடா).

பிற நாட்டவர்: கஸுஹிகோ ஒஸாவா, (யோகோஸுகா, கனக்வா, ஜப்பான்). ஜான் G. தோன் (வடக்கு ஹோபர்ட், தாஸ்மானியா, ஆஸ்திரேலியா), கில்லர் E. டுமங்கன் (மகாதி மேற்கு, மகாதி, பிலிப்பின்ஸ்), ஜூயின் பார்க் (சுன்சேன், ஜோன்ரானம், கொரியா), எலியோ சிரினி (மிலனோ டவ்மோ, இத்தாலி), கிட்டியன் M. பெய்ப்பர் (ரமத் ஹஷ்ரன், இஸ்ரேல்), பீர் ஹோயன் (ஆருப், டென்மார்க்), பால் நிஜிஃப் (வீஸ்ப், வேசி ட்ஸ்ரீக் நூர்த், நெதர்லாந்து), சாம் ஒகுட்ஸோடோ (அக்ரா, கானா), ஜோஸ் உபிரஸி சில்வா (ரெசிஃப், பெர்னாம்புகோ, பிரேசில்).

© rotary.org

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

தட்டம்மை, ஜெர்மன் தட்டம்மை, இந்தியாவில் ஒழிப்போம்

ரஷீதா பகத்

எந்த ரோட்டரி அமைப்பின் கூட்டத்திலும் போலியோ எனும் இளம்பிள்ளை வாதம் குறித்து விவாதிக்கப்பட்டால். போலியோ உலகம் முழுவதும் ரோட்டரி சேவைகளின் மூலம் எப்படி ஒழிக்கப்பட்டது, ஒழிக்கப்பட்டு வருகிறது என்பது பற்றிய புள்ளி விவரங்கள் அடுக்கி வைக்கப்படும். ரோட்டரியின் போலியோ பிளஸ் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் 125 நாடுகளில் ஆண்டுதோறும் மூன்றரை லட்சம் குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டு வந்தனர். இன்று இந்த போலியோ பிளஸ் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் உலகம் முழுவதும் 25 லட்சம் குழந்தைகள் போலியா சொட்டு மருந்து போடப்பட்டுள்ளனர்.

ஆனால், தட்டம்மை, ருபல்லா எனப்படும் ஜெர்மன் தட்டம்மை ஆகிய நோய்கள் ஒழிப்புக்கான இந்திய வல்லுநர் ஆலோசனைக் குழுவின் தலைவர் டாக்டர் ஜேகப் ஜான் அண்மையில் தெரிவித்த தகவல் சிந்திக்க வைக்கிறது. தில்லியில் போலியோ பிளஸ் மற்றும் தட்டம்மை-ருபெல்லோ ஒழிப்புத் திட்டம் குறித்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

1980ம் ஆண்டுகளில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்காக அரசு செலவிடும் தொகை தேவையில்லாதது என்று அதிகாரிகள் கருதினர். ஆனால், 2014ம் ஆண்டு நடத்தப்பட்ட விரிவான பொருளாதார ஆய்வில் போலியோ ஒழிப்புக்காகச் செய்த செலவு, மூன்று நாடுகளைத் தவிர. உலக அளவில் மிகப் பெரிய பொருளாதார ஆதாயத்தை அளித்துள்ளது என்பதை நிரூபித்தது.

உலக வங்கியின் ஆய்வுப்படி, போலியோ ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உலக அளவில் பிரசாரத்துக்கும் இதர சேவைகளுக்காகவும் ரோட்டரி உறுப்பினர்கள் செலவிட்ட சொந்தப்

வலதிலிருந்து: PRIP *இராஜேந்திர சாபூ,* INPPC *தலைவர் தீபக் கபூர் மற்றும்* RID C *பாஸ்கர்.*

பணம் ரூ.10,000 கோடி உள்பட இந்திய அரசின் ரூ.14 ஆயிரம் கோடி என மொத்தம் ரூ.24,000 கோடி செலவிடப்பட்டது.

ஆனால், 2014ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் உலகம் முழுவதும் மொத்தம் போலியோ ஒழித்ததன் மூலம் சுமார் 1.71 ட்ரில்லியன் டாலர் ஆதாயம் கிடைத்துள்ளது. 2012ஆம் ஆண்டைக் கணக்காகக் கொண்டு பார்த்தால் கூட போலியோ ஒழிப்பின் மூலம் மொத்தம் ரூ.1,197 லட்சம் கோடி நிதி கிடைத்துள்ளது. இந்தியாவில் போலியோ ஒழிப்புக்காகச் செய்யப்பட்ட முதலீடு பெரிய அளவில் நிதி ஆதாரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும் இந்தியாவின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ரோட்டரி உறுப்பினர்களின் பங்களிப்பு மகத்தானது. நோய் ஒழிப்பு மூலம் இந்தியப் பொருளாதாரம் எப்படி மேம்பட்டுள்ளது என்பதை நாம் ஆராய வேண்டும்.

இந்தியாவில் தட்டம்மை, ருபல்லா, ஆகியவற்றை 2020ம் ஆண்டுக்குள் ஒழிப்பதற்காக வழக்கமான நோய்த்தடுப்பு சேவையை விரிவுபடுத்தும் வகையில் மத்திய அரசின் இந்திர தனுஷ் திட்டத்தில் ரோட்டரி அமைப்பு இணைய முடிவு செய்துள்ளது. இதில் ரோட்டரி உறுப்பினர்கள் மும்முரமாக ஈடுபடவேண்டும்.

தட்டம்மை ஜெர்மன் தட்டம்மை (MR) ஆகியவற்றின் பெயர்களை உங்கள் மொழியில் புரிந்து கொள்ளுங்கள். அப்போது அது குறித்து விழிப்பு ஏற்படுத்த மக்களிடம் எடுத்துரைப்பது எளிதாகிவிடும். பிரசாரத்தின் போது, இந்த நோய்களால் நகர்ப்புறத்தில் ஒரு சத வீதமும் கிராமப்பறத்தில் 3 சதவீதம் குழந்தையும் இறந்துவிடுவது குறித்து உணர்த்துங்கள்.

கருவுறும் தாய்மார்கள் இதனால் பாதிக்கப்பட்டால், அது குழந்தையையும் தாக்கும் அபாயம் இருப்பதை உணர்த்துங்கள். அப்படி பிறக்கும் குழந்தைகள் கண், எலும்பு, மூளை சம்பந்தப்பட்ட நோய்களால் தாக்கப்படும் ஆபத்து இருப்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

இந்த விஷயத்தில் குழந்தை 15 வயது ஆகும் வரையில் நோய்த்தடுப்பு மருந்து பெற்றாக வேண்டும். பொதுவாக 9 மாதம் முதல் 15 வயது வரையில் நோய்த்தடுப்பு மருந்து போடப்பட வேண்டும். 15 வயதுக்கு உள்பட்ட எல்லாப் பெண் குழந்தைகளுக்கும் கட்டாயம் ருபல்லா நோய்த்தடுப்பு மருந்து போட வேண்டும். ஒருவேளை ருபல்லா நோய்க்கிருமி இருந்தாலும் பெண்கள் பிற்காலத்தில் பாதிக்கப்படமாட்டார்கள்.

இந்தியாவில் 1978ம் ஆண்டு நோய்த்தடுப்பு பிரசாரம் அறிமுகப்படுத்தப் பட்டபோது, தட்டம்மை நோய்த் தடுப்பு இடம் பெறவில்லை. காரணம், அதற்கான மருந்தின் விலை அதிகம். இந்தியாவில் அதற்கு உரிமமும் தரப்படவில்லை. 1979ல் D 3230 தமிழகத்தில் நோய்த்தடுப்பைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசிடமிருந்து சிறப்பு அனுமதியைப் பெற்றது.

தட்டம்மை ஜெர்மன் தட்டம்மை (MR) ஆகியவற்றின் பெயர்களை உங்கள் மொழியில் புரிந்து கொள்ளுங்கள்.

Dr ஜேக்ப் ஜான்

அன்றைய முதலமைச்சர் எம்ஜிஆரின் ஆதரவினால் மாநிலத்தில் 50 லட்சம் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து வழங்கப்பட்டது. அந்த மருந்தை கனடா ரோட்டரி அமைப்பினர் அளித்தனர். தமிழக மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலத் துறையின் மேற்கொண்ட இந்தப் பணியால் தமிழகத்தில் ஐந்து ஆண்டுகளில் குழந்தைகளின் இறப்பே தடுக்கப்பட்டுவிட்டது.

இந்த அனுபவத்தை அடுத்து மக்கள் நல்வாழ்வுத் துறை தட்டம்மை தடுப்பு மருந்தைப் பெறு வதற்கான உரிமத்தை 1984ம் ஆண்டு பெற்று, நோய்த்தடுப்பு இயக்கத்தை தொடங்கினோம். பிறகு அத்திட்டம் உலகளாவிய நோய்த்தடுப்பு (Universal Immunisation) என்று பெயரிடப்பட்டது. இவ்வாறு ஜான் பேசினார்.

PRIP ராஜேந்திர சாபூ பேசுகையில், ஒரு காலத்தில் இந்தியாவில் இளம்பிள்ளை வாதத்தை ஒழிக்கவே முடியாது என்று கருதப்பட்டது. இந்தியாவிலேயே போலியோ ஒழிக்கப்பட முடியாவிட்டால், உலகில்



RIPN *சுஷில் குப்தா மற்றும்* RIDE *கமல் சங்க்வி*

வேறெங்கும் ஒழிக்க முடியாது என்ற எண்ணம் இருந்தது. ஆனால், நோய்த் தடுப்பில் வெற்றி கண்டு இந்தியா போலியோ இல்லாத நாடு என்று பிரகடனப்படுத்தப் பட்டபோது, இந்தியா மட்டுமல்ல, ஒட்டுமொத்த ரோட்டரி உலகம், WHO, UNICEF ஆகியவையும் கொண்டாடின என்று குறிப்பிட்டார்.

போலியோ ஒழிப்பு குறித்து விழிப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய நோய்த் தடுப்பு தினம் குறித்து யோசனை தெரிவிக்கப் பட்டது. அதை மத்திய அரசு நிராகரித்துவிட்டது. ஆனால், ரோட்டரி அமைப்பு தானாகவே அந்த விழிப்புதினத்தை அனுசரிக்கத் தொடங்கியது. அதில் சாதனையும் புரிந்தது என்பதெல்லாம் தனி வரலாறு. அதே சமயம் நமது கனவு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேறியிருக்காது. அது மிகப் பெரிய சாதனை. அதற்கான பெருமைக்கு பல வழிகாட்டிகளும் அர்ப்பணிப்புடன் செயல் பட்டவர்களும் உரியவர்கள் என்றார்.

போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் சாதனை உரிய வகையில் அங்கீகரிக்கப் படவில்லை என்று ரோட்டரியினர் கூறிய புகார்களுக்குப் பதிலளித்த அவர், உண்மையைச் சொல்லுங்கள். ரூபல்லா, தட்டம்மை குறித்த விஷயத்தில் நாம் என்ன செய்தோம்? திட்டமிடுதல் என்பது வேறு, செயல்படுவது என்பது வேறு. உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டம் குறித்த உடன்பாட்டில் நாம் ஓராண்டுக்கு முன் கையெழுத்திட்டோம். அதன் பின் ஒரு செயல்பாடும் இல்லை. நாம் தீவிரமாக ஈடுபடவேண்டும். அதன்பிறகு உரிய அங்கீகாரம் பெறலாம் என்றார்.

கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட முன்னாள் ஆளுநர்கள், தட்டம்மை-ருபல்லா நோய்த்தடுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முதலில் அந்த நோய்களின் ஆபத்துகள் குறித்த தகவல் களை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கிய ராஜேந்திர சாபு, போலியோ ஒழிப்பில் ரோட்டரி சங்கம் பயன்படுத்திய முதல் உத்தி இது என்றும் அதையே தொடர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

போலியோ இல்லாத உலகைப் படைப்பதற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கியபோது, அது சுலபமானதாகத் தோன்றியது. குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து செலுத்துவதற்கு 12 கோடி டாலர் தேவைப்பட்டது. அப்போது ரோட்டரி அதில் ஈடுபடத் தொடங்கியது. நமது இலக்கை 2005ல் ஆண்டு எட்டிவிட முடியும் என்றும் கருதினோம்.

அதே சமயம் இந்தியாவில் போலியோ ஒழிக்கப்பட்டதால் மன நிறைவு பெற்றோம்.

போலியோ பிளஸ் திட்டத்தில், போலியோ ஒழிப்புடன், பிளஸ் என்று குறிப்பிடப்படும் போலியோ சார்ந்த செயல் பாடும் இடம்பெற்றுள்ளன.

இடதிலிருந்து: PDGs *நிதின் தஃப்ரியா, க்ராந்தி மேத்தா, பத்ரி ப்ரசாத்,* Dr *ராஜீவ் ப்ரதான்,* TRF *அறங்காவளர் குலாம் வஹன்வதி,* PDG *சஞ்சய் கண்ணா,* INPPC *தலைவர் தீபக் கபூர்,* PRIP *ராஜேந்திர சாபூ* RID C *பாஸ்கர்,* PDGs EK *சகாதேவன், அனில் அகர்வால் மற்றும் உப்கார் சிங் சேத்தி.*

அதுவே ரோட்டரிக்குத் தடையாகிவிட்டது, வழக்கமான நோய்த்தடுப்பு பணிகளில் தொய்வு ஏற்பட்டது. அண்டை நாடுகளில் நோய்க் கிருமிகள் இருப்பதை மறக்கக் கூடாது. நம் நாட்டிலேயே சில இடங்களில் போலியோ நோய் எந்த நேரத்திலும் தலைதூக்கலாம் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் கண்காணிப்போடு இருப்பது ஒரு புறம் இருக்க, புதிய சிந்தனையும் வேண்டும்.

போலியோ பிளஸ் திட்டத்தில், போலியோ ஒழிப்புடன், பிளஸ் என்று குறிப்பிடப்படும் போலியோ சார்ந்த செயல் பாடும் இடம்பெற்றுள்ளன. 1984-85ம் ஆண்டில் ரோட்டரி அமைப்பு WHO உள்ளிட்ட அமைப்புகளை அணுகியபோது, போலியோ மற்றும் இதர தொற்றுநோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் ரோட்டரி ஈடுபடுவது என்றும் பிளஸ் எனப்படும் தொடர் செயல்பாட்டில் அந்த அமைப்புகள் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், 1988ம் ஆண்டு WHO, UNICEF போன்றவை போலியோ ஒழிப்பில் மட்டுமே கவனம் செலுத்தின. இதனால் தொடர் செயல்பாடுகள் கவனிக்கப்படவில்லை. எனினும் அரசாங்கத்தின் நோய்த்தடுப்புத் திட்டங் களில் ரோட்டரி தொடரந்து ஈடுபட்டுவந்தது என்றார்.

இப்போது இந்திய ரொட்டேரியன்களுக்குப் புதிய சவால்கள் தேவை என்று கூறிய சாபூ, இந்த விஷயத்தில் தானும் PRIP கல்யாண் பானர்ஜியும் சர்வதேச போலியோ பிளஸ் கமிட்டி (International PolioPlus Committee), ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியம் (RI Board) மற்றும் தி

ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர்கள் (TRF Trustees) ஆகியோருடன் பேசியிருப்பதாகக் கூறினார். இனி, போலியோ திட்டத்தில் பிளஸ் எனப்படும் தொடர் செயல்பாடுகளை இந்திய ரோட்டரியினர் மேற்கொள்ளலாம். இந்திய அரசின் உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்திலும் ஈடுபடலாம்.

நாம் நிதி எதையும் கேட்கவில்லை என்று அவர்களிடம் கூறிவிட்டோம். நிர்வாகச் செலவில் நமக்கு துணையாக இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். ஆனால், போலியோவுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு எதற்கும் பயன்படுத்த இயலாது என்று கூறிவிட்டனர்.

போலியோ நோய்க் கிருமி மீண்டும் வராமல் இருப்பதில் ரோட்டரியினர் விழிப்போடு செயல்பட வேண்டும். உங்களது மாவட்டங்களிலும் ரோட்டரி சங்கங்களிலும் தட்டம்மை – ரூபல்லா நோய்த்தடுப்புப் பணியில் ஈடுபடுவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். நாம் செயல்பட்டால், போலியோ பிளஸ் திட்டத்தில் தட்டம்மை ருபல்லா ஒழிப்பும் சேர்க்க RI அனுமதித்து அத்திட்டம் உலகின் இதர நாடுகளிலும் பிரதிபலிக்கும் என்றார்.

TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி பேசு கையில், போலியோவை முழுமையாக ஒழிப்பது ரோட்டரியின் தலையாய குறிக்கோள். எனவே, பம்பரம்போல் சுழன்று, முழு மனத்துடன் பணியாற்றவேண்டும். முடிக்க வேண்டுமானால், முழுமையாக முடித்தாக வேண்டும். 100 சதவீதம் இலக்கை எட்டியாக வேண்டும் என்றார்.

TRFக்கு மிகப் பெரிய தொகையான ரூ.100 கோடியை வாரி வழங்கிய பெங்களூர் ஆர்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தின் (RC Bangalore Orchards) தலைவர் D ரவிசங்கருக்கு அவர் நன்றி கூறினார். இந்த பெரிய நன்கொடையைப் பெறுவதில் ஈடுபட்ட D 3190 மாவட்ட ஆளுநருமான சுரேஷ் ஹரியைப் பாராட்டினார்.

> *உங்களது மாவட்டங்களிலும் ரோட்டரி சங்கங்களிலும் தட்டம்மை - ருபல்லா நோய்த்தடுப்புப் பணியில் ஈடுபடுவதற்குத் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.*
>
> Past RI President
> இராஜேந்திர சாபூ

நம் நாட்டில் ஒவ்வொரு மாவட்ட ஆளுநரின் இலக்கையும் இது மாற்றிவிட்டது. நான் சார்ந்த மாவட்டத்தின் ஆளுநர் சஷி சர்மா 70 லட்சம் டாலர் இலக்கை நிர்ணயித்துள்ளார். மேலும் குவிய வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆளுநர்களுக்கும் இது பொருந்தும். இந்த விஷயத்தில் இந்தியாவில் போலியோ ஒழித்ததைப் போல் தட்டம்மை – ருபல்லா நோய்களையும் ஒழிப்பதில் ரோட்டரியினர் அனைவரும் இதே அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் வஹன்வதி கேட்டுக் கொண்டார்.

முன்னதாகப் பேசிய PRID அசோக் மகாஜன், ஒரு குழந்தைக்கு தட்டம்மை – ருபல்லா நோய்த்தடுப்பு மருந்து செலுத்துவதற்கு ரூ.140க்கு மேல் ஆகாது. இது சிரமமானது என்பதை அறியும் நாம் இது சாத்தியமானது என்பதையும் புரிந்துகொண்டுள்ளோம். போலியோ ஒழிப்பில் அனுபவம் கண்டுவிட்டோம். முப்பது ஆண்டுகளாகப் போராடினோம். ஏராளமான தடைகளும் எதிர்ப்புகளும் இருந்தன. ஆனால், எல்லாம் தீர்க்கப்பட்டன. அதே உற்சாகத்துடன் பணியாற்றினால், தட்டம்மை-ருபல்லாவையும் ஒழித்துவிடலாம். இதற்கு ரூ.5 கோடி தேவைப்படுகிறது.

போலியோ ஒழிப்பில் நமக்கு TRF துணைபுரிந்தது. ஆனால், இது நமது திட்டம். நிதியை நாம்தான் திரட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வோரு ரோட்டரி

தட்டம்மை - சின்ன எய்ட்ஸ் நோய்!

இடதிலிருந்து: RID Cபாஸ்கர், PRIP இராஜேந்திர சாபூ மற்றும் Dr ஜேகப் ஜான்.

தட்டம்மை - ருபல்லா நோய் சிறிய அளவிலான எய்ட்ஸ் நோய் போன்றது என்று தட்டம்மை - ருபல்லா ஒழிப்புக்கான இந்திய வல்லுநர் ஆலோசனைக் குழுவின் தலைவரும் கிருமித் தொற்றுத் தடுப்பு மருத்துவருமான டாக்டர் ஜேகப் ஜான் தெரிவித்தார்.

தில்லியில் நடைபெற்ற போலியோ பிளஸ் மற்றும் தட்டம்மை-ருபல்லா ஒழிப்புத் திட்டம் குறித்த கூட்டத்தில் அவர் பேசியதாவது:

கடந்த காலத்தில் போலியோவுக்கு ஒரு குழந்தை ஆளானால், ஒரு குழந்தை தட்டம்மையாலும் பாதிக்கப்படும். இதனால், அவர்கள் மூலம் எதையும் தெரிந்து கொள்ள முடியாது.

தட்டம்மையால் நிறைய மரணங்கள் நேர்ந்துள்ளன. ஆனால், அவை தட்டம்மை தொடர்பால் நேர்ந்தது என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை. காரணம், தட்டம்மை வந்தால், வயிற்றுப் போக்கு, வாந்தி பேதி, கடும் ஜுரம் உள்ளிட்ட ஏராளமான பிரச்சினைகளும் உடனே ஏற்படும். அவை குழந்தைகளை ஓராண்டில் கொன்றுவிடுகின்றன.

> இந்நோய் வந்தால், நோய்த்தடுப்புச் சக்தி போய்விடுகிறது.

தற்போது இந்த நோய் சிறிய அளவிலான எய்ட்ஸ் போன்றது என்பதை இப்போது அறிந்து கொண்டுள்ளோம். இந்நோய் வந்தால், நோய்த்தடுப்புச் சக்தி போய்விடுகிறது. 90 சதவீதம் குணமடைய 3 மாதம் ஆகிறது. 99.9 சதவீதம் குணமடைய 3 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இந்தக் கால இடைவெளியில் பல குழந்தைகள் இறந்து விடுகின்றன. இதுவரை தெரிந்தது கொஞ்சம் தான். இது சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் கேடானது என்று ஏன் கூறுகிறேன் என்றால், இதனால் ஏற்படும் நீண்டகாலப் பொருளாதார இழப்பை இன்னும் வல்லுநர்கள் கணிக்கவில்லை.

இந்த நோய் எய்ட்ஸ் போலக் கொடியது. இதிலிருந்து விடுபட ஒரே வழி இதற்கான கிருமியை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதே.

ருபல்லாவைப் பொறுத்த வரையில் இந்தக் கிருமியை ஒழிக்காவிட்டால், கருவுற்ற தாயிடம் தொற்றும் அபாயம் உள்ளது. முழுமையாக ஒழிக்காவிட்டால், இது மீண்டும் பரவும் ஆபத்து உள்ளது. எதாவது மெத்தனம் காட்டினாலோ அரைகுறையாகச் செயல்பட்டாலோ, குழந்தைகளுக்குப் பிறவியிலேயே ருபல்லா தாக்கும் ஆபத்து ஏற்படும். அதனால்தான் இந்திய அரசு போதிய மருந்து கிடைப்பதை உறுதிசெய்வதில் மிக மிக கவனமாக இருக்கிறது. 100 சதவீத இலக்கை எட்டுவதற்குப் பாடுபடுகிறது. நோய்த்தடுப்பு மருந்து போடப்படாமல் 15 வயதுக்குள் எந்தக் குழந்தையும் இருக்கக் கூடாது. எதிர்காலத்தில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு தருவதற்கு இந்தக் கிருமியை ஒட்டுமொத்தமாக அழித்து விடவேண்டும் என்றார் ஜேகப் ஜான்.

மாவட்டமும் தலா ரூ.12 லட்சம் கொடுத்தால் போதும் இலக்கை எட்டிவிடலாம். என் உதவி தேவைப்பட்டால் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் பேசி உதவி பெறத் தயாராக இருக்கிறேன். போலியோ ஒழிப்பின்போது கண்டதைப் போல் தடையோ, தயக்கமோ இருந்தால், மதத் தலைவர்களுடன் பேசலாம் என்றார்.

Wins பள்ளிகளில் கை கழுவும் முறை மற்றும் கழிவறை வசதி பற்றிய ஒரு அமர்வில் பேசிய RI தலைவராக நியமனமாகவிருக்கும் சுஷில் குப்தா, எல்லா மாநிலத் தலைவர்களையும் பள்ளிகளில் குழந்தைகளிடையே சுத்தம், சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும்படி வலியுறுத்தினார். குழந்தைகளிடேயே இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தினால், அவர்கள் தம் குடும்பத்தினரிடமும் சமூகத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்த முன்னோடிகளாக திகழ்வார்கள் என்று அவர் கூறினார்.

மேலும், இளம் பெண்களிடையே மாதவிடாய் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர் ரோட்டரியினரிடம் வேண்டுகோள் விடுத்தார். இவ்வாறு செய்வதால் நாம் பல நோய்களிலிருந்து நம் சமூகத்தை காக்கலாம் என்று கூறினார்.

TRF *அறங்காவலர் குலாம் வஹனவதியுடன்* PRID Y P *தாஸ்.*

கூட்டத்தில் பங்கேற்ற INPPC தலைவர் தீபக் கபூர், உலகம் முழுவதும் போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்படும் வரையில் இந்திய ரோட்டரியினருக்கு ஓய்வு கூடாது. இந்தியாவிலிருந்து ஒழிந்துவிட்டது. ஆனால், உலகில் இருக்கத்தான் செய்கிறது. போலியோ நோய்த்தடுப்பு நேற்றைக்கு எந்த அளவுக்குத் தேவையாக இருந்ததோ அதே அளவு இப்போதும் தேவைப்படுகிறது என்றார்.

இவ்வளவுக்கும் பிறகு 13 பேருக்கு போலியோ நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மத்திய அரசின் நோய்த் தடுப்புத் திட்டத்திற்காக நமது போலியோ ஒழிப்பு நடவடிக்கையை எப்படிப் பயன்படுத்துவது என்ற உத்தியை வகுப்பதற்காகவே தில்லியில் இந்த சந்திப்புக் நடைபெற்றது என்றும் அவர் கூறினார்.

PRID *அஷோக் மகாஜன்.*

போலியோ நோய்த்தடுப்பு நேற்றைக்கு எந்த அளவுக்குத் தேவையாக இருந்ததோ அதே அளவு இப்போதும் தேவைப்படுகிறது என்றார்.

INPPC தலைவர் தீபக் கபூர்

இந்தியாவில் போலியோ ஒழிப்புக்கான முகாம்கள் செயல்பட்டதை நினைவு கூர்ந்த தீபக் கபூர், அன்றைய தினம் நாடு முழுதும் 7 லட்சத்துக்கு மேற்பட்ட போலியோ தடுப்பு மையங்கள் (polio booths) செயல்பட்டன. 25 லட்சம் நோய்த்தடுப்புப் பணியா ளர்கள் சேவைபுரிந்தனர். 22.5 கோடி குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து செலுத்தப்பட்டது. இது ஆண்டுதோறும் தேசிய நோய்த்தடுப்பு தினத்தன்று மேற்கொள்ளப்படுகிறது. போலியோவுக்கு இப்போதே முற்றுப்புள்ளி (End Polio Now) என்ற பிரசாரத்தின்போது, இந்திய

ரொட்டேரியன்கள் தங்களது ஆற்றலையும் திறமையையும் நிரூபித்துவிட்டனர். அதனால், தட்டம்மை - ருபல்லா உள்ளிட்ட நோய்களை ஒழிப்பதன் மீதும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஒரு தனி நபர் ரூ.100 கோடியை TRF அளித்தால், நாம் எல்லோரும் இணைந்தால் எவ்வளவு செய்ய முடியும் என்று நினைத்துப் பாருங்கள் என்றார்.

ரொட்டேரியன்கள் இன்டராக்ட் கிளப்களை ஈடுபடுத்தி, பள்ளிகளில் தட்டம்மை-ருபல்லா தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்தச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர், தடைகள் வந்தால், அதைத் தவிர்க்க PRID மகாஜன், உலேமாக்கள் ஆகியோரின் பணிகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.

PRID யஷ்பால்தாஸ் பேசு கையில், போலியோ ஒழிப்பில் கிடைத்த அனுபவத்தையும் உருவாக்கிய வடிவமைப்பையும் கொண்டு குழந்தைகளுக்கு தட்டம்மை, ருபல்லா, காசநோய் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மத்திய சுகாதார அமைச்ச கத்தில் தட்டம்மை-ருபல்லா ஒழிப்பு திட்டத்தைச் சேர்ந்த டாக்டர் பிரதீப் ஹால்தார் பேசுகையில், தட்டம்மை-ருபல்லா உள்ளிட்ட தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி செலுத்துவது மிக மிக முக்கியத்துவம் பெறுகிறது. போலியோ சொட்டு மருந்தினை நாடு முழுதும் 17கோடி குழந்தை களுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. இப்போது, தட்டம்மை-ருபல்லா ஒழிப்புக்கு 40 கோடி குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து தரவேண்டியுள்ளது. போலியோ சொட்டு மருந்தைப் போல் எளிதில் செலுத்த இயலாது. ஊசியால்தான் செலுத்த வேண்டும். எனவே, பணி சிறிது சிரமமானது என்று குறிப்பிட்டார்.

இந்த நோய்த்தடுப்பு பணியை மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், மூலமாக செயல்படுத்தவேண்டும். இதை வேறு வகையில்தான் செயல்படுத்த வேண்டும். தட்டம்மை-ருபல்லா நோய்த்தடுப்பு மருந்தை முதலில் பள்ளிகளில் சென்று, சிறுவர்களுக்கு செலுத்த வேண்டும். காரணம், மொத்த மக்கள் தொகையில் அவர்கள் 70 சத வீதம் பேர். அதையடுத்து இதர பிரிவினருக்கு நோய்த்தடுப்பு மருந்து அளிக்க வேண்டும். சமூக வலைதளங்களில் இது குறித்து தவறான கருத்துகள், வதந்திகள் பரப்பப்படும் ஆபத்து இருப்பதால், 100 சதவீத இலக்கை அடைவது எளிதல்ல. போலியோ ஒழிப்பில் கூட இதுபோன்ற சவால்களை மற்ற ஊடகங்களின் மூலம் எதிர்கொண்டோம். ஆனால், இப்போது வாட்ஸ் அப்போன்ற சமூக வலைதளங்கள் மூலம் பல தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. பள்ளிகளில் செயல்படுத்தும் போது, ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் தேவை. அரசுப் பள்ளிகளைவிட தனியார் பள்ளிகளில், குறிப்பாக சமய நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகள், மதராஸாக்களில் அமல்படுத்துவதில் சவால்கள் உள்ளன என்று கூறினார்.

தட்டம்மை-ருபல்லா நோய்த்தடுப்பு மருந்தை முதலில் பள்ளிகளில் சென்று, சிறுவர்களுக்கு செலுத்த வேண்டும். காரணம், மொத்த மக்கள் தொகையில் அவர்கள் 70 சத வீதம் பேர்.

முதல் கட்ட தட்டம்மை-ருபல்லா ஒழிப்புத் திட்டத்தின் முதல் கட்டத்தில் அமிதாப்பச்சன் போன்ற பிரபலங்களை வைத்துச் செயல்படுத்தத் தவறிவிட்டோம். பல மாநிலங்களில் இது ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. உத்தரப்பிரதேசம், பிஹார், மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய பெரிய மாநிலங்களில் வரும் நவம்பரில் இப்பணி தொடங்கும்.

இத்திட்டம் வெற்றி பெற மிகச் சிறந்த பிரசாரமும் கூட்டும் தேவைப்படுகிறது என்றார் டாக்டர் பிரதீப் ஹால்தார்.

போலியோ ஒழிப்பில் சிறந்த பங்களிப்புக்கான விருதுகள்

PRIP *இராஜேந்திர சாபூ,* RID C *பாஸ்கர்,* TRF *அறங்காவலர் குலாம் வஹனவதி மற்றும்* INPPC *தலைவர் தீபக் கபூருடன் இந்த வருட மாவட்ட ஆளுநர்கள்.*

PRID யஷ்பால் தாஸ், மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் ராஜீவ் பிரதான், அனில் அகர்வால் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பேசிய WHOவின் நோய்த்தடுப்பு தொழில்நுட்ப அலுவலர் (Technical officer) டாக்டர் டானிஷ் அகமது, இந்தியாவின் சில பகுதிகளில் காணாமல் போன குழந்தைகள் குறித்த தகவல் குறித்தும் நகரங்களில் நிதானமாகச் செயல்படுத்தப்படுவது குறித்தும் கவலை தெரிவித்தார்.

போலியோ இல்லாத இந்தியா உருவாவதில் ரோட்டரியினரின் பங்கைப் பாராட்டிய அவர், உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டா மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு மாவட்ட நோய்த்தடுப்பு கூட்டங்களில் ஈடுபடுத்தியதற்குப் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அதைப் போல் 2005-10ம் ஆண்டில் மொராதாபாதில் போலியோ நோய்த்தடுப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் சிரமம் இருந்தது. உலேமாக்களின் உதவியுடன் முன்முயற்சிகளில் ஈடுபட்டோம். ரோட்டரி உலேமா கமிட்டி இதில் ஈடுபட்டு மக்களுக்கு இது குறித்து எடுத்துக் கூறி செயல்பட்டது பாராட்டத் தக்கது. போலியோ ஒழிப்பில் ஈடுபட்டதைப் போல வேறு எதிலும் வெவ்வேறு சமயத்தினர் இணைந்து செயல்பட்டதாகத் தெரியவில்லை என்றார் அவர்.

தட்டம்மை-ருபல்லா நோய்த்தடுப்புக்கான திட்டம் தற்போது ஹரியாணாவில் மும்முரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கே 90 சதவீதம் பணிகள் பூர்த்தியாகிவிட்டன. மேவாத் போன்ற சில இடங்களில் சில தடங்கல்கள் இருந்தாலும் அவர்களிடமும் உரிய வகையில் விவரித்து, பிற மாநிலங்களைப் போல் பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்றார் டானிஷ் அகமது.

தட்டம்மை-ருபல்லா நோய்த்தடுப்புக்கான திட்டம் தற்போது ஹரியாணாவில் மும்முரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கே 90 சதவீதம் பணிகள் பூர்த்தியாகிவிட்டன.

இந்தத் திட்டத்திலும் 100 சதவீத இலக்கை நாம் அடைந்தாக வேண்டும் என்று கூறிய முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநர் ராஜீவ் பிரதான், உங்களுக்குத் தரப்பட்ட கையேடுகளைப் பகவத் கீதை, பைபிள் போலக் கருதுங்கள் என்று கேட்டுக் கொண்டார். சில இடங்களில் பலருக்கு நோய்த்தடுப்பு மருந்துகள் செலுத்தப்படவில்லை என்றும் ஒரு சில இடங்களில் ஓரிரு டோஸ் மட்டுமே செலுத்தப்படுகிறது. இதுவும் ஒரு சவாலாக இருக்கிறது என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ஹேமந்த்குமார் பன்ஸ்வால்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

போலியோ ஒழிப்பில் மெத்தனம் வேண்டாம்:

RID C பாஸ்கர்

ரஷீதா பகத்

தில்லியில் கடந்த மாதம் நடைபெற்ற தேசிய போலியோ பிளஸ் மற்றும் தட்டம்மை-ருபல்லா விழிப்பு குறித்த கூட்டத்தில் பேசிய RID பாஸ்கர், இந்தியாவில் நாற்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள போலியோ ஒழிப்பு இயக்கத்தினால் கடந்த ஆண்டுகளில் இந்தியாவின் சீரான வளர்ச்சியில் பங்களித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இப்போது இக்கட்டான சூழ்நிலையை இந்தியா கடந்துவிட்டது. இரும்பு உருக்கு உற்பத்தியில் நாம் உலகில் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். தற்போது

RID C *பாஸ்கர்*

கார் வைத்திருப்பது அவசியமாகிவிட்டது. உலக வங்கியிடமிருந்து கடந்த மூன்றாண்டுகளாக ஒரு சல்லிக் காசு கூட கடன் வாங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நம் நாட்டின் சுகாதார கட்டமைப்பில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. போலியோ ஒழிந்துவிட்டது. அதற்கு ரோட்டரிக்குத்தான் நன்றி கூறவேண்டும். இந்தியாவைப் பற்றி மற்ற நாடுகள் சந்தேகப் பார்வை கொண்டிருந்த நேரத்தில் இதையெல்லாம் சாதித்திருக்கிறோம் என்றார்.

கூட்டத்தில் ரோட்டரியின் மூத்த உறுப்பினர்கள், மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து பேசிய அவர், போலியோ விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அண்டை நாடுகளான பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகியவற்றில் போலியோ இன்னும் ஒழிக்கப்படவில்லை. போலியோ கிருமி எல்லை கடந்து ஊடுருவும் அபாயம் உள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் பாஸ்கர் மேலும் பேசியதாவது:

உலக அளவில் போலியோ ஒழிப்பு பிரசாராம் 1998ம் ஆண்டு தொடங்கியபோது, 125 நாடுகளில் ஆண்டுதோறும் மொத்தம் மூன்றரை லட்சம் பேருக்கு போலியோ பாதிப்பு இருப்பு பதிவானது. அதையடுத்து, ரோட்டரி அமைப்பு, யுனிசெப் (UNICEF), உலக சுகாதார நிறுவனம் (WHO), பில் & மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றுடன் பல்வேறு நாடுகளின் அரசாங்கங்களும் இணைந்து ஆண்டுதோறும் 25 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நாம் தீவிரமாகச் செயல்படுத்தியதால்தான்

என் வாழ்க்கையில் உத்வேகமான நாள்

தில்லியில் போலியோ பிளஸ் குறித்த கூட்டத்தில் பேசிய RID C பாஸ்கர், TRF நூற்றாண்டு விழாவில் இந்திய ரோட்டரி அமைப்பினர் மொத்தம் 2 கோடி டாலர் நன்கொடை அளித்துள்ளனர். அதைப் போல் 2017-18ம் ஆண்டில் 1.917 கோடி டாலர் அளித்தனர். இதன் மூலம் TRFக்கு நன்கொடை அளிப்பதில் இந்தியா தொடர்ந்து இரண்டாவது இடத்தை வகித்து வருகிறது என்றார்.

அவர் மேலும் பேசியதாவது:

ரோட்டரி ஆண்டின் முதல் நாளான ஜூலை 1ம் தேதி நடந்த நிகழ்வை மறக்க முடியாது. அன்று RI போர்டு கூட்டத்தில் இருந்தேன். RI 3190 மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர் ஆஷா பிரசன்னக்குமாரிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது. அதில், ரொட்டேரியன் D ரவிசங்கர் ரூ.100 கோடி நன்கொடை அளிக்கிறார் என்று தகவல் இருந்தது. ஏதோ எழுத்துப் பிழையாக ரூ.1 கோடி என்பதற்குப் பதில் ரூ.100 கோடி என்று அனுப்பியிருப்பார் என்று நினைத்துக் கொண்டு, கூட்டத்திலிருந்து வெளியே சென்று, மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரியை அழைத்து, ஆஷாவிடமிருந்து வந்த செய்தி சரியா என்று கேட்டேன். அவரும், “ஆமாம், அது ரூ.100 கோடிதான்!” என்று கூறியதும் என்னாலே நம்பவே முடியவில்லை.

அடுத்து, ரோட்டரி போர்டு கூட்டத்தின் மதிய உணவின்போது, RI தலைவர் பார்ரி ரஸ்ஸினிடம் அருகில் அமர்ந்தபடி, “இந்திய ரொட்டேரியன் TRFக்கு 1.47 கோடி டாலர் (ரூ.100 கோடி) அளிக்கிறார்” என்றேன். சாப்பிடுவதை சிறிதுநேரம் நிறுத்திவிட்டு அவர், “என்ன சொல்கிறீர்கள் பாஸ்கர்?” என்று இன்ப அதிர்ச்சியுடன் கேட்டார். மறுபடியும் கூறிவிட்டு, சுரேஷ் ஹரியை போனில் அழைத்து, ரஸ்ஸினிடம் கொடுத்தேன். அதை உறுதிப்படுத்திய பிறகு, என்னிடம், “இது அற்புதம் பாஸ்கர். பில் கேட்ஸுக்கு அடுத்து ஓர் இந்தியர் இப்படி நன்கொடை அளித்துள்ளார்” என்று உணர்ச்சி மேலிடக் கூறினார்.

மதியஉணவு முடிந்ததும், போர்டு கூட்டத்தில் என்னை (பாஸ்கர்) ரஸ்ஸின் அழைத்து அறிவிக்கும்படி கூறினார். ஓர் இந்தியர் உலகின் இரண்டாவது மிகப் பெரிய நன்கொடையாளராக 1.47 கோடி டாலர் அளிக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

அது என் வாழ்வில் பெருமைக் குரிய நாளாகத் திகழ்கிறது. இந்தியா மாற்றத்தை நிகழ்த்தியிருக்கிறது. இந்த நன்கொடையை அளிப்பதன் மூலம் ரோட்டரி இன்டர்நேஷனலின் பார்வையில் நாம் தொடர்ந்து உயர்ந்த நிலையைப் பெறுகிறோம்.

இவ்வாறு பாஸ்கர் பேசினார். முத்தாய்ப்பாக, அவர், ஒவ்வொரு ரோட்டரி தலைவர்களையும் அழைத்து, உங்கள் மீதுள்ள நம்பிக்கையைத் தயவு செய்து நிரூபியுங்கள். உங்கள் மீது பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதில் மெத்தனம் காட்ட வேண்டாம். போலியோ மீண்டும் நம் நாட்டில் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இன்றைக்கு ஒரு கோடியே 60 லட்சம் குழந்தைகள் தடையின்றி நடந்து செல்ல முடிகிறது. இல்லையென்றால், அவர்கள் முடங்கிப் போயிருப்பார்கள். மேலும், 170 கோடி டாலர் திரட்டுவதாக உறுதி பூண்டது. அத்துடன் லட்சக்கணக்கான சேவகர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதன் விளைவாக போலியோ பாதிப்பு குறைந்தது. நைஜீரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2016ம் ஆண்டு 37 பேர், 2017ல் 22 பேர் எனக் குறைந்து, கடந்த ஜூலை வரையில் 13 பேராகக் குறைந்துள்ளது. இதன் மூலம் 99.9 சதவீதம் போலியோவை ஒழித்துவிட்டோம் என்று தெரிகிறது. இருந்தாலும் 100 சதவீதம் எட்டினால் தான் முழு வெற்றி என்று சொல்லலாம்.

இந்தியாவில் போலியோ ஒழிந்துவிட்டது என்று திருப்திப்பட்டு நின்றுவிட்டாலும் ஆபத்து காத்திருக்கிறது. சுத்தமாகத் துடைத்தெறியாவிட்டால், இன்னும் 10 ஆண்டுகளில் ஆண்டுதோறும் புதிதாக இரண்டு லட்சம் பேர் போலியாவுக்கு ஆளாகும் அபாயம் இருக்கிறது. உலகமே போலியோ இல்லாத நிலையை எட்டினால் ஒழிய ரோட்டரியால் ஓய்வு எடுக்க முடியாது. அதனால்தான் இந்தியாவில் போலியோ ஒழிந்து அதற்கான சான்றிதழைப் பெற மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.

போலியோ இல்லாத உலகம் அமையும் வரையில் அது அச்சுறுத்தலாகத்தான் இருக்கும். அதனால்தான், கடந்த ஆண்டு அட்லாண்டாவில் நடைபெற்ற மாநாட்டில் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் 5 கோடி டாலர் (ரூ.350 கோடி) அளிப்பது என்று ரோட்டரி இன்டர்நேஷனல் உறுதி பூண்டது. நாம் அளிக்கும் ஒவ்வொரு டாலருக்கும் ஈடாக பில் & மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை இரு டாலர்

அளிக்கிறது. எனவே, போலியோ ஒழிப்புக்காக மொத்தம் 45 கோடி டாலர் திரட்டப்படுகிறது. இது நோய்த்தடுப்பு மருந்துக்காக மட்டுமல்ல, போலியோ கிருமி பரவும் ஆபத்து உள்ளது குறித்த தகவல்களைத் திரட்டி நடவடிக்கை எடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், நோய்த்தடுப்பு மருந்து போடுவதில் பெண்களையும், விழிப்புணர்வு பிரசாரத்தில் மதத் தலைவர்களையும் ஈடுபடுத்துவதற்கான புதிய வழிகளை ரோட்டரி காணவேண்டும். இடமின்றி குடிபெயரும் மக்களுக்கு நோய்த்தடுப்பு அளிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். கிருமிகள் ஆபத்து உள்ளதா என குடிநீர் விநியோகம், கழிவுநீர் அமைப்பு ஆகியவற்றிலும் கவனம் தேவை.

அதே சமயம் போலியோவை ஒழிப்பதில், தடுப்பு மருந்துதான் முதல் மிகப் பெரிய ஆயுதம் என்பதை மறந்துவிட வேண்டாம். போலியோ ஒழிப்பில் கிடைத்த இந்த அனுபவம்தான் தட்டம்மை-ருபல்லா, காலரா ஆகியவற்றை ஒழிப்பதற்கான கருவியாக அமைந்துள்ளது.

உங்களது குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் போலியோ இல்லாத உலகில் வாழ்கிறார்கள் என்பதை உறுதி செய்ய ஆண்டுதோறும் 5 கோடி டாலர் என மூன்று ஆண்டுகளுக்கு உலகளாவிய நிதி திரட்டும் இலக்கை எட்டியாக வேண்டும்.

அரசு நிதியைப் பெறுவதற்காக சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் வலியுறுத்தி கடிதம் எழுத வேண்டும். 120 கோடி டாலர் திரட்டுவது என்று அட்லாண்டா மாநாட்டில் உறுதி எடுத்துக் கொண்டதை நினைவில் கொள்ள வேண்டும். அது உறுதி மட்டும்தான். அதன் தொடர் பணியில் ஈடுபட வேண்டும். நமது ரோட்டரி சங்கங்களில் போலியோ ஒழிப்பு குறித்து சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.■

TRF தலைவரிடமிருந்து...

போலியோ இல்லாத உலகிற்கு போராடுவோம்

நான் 1987-88ம் ஆண்டில் மாவட்டஆளுநராக இருந்தேன். அந்த ஆண்டுதான் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவராக சார்லஸ் C கெல்லர் இருந்தார்.

மாவட்ட ஆளுநர் என்ற முறையில் பிலடல்பியாவில் 1988ம் ஆண்டு நடைபெற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் பங்கேற்றேன். அப்போது, உலகில் 125 நாடுகளில் மூன்றரை லட்சம் பேருக்கு போலியோ பாதிப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

போலியோ ஒழிப்புக்காக 12 கோடி டாலர் திரட்டுவது என்ற இலக்கை விஞ்சி 21,93,50,449 டாலர் திரட்டிவிட்டோம். பிறகு, வந்த தொகையையும் சேர்த்து இறுதிக் கணக்கு பார்த்தபோது, அத்தொகை 24.70 கோடி டாலர் எனத் தெரியவந்தது. ரோட்டரியின் பலத்தையும் மக்கள் நல்வாழ்வுக்கு வரும் சவால்களைச் சமாளிக்க முடியும் என்பதையும் உலகுக்கு இதன் மூலம் தெரிவித்துவிட்டோம்.

கடந்த 30 ஆண்டுகளில் நமது கூட்டாளிகளான் உலக சுகாதார நிறுவனம் (WHO), அமெரிக்காவில் உள்ள நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான மையங்கள் (U.S. Centers for Disease Control and Prevention), யுனிசெப் (UNICEF), பில் & மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றின் துணையோடு மேலும் நிதி திரட்டியுள்ளோம். தேசிய நோய்த்தடுப்பு தினங்களை கடைபிடிக்கிறோம். உலக நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறோம். உலகில் குழந்தைகளுக்கு போலியோ இல்லாத நிலையை உருவாக்குவதே நமது இலக்கு, அதற்காகத் தொடர்ந்து பாடுபட்டும் வருகிறோம். 2017ம் ஆண்டு உலகம் முழுவதும் 22 பேருக்குத்தான் போலியோ நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நாம் வியக்கத்தக்க பணிகளை செய்துள்ளோம். அதே சமயம் பணி இன்னும் ஓய்ந்துவிடவில்லை என்பதையும் அறிவோம்.

நன்கொடையைத் திரட்ட முயலுங்கள். இப்பணியில் உங்களது ரோட்டரி சங்கம் தொடர்ந்து ஈடுபாடு கொள்ள வேண்டும்.

உலகளாவிய போலியோ ஒழிப்பு முன்முயற்சி (Global Polio Eradication Initiative) தொடங்கி அக்டோபர் 24ம் தேதி முப்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. அமெரிக்கா, பிலடல்பியாவில் நடைபெறும் ஆறாவது ஆண்டு உலக போலியோ ஒழிப்பு தின நிகழ்ச்சியின்போது, இதற்கான விழா கொண்டாடப்படும். அங்குதான் இந்த போலியோ ஒழிப்பு இயக்கமும் தொடங்கப்பட்டது.

இந்நிலையில் உலக போலியோ ஒழிப்பு தின நிதி திரட்டுவதற்கான நிகழ்ச்சியை நடத்துங்கள். அது குறித்த விவரத்தையும் *www:enpolio.org* என்ற இணையதளத்தில் பதிவேற்றுங்கள். மேலும் விவரங்களுக்கும்: *www.enpolio.org*

ரான் D பர்டன், ஃபவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்

ஆசிரியர்களுக்கு ஓர் சிறப்பு பயிற்சி

V முத்துக்குமரன்

ரோட்டரியின் TEACH திட்டத்திற்கு ஒரு முக்கிய மேம்பாட்டை அளிக்கும் வகையில் RC கட்கி, D 3131, ஒரு சிறந்த பயிற்சி திட்டத்தைக் கையில் எடுத்துள்ளது. 21ஆம் நூற்றாண்டின் திறன்களின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வகுப்பறைக் கல்வியை உருவாக்க தனியார் பள்ளிகளிலிருந்தும், மகாராஷ்ட்ரா மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் (MSCERT) இணைக்கப்பெற்ற மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIETs) ஆகியவற்றிலிருந்தும் இதுவரை 140 ஆசிரியர்களுக்கு அத்திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

NGO சாக்ரட்டீஸ் அறக்கட்டளை யுடன் இணைந்து ஆசிரியர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் புதுமையான கற்பிக்கும் கலை மூலம் வகுப்பறை கற்றலில் அடிப்படை மாற்றத்தை வழிநடத்திச் செல்ல பயிற்சியளிக்கப் பட்டது, என்றார் திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர் சாருமாத்துர்.

ஒன்பது பள்ளிகளைச் சேர்ந்த 20 சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்ட முதல் குழு 40-மணி நேர பயிற்சியில் கலந்துகொண்டனர், இது அக்டோபர் 2014ல் தொடங்கி ஐந்து மாதங்கள் வரை நடந்தது. பின்னர் இவர்கள் பின்தங்கிய பகுதிகளில் இரண்டு பள்ளிளைச் சேர்ந்த மேலும் 50 ஆசிரியர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஆசானாக இருந்து நவீன கற்பிக்கும் திறன்களை பயிற்றுவித்தனர்.

அத்திட்டம் மூலம் அடுத்தடுத்த ஆண்டுகளில் 100க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களுக்கும் ZP பள்ளிகளை சேர்ந்த 65 ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. MSCERT-ன் அனுமதியுடன் இந்தச் சங்கம் மேலும் ஏழு குழுக்கள் கொண்ட 240 சிறந்த பயிற்சியாளர்களுக்கு பயிற்சி பட்டறைகள் நடத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் அந்த 240 பேரும் மேலும் 30,000 ஆசிரியர்களை நவீன திறன்களில் கைதேர்ந்தவர்களாக மாற்றுவார்கள், அந்த வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து 33 DIET களும் இதில் உள்ளடங்கும்.

மேலும் MSCERTக்கு வெளியில் மற்றொரு 100 சிறந்த பயிற்சியாளர்களை பயிற்சியளிக்க இச்சங்கம் திட்டமிட்டுள்ளது, இவர்கள் மூலம் 500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். இந்த மாபெரும் திட்டப்பணிக்கு நிதியுதவி அளிக்குமாறு நாங்கள் சில பெருநிறுவனங்களை அணுகி இருக்கிறோம், என்கிறார் சங்கத்தின் பிரசிடென்ட் வினீத் மாத்துர்.

இத்திட்டத்தின் பயன்களை விளக்கும் ஓர் அறிக்கையை பள்ளிக்கல்வி மற்றும் விளையாட்டுத்துறை முதன்மை செயலருக்கு, MSCERT இயக்குனர் அனுப்பியுள்ளார். கல்வியியல் அளவுகோல்களில் மாணவர்கள் புலமை பெறுவதை செயல்படுத்தும் மாநிலத்தின் சிறந்தத் திட்டமான பிரகத் ஷைக்ஷனிக் மகாராஷ்டிரா-ஐ செயல்படுத்த இந்தப் பயிற்சி பட்டறைகள் மிகவும் உதவுவதாக அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.■

ஆசிரியர்கள் கதை சொல்லும் கலையை கற்கின்றனர்.

தகுதிக்கேற்ற அங்கீகாரம்

ரஷீதா பகத்

INPPC தலைவர்
தீபக் கபூர்

எண்பது ஆண்டுகளாக ரோட்டரி சங்கம் என்றால், 'கழிவறை கட்டித் தந்தது, பசியோடு வாடு வோருக்கு உணவும், உடை இல்லாதவர் களுக்கு உடைகளும், இருப்பிடம் இல்லாதவர்களுக்குப் புகலிடமும் தந்து உதவியது, நோயுற்றவர்களுக்கு மருந்து வழங்கியது, எல்லாவற்றை யும் விட உலக அமைதிக்காகப் பாடுபட்டு வருகிறது' என்றுதான் அறியப்பட்டது. உள்ளூர் ரோட்டரி சங்கத்தை 'ரொட்டி சங்கம்' என்று கூட அழைத்தனர். 1905ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டுகள் வரையில் இந்த நிலைதான் இருந்தது. போலியோ ஒழிப்புக்கான திட்டமாக போலியோ பிளஸ் பிராசரம், விழிப்புணர்வு, சொட்டு மருந்து அளிக்கும் திட்டத்தை ரோட்டரி ஏற்றுச் செயல்பட்டதை அடுத்து ரோட்டரி குறித்த பார்வையே மாறிவிட்டது. பெரிய அங்கீகாரம், கௌரவம், நம்பகத் தன்மை எல்லாம் ரோட்டரி மீது அதிகரித்து விட்டது. இன்று, ஐ.நா. சபையும், பில் கேட்ஸ் அறக்கட்டளையும் ரோட்டரியைத் தங்களது கூட்டாளியாக இருப்பதற்குப் பெருமிதம் கொள்கின்றன. இதற்கெல்லாம் காரணம் போலியோ பிளஸ் திட்டம்தான் என்று இந்திய தேசிய போலியோ பிளஸ் கமிட்டி (India National PolioPlus Committee) தலைவர் தீபக் கபூர் கூறினார்.

தில்லியில் போலியோ பிளஸ் மற்றும் தட்டம்மை ரூபெல்லா ஒழிப்புத் திட்டம் குறித்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய அவர், இந்திய அரசின் தட்டம்மை, ருபல்லா, காசநோய் உள்ளிட்ட நோய்த்தடுப்புக்கான உலகளாவிய திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள ரோட்டரி அமைப்பினர் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் தீபக் கபூர் பேசியதாவது:

ரோட்டரி அமைப்பினர் இன்றைக்கு அரசின் இணைச் செயலர், செயலர் அல்லது அமைச்சர்களைச் சென்று பார்த்து விடலாம். ஏன், அமிதாப் பச்சன், சச்சின் டெண்டுல்கர் போன்ற பிரபலங்களைக் கூட சந்தித்து, கைகுலுக்கி விடலாம். ஆனால், ஒரு காலத்தில் மாவட்ட ஆட்சியரைச் சந்திப்பது, எவ்வளவு கடினமாக இருந்தது தெரியுமா?

இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் பணி புரிகிற ரோட்டரி அமைப்பினருக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை என்று ரோட்டரி அமைப்பினர் வருத்தப்படுகிறார்கள். நாம் அங்கீகாரத்துக்காக வேலை செய்வதில்லை. பத்திரிகைகளுக்கு செய்திக் குறிப்புகளை அனுப்புகிறோமா என்ன?

கடந்த ஏழாண்டுகளாக இந்தியாவில் போலியோ நோய் இல்லை. இது பெரிய சாதனைதான். அதற்க்காக இன்று பல பேர் போலியோவை ஒழித்ததற்கு அங்கீகாரம் கொண்டாடுகிறார்கள்.

நேற்று முடியாததை ரோட்டரி இயக்கம் இன்று முடித்திருக்கிறது என்பதை வெளியுலகுக்கு விவரிக்க வேண்டும். போலியோ பிளஸ் திட்டம் எப்படி மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டது என்பதையும் ரொட்டேரியன்கள் தங்களது பங்களிப்பாக ரூ.10,000 கோடியையும் ரோட்டரி முயற்சியில் திரட்டப்பட்ட ரூ. 44,000 கோடியையும் போலியோ பிளஸ் திட்டத்திற்குப் பயன்படுத்தியதையும் எடுத்துக் கூற வேண்டும்.

அத்துடன் கீழ்க்கண்டவை குறித்தும் ரோட்டேரியன்கள் பேசவேண்டும்:

- கார்ப்பரேட் நிறுவனங்களின் ஈடுபாடு, குறிப்பாக ராஜஸ்ரீ பிர்லாவின் 1.20 கோடி டாலர் பங்களிப்பு.
- போலியோ ஒழிப்பில் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், மதத் தலைவர்களை ஈடுபடுத்த ஆலோசனை வழங்குதல்
- போலியோ ஒழிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றியது, நோய்த்தடுப்புடன் மேலும் மேற்கொள்ள வேண்டிய தொடர் பணிகள் குறித்து தலைவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- தேசிய நோய்த்தடுப்பு தினம் குறித்த கருத்தியலைப் பிரசாரம் செய்தல்,
- குழந்தைகளை தடுப்பூசிக்கு ஈர்க்கும் பணிகளைச் செய்தலில் முன்னோடியாக இருத்தல்
- மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் பாலமாக ரோட்டரி செயல்படுதல்
- நோய்த்தடுப்பு மருந்துகளை ரயில், சாலை, படகுகள் வழியாக, ஏன் ஒட்டகங்களிலும் ரோட்டரி அமைப்பினர் எடுத்துச் சென்று பயன்படுத்தியது
- போலியோ குறித்த தவறான கருத்துக்களை ரோட்டரியின் உலேமா கமிட்டி மாற்றியமைத்து, எதிர்ப்புகளைச் சமாளிக்கச் செய்தல்.
- போலியோ ஒழிப்பு தொடர்பாக செய்தித்தாள்கள், இதழ்களுக்கு எழுதுதல்,
- உள்ளூர்அதிகாரிகளுடன் தொடர்ந்து தகவல் பரிமாறிக் கொள்ளுதல்
- உள்ளூர் அரசியல்வாதிகள், எம்.எல்.ஏ.க்களுடன் தொடர்பு கொண்டு ரோட்டரியின் போலியோ இயக்கத்தைத் தொடங்கிவைக்கச் செய்தல்.
- போலியோ ஒழிப்பு குறித்து பிரசாரம் செய்ய உள்ளூர் பண்பலை வானொலிகளை அணுகுதல்
- போலியோ ஒழிப்பு இயக்கத்தை சமூக வலைதளங்கள் மூலம் பரப்புவதற்கு ரோட்டரி ச ங்கங்கள் ஈடுபடுதல்
- பள்ளிகள், கல்லூரிகளில் போலியோ ஒழிப்பு குறித்து விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல்
- கார்களில் போலியோவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் (End Polio Now) ஸ்டிக்கர்களை பொருத்துதல்
- போலியோவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் (End Polio Now) பிரசாரத்தைக் கைபேசி ரிங் டோனாக அமைத்தல்
- ஊடகங்களில் போலியோ ஒழிப்பு குறித்து விளம்பரம் செய்தல்.

இவை அனைத்தையும் செய்தப்பின்னர் ரோட்டரி சங்கங்கள் "போலியோ ஒழிப்பில் உழைத்ததற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை" என்று குரல் எழுப்ப முழுத் தகுதி உண்டு.

போலியோ ஒழிப்பு ரோட்டரியின் பணிக்கு மதிப்பும் புகழும் பெற்றுத் தந்துள்ளது. அத்துடன் ரொட்டேரியன்களிடையில் அர்ப்பணிப்பு, உற்சாகம், ஆற்றலை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் உலகில் சிறந்த சுகாதாரக் கட்டமைப்புள்ள நாடாக இந்தியா உருவாகவும் உதவியுள்ளது. தட்டம்மை - ருபல்லா நோயை ஒழிப்பதில் இந்திய அரசுக்கு உத வுவதற்காக இந்தக் கட்டமைப்பையும் உற்சாகத்தையும் எழுச்சி பெறச் செய்வோம்.

அவ்வளவுதான், போலியோ ஒழிப்பில் கடைப்பிடிக்கப்பட்ட அத்தனை உத்திகளையும் தட்டம்மை - ருபல்லா ஒழிப்பிலும் கடைப்பிடிக்கவேண்டும். புதிதாக எதையும் செய்ய வேண்டாம். என்று தீபக் கபூர் மேலும் கூறினார்.■

பிரேக்அவுட் அமர்வுகள்

ஜெயஸ்ரீ

இந்தியாவில் வின்ஸ் (WinS) டார்கெட் சேலேன்ஜ் திட்டம் உற்சாகமும் ஆற்றலும் நிறைந்தது. சமீபத்தில், RIPE பேரி ரஸ்ஸின் சில பள்ளிகளைப் பார்வையிட்டபோது, மாணவர்கள் செய்து காட்டிய கூட்டு கை கழுவும் முறையை மிகவும் பாராட்டினார் என்று TRF அறங்காவலரும் RIன் WinS குழுவின் தலைவருமான சுஷில் குப்தா, டொரோண்டோ மாநாட்டில், 'வெற்றியைப் பகிர்தல், சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் பார்ட்னர்களைக் கண்டுபிடித்தல்' என்ற தலைப்பிலான பிரேக்அவுட் அமர்வில் தலைமை தாங்கியபோது கூறினார்.

சுகாதாரத் திட்டத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் "மாற்றத்தின் முகவர்களாக" குழந்தைகளைக் கொண்டு சமூகங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "கழிப்பறைகள் உபயோகப்படுத்துவதும், கைகளைச் சுத்தமாக வைத்திருப்பதும் தங்களின் நலனுக்காகத் தான் என்று நாம் மக்களுக்கு உணர்த்த வேண்டும். குடும்பம் ஆரோக்கியமாக இருந்தால், மருத்துவமனைகளுக்குச் செல்வது குறையும்."

இந்தியா, கென்யா, ஹோண்டுராஸ், பெலிஸ் மற்றும் குவாத்தமாலா ஆகியவை இந்தத் திட்டத்தில் முன்னோடியான ஐந்து நாடுகள் - அந்த நாடுகளில் இருக்கும் பள்ளிகளில் வாஷ் (WASH) திட்டங்களைச் செயல்படுத்த பார்ட்னர்களையும் நன்கொடையாளர்களையும் தேடுகிறார்கள். இதற்காக இரண்டு கட்ட மானியத்திற்கான நிதியியல் முறைமையை TRF அறங்காவலர்கள் அங்கீகரித்துள்ளார்கள். TRFக்கு வந்த 46 விண்ணப்பங்களில், இந்த ஆண்டு சுமார் $1.5 மில்லியன் வழங்கப்பட்டு நான்கு திட்டங்கள் வெற்றிகரமாக முடிந்தது.

இந்தியாவில் WinS திட்டம் பற்றிய விளக்கத்தைக் கூறிய PDG கணேஷ் பட், கிராமப்புற பள்ளிகளில் கழிப்பறைகள் மற்றும் கைகழுவும் நிலையங்களை அறிமுகப்படுத்திய பிறகு, குழந்தைகள் அவர்களின் வீடுகளிலும் கூட சுகாதாரமாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் என்றார். ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் சுகாதாரம் மற்றும் கழிப்பறை உபயோகத்தைப் பற்றி சொல்லுகிறார்கள் மற்றும் அவர்களுக்குச் சுகாதார நாப்கின்கள் மற்றும் சோப்புகளை கொடுகிறார்கள். கழிப்பறைகள் மற்றும் கைகழுவும் நிலையங்களில் தொடந்து தண்ணீர் வழங்க வேண்டிய தேவையை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த அமர்வு மற்ற நாடுகளில் நிலவும் சூழ்நிலைகளைப் பற்றியும் ஆய்வு செய்தது.

உதவிக்காக ஒரு வேண்டுகோள்

RC கென்யாவின் PDG மரியாம் வாங்குவி, கென்யாவில் தொடக்கக் கல்வி இலவசமாக இருப்பதால், வசதிகள் பள்ளிகளுக்கு சரியான நேரத்திற்கு வந்து சேருவதில்லை என்று கூறினார். சுகாதாரத்தைப் பொறுத்தவரை தேர்தல் காலத்தில் இது மேலும் தாமதமாகும், "அரசியல்வாதிகள் பதவிக்கு போட்டியிடும்போது, நிதி அங்கு திசை திருப்பப்படுகிறது, உள்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்படுகின்றன." பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது, தண்ணீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான நோய்களில் இந்த நாடு 5வது இடத்தில் இருக்கிறது. கென்யா, எரிட்ரியா, எத்தியோப்பியா மற்றும்

தெற்கு சூடானை உள்ளடக்கிய மாவட்டம் 9212, ‘‘இதற்குச் சங்கங்கள் மற்றும் பெருநிறுவனங்களிடம் இருந்து அவசியமாக உதவி தேவைப்படுகிறது. நாங்கள் நல்ல வசதிகளை உருவாக்க விரும்புகிறோம். எங்கள் நிலத்தடி நீரில் ஃப்ளூரைடு அதிகமாக இருப்பதால். இது குழந்தைகளுக்கு பாதுகாப்பற்றதாக இருக்கிறது,’’ என்று மரியம் முறையிட்டார்.

குவாத்தமாலாவில், குறிப்பாக வாஷ் திட்டங்களுக்காக ரோட்டரியுடன் வேலை செய்வதற்கு பெரு நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றார் Rtn டியாகோ பியூர்லன்.

பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் அவரது நாட்டையும் இந்த முன்னோடித் திட்டத்தில் சேர்க்க வேண்டுமெனக் கோரியதற்கு, இந்தத் திட்டம் 2020 ஆம் ஆண்டில் காலாவதியாகிவிடும் என்று குப்தா கூறினார். ‘‘ஆனால் உங்கள் சங்கங்கள் உலகளாவிய உதவித் தொகை மூலம் இந்த திட்டங்களைச் செய்ய முடியும். வாஷ் திட்டங்கள் முன்னோடி நாடுகளுக்கு மட்டுமே அல்ல’’ என்றார்.

CSR நிதிகளைப் பெறுவது

CSR மற்றும் நிதி அபிவிருத்தி மீது அதன் தாக்கம், என்ற தலைப்பில் நடைபெற்ற அமர்வை வழிநடத்திய PDG வினய் குல்கர்னி, பெருநிறுவனங்கள் அவர்களின் CSR நிதி உதவியுடன் சமூகத் திட்டங்களை ரோட்டரியுடன் இணைந்து செய்ய எப்படி ஈர்க்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

சுற்றுப்புறச்சூழல் மற்றும் சமூக காரணிகளைக் கருத்தில் கொண்டு திட்டங்களை தீட்டவேண்டும் என்று இந்த அமர்வின் தலைவர் சுஷில் குப்தா சங்கங்களை ஊக்குவித்தார். ‘‘ரோட்டரியின் ஆறு கவனப் பகுதிகளில் ஐந்து இந்தியாவின் CSR கொள்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, CSR இலக்குகளை அடையவும் மற்றும் சமுதாயத்தில் சிறந்த முன்னேற்றத்தைப் பெறவும் பெரு நிறுவனங்களை ஆர்வப்படுத்தும் திட்டங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும்,’’ என்று வலியுறுத்தினார்.

PDG சரத் சந்திரா, D 3110, மற்றும் D 3131ன் மாவட்ட CSR தலைவர், ராகேஷ் பார்கவா, தங்கள் கிளப்களோடு கூட்டுச்சேர் வதற்கு பெருநிறுவனங்களை ஈர்த்த அவர்களின் வெற்றிக் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். D 3110 RDS ப்ராஜக்ட் லிமிடெட் உடன் பங்குதாரராக $175,000 CSR பங்களிப்புடன் உத்தரப்பிரதேசத்தின் ஃபிரோஸாபாத்தில் ஒரு கேத்லேப் அமைத்தபோது, 2016-17 முதல் D 3131 கெஸ்டாம்ப் உடன் கூட்டுச்சேர்ந்து $300,000 மதிப்புள்ள பெருநிறுவன பார்ட்னர்ஷிப் உதவியால் ஐந்து திட்டங்கள் செயல்படுத்தியுள்ளனர் மற்றும் பள்ளிகளில் தங்கள் இ-லேர்னிங் திட்டங்களை டாடா டெக்னாலஜிஸ் நடத்தி வருகின்றனர்.

அவர்களது பணம் என்ன செய்ய முடியும் என்பதைக் காண்பியுங்கள்

வெற்றி திட்டத்தை பகிர்ந்து கொள்ளும்போது சந்திரா முதலில் சொந்தமாக நிறுவனம் வைத்துள்ள ரொட்டேரியன்களை அல்லது ஒரு கார்ப்பரேட்டுடன் தொடர்புடையவர்களைச் சந்தித்ததாகவும், பின்னர் ரோட்டரியின் செயல்களால் ஈர்க்கப்பட்ட சில பிற நிறுவனங்களுடன் இணைத்துக்கொண்டதாகவும் கூறினார். வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கார்ப்பரேட் தலைவர்கள் தங்கள் பணம் எவ்வாறு பயன்படுகிறது என்பதை அறிந்திருக்க வேண்டும் என்று எச்சரித்தார். ‘‘RDS திட்டத்திற்கு, அவர்கள் பணம் எங்கு யாருக்குச் செல்கிறது எனத் தெளிவாகத் தெரிவித்தோம். வேலை நேரத்தின் போது, தலைமை நிர்வாக அதிகாரி மதன்லால் கோயலை மருத்துவமனையின் தளத்திற்கு அழைத்துச் சென்றோம். அங்கு கிராமத்தில் உள்ள இதய நோயாளிகளிடம் அவரது பணம் எவ்வளவு பெரிய மாறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று

TRF Trustee *சுஷில் குப்தா ஓர் அமர்வில் உரையாற்றுகிறார். (இடதுபுறம்)* PDGs *கார்லஸ் ஃப்ளோர்ஸ், மரியம் வான்கி, கணேஷ் பட் மற்றும்* RI *யிலிருந்து மேரி ஜோ ஜுண் ஃப்ரான்சுவா.*

திரு அனுபவ் கபூர், PDG வினய் குல்கர்னி, TRF Trustee சுஷில் குப்தா, PDG லூயி A ஜான்சன் மற்றும் TRF Trustee ப்ரைன் ஸ்டைல்ஸ்.

அவர் கண்கூடாகப் பார்க்க முடிந்தது,'' என்று அவர் கூறினார்.

பெருநிறுவன உலகத்தை ஆய்வு செய்யவும்

CSR பார்ட்னர்ஷிப்பை எவ்வாறு பெற்றார் என்பதைப் பகிர்ந்து கொள்ளும் போது பார்கவா, ஒவ்வொரு நிறுவனமும் தனது CSR பணத்தை எவ்வாறு செலவழித்தது என்பதைப் பற்றியும், ஒரு CSR கொள்கையைக் கொண்டிருந்தவைகளைப் பற்றியும் வெளியிடப்பட்ட தரவை அவரும் அவரது குழுவும் எப்படி ஆய்வு செய்தனர் என்று கூறினார். பெரும்பாலான நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கள் CSR திட்டங்களை செயல் படுத்த ஒரு தனிதுறை இல்லை. "NGOக்களுக்கு தங்கள் CSR திட்டங்களை அவுட்சோர்சிங் செய்யும் நிறுவனங்களை இலக்கு வைத்தோம். நம் ஆழம் மற்றும் திட்டமிடல், தெளிவான நிதியங்கள் மற்றும் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை அவர்களை ஈர்க்கும் விதத்தில் கூறினோம். நாங்கள் தலைமை மற்றும் திறமைகளை கொண்டுவருவதாகவும், இதற்கு வேறு ஒரு சிறந்த பங்குதாரர் இருக்க முடியாது என்றும் நாங்கள் சொன்னோம்.''

இந்த "மூலோபாயங்களை'' கவனித்த டாடா டெக்னாலஜிஸ் கார்ப்பரேட் சஸ்டெயினபிலிட்டி தலைவர் அனுபவ் கபூர், D 3131ன் ரொட்டேரியன்கள்களை பாராட்டி "ரோட்டரியுடன் சேர்வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. பல்வேறு துறைகளில் உங்களுக்கு உள்ள பரந்த அனுபவம், சமூகத்தின் தேவை என்ன என்பதை அறிந்து, எப்படிப் பூர்த்தி செய்ய முடியும் என்று அறிய உதவும்,'' என்றார்.

பெரும்பாலான பெருநிறுவனங்கள் சமூகத் துறையில் நேரடியாக நுழைவதில்லை என்று அவர் கூறினார். சுமார் 65 சதவீதம் பேர் ரோட்டரி போன்ற அரசு சாரா நிறுவனங்களுக்கு வேலை கொடுக்கின்றனர். மேலும் தனது நிறுவனம் உலகம் முழுவதும் இதர 16 நாடுகளில் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்த ஆர்வமாக உள்ளது என்றும் சொன்னார்.

ஒரு நிறுவனம் ஒரு திட்டத்தில் இருந்து வெளியேறினால் என்ன செய்வது என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், TRF மற்றும் கார்ப்பரேட்டுக்கு இடையே திட்டத்தின் விவரங்கள், காலம் மற்றும் பணத்தை எப்படிப் பயன்படுத்துவது ஆகியவற்றைக் குறிப்பிட்டு தெளிவான ஒப்பந்தம் இருக்க வேண்டும் என குப்தா கூறினார்.

TRF டிரஸ்டி பிரைன் ஸ்டைல்ஸ் மற்றும் PDG லூயிஸ் A ஜான்சன் ஆகியோர் கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் CSRன் எதிர்காலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினர்.

மற்ற சுவாரஸ்யமான பிரேக்அவுட்கள்

ரோட்டரி டாக்டர்களுக்கான ஒரு அமர்வு, சுகாதார சேவைகளை வழங்குவதற்கும், உலகெங்கிலும் உள்ள உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களின் சேவைகளை விரிவு படுத்துவதைப் பற்றி ஆய்வு செய்தது. RC மாம்பலம், D 3232, Rtn S சுந்தர், தனது கிளப்பின் 'வாக் இந்தியா' திட்டத்தை பற்றிக் கூறினார். இது தமிழ்நாட்டிலுள்ள எலும்புமுறிவால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நபர்களுக்கு அவர்களுடைய வீட்டுக்கே சென்று செயற்கைக் கால்களைப் பொருத்துவதன் மூலம் மீண்டும் நடக்க வைக்கிறது.

PDG Dr. N சுப்பிரமணியன், D 3011, இந்தியாவில் வளைந்த பாதத்தின் சவால் பற்றிப் பேசினார். "கிராமங்களில் உள்ள பலருக்கு இன்னமும் வளைந்த பாதத்தை குணப்படுத்த முடியும் என்று தெரியவில்லை. சிகிச்சைக்கு அதிகம் செலவாகும் என்ற ஒரு தவறான பயம் இருப்பதால் அவர்கள் தங்கள் குழந்தைகளை மருத்துவரிடம் அழைத்து வரமாட்டார்கள்.'' D 3011 இந்தியா முழுவதும் அனைத்துக் குழந்தைகளிடமும் உள்ள வளைந்த பாதக் குறைபாட்டை சரிசெய்ய மருத்துவமனைகளில் CURE கிளினிக்குகள் அமைப்பதிலும், குழந்தைகள்நல எலும்பு மருத்துவர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் CURE இன்டர்நேஷனல் இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

ரோட்டரி பெல்லோஷிப் குழுக்கள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள், பெல்லோஷிப்ஸ்: தி ஹிட்டன் ஜெம் ஆப் ரோட்டரி அமர்வில் கலந்து உரையாடப்பட்டன. "உங்கள் விருப்பம் என்னவாக இருந்தாலும், நீங்கள் உங்களைப் போன்ற ஆர்வம்கொண்ட ஒரு ரொட்டேரியனுடன் இணையலாம், மேலும் உங்கள் பொதுவான ஆர்வம் மூலம் மனிதகுலத்திற்கு சேவை செய்யலாம்'' என்று RC கல்கத்தா சவுத் உறுப்பினர் மதுமிதா பிஷ்னு கூறினார். இசைப் பிரியர்கள், புகைப்படக்காரர்கள், மாயாஜாலக் கலைஞர்கள் முதல் வழக்கறிஞர்கள் வரை, இந்தக் குழுக்கள் நண்பர்களை உருவாக்குவதிலும், திட்டப்பணிகளில் பங்கேற்பதிலும், உங்களுக்குப் பிடித்தமான உற்சாகத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் ஒரு மகிழ்ச்சியான வழியைக் கடைப்பிடிக்கின்றன என்று அவர் மேலும் கூறினார்.■

கோரக்பூரில் ஒரு மகிழ்ச்சிப் பள்ளி

ரோட்டரி செய்திகள் குழு

உத்தரப்பிரதேசம் கவுரியா மாவட்டம் கோரக்பூரில் உள்ள மேல் நிலை தொடக்கப் பள்ளியில் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1960ம் ஆண்டுகளில் 600 பேர் படித்து வந்த பள்ளியில் தற்போது 150 பேர்தான் படிக்கிறார்கள். இதனால் அப்பள்ளியைத் தத்தெடுத்து மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றும் முடிவுக்கு RC கோரக்பூர் (D 3120) முன் வந்தது.

அங்கு பள்ளிச் சிறுவர்கள் தரையில்தான் அமர்ந்து தான் பாடம் படிப்பர். போதிய வெளிச்சமும்; மின்வசதியும் இல்லை; இதையெல்லாம் விட கழிவறை வசதியும் இல்லை. அதனால், பெற்றோர்கள் குழந்தைகளை அங்கிருந்து வேறு பள்ளிக்கு மாற்றிவிடுகிறார்கள்.

ஆனாலும், போதிய வசதிகள் இருந்தால், அந்தப் பள்ளியில், முன்பு போல அங்கே நிறையே குழந்தைகள் சேர்ந்து படிக்க வருவார்கள் என்று

ரோட்டரி சங்கத்தின் செயலாளர் மஹாவீர் பிரசாத் கண்டோய் நம்பிக்கை தெரிவித்தார்.

அந்தப் பள்ளியில் ரோட்டரி அமைப்பினர் மேசை, நாற்காலிகளை, மின்விசிறிகள் வழங்கினர். அதையடுத்து மாணவர் சேர்க்கை 190ஆக உயர்ந்தது. தற்போது அடுத்த கட்ட பணியாக, கழிவறைகளும் கைகழுவும் பிரிவுகளும் தனித்தனியே அமைக்கப்பட்டு வருகின்றன. மகிழ்ச்சிப் பள்ளித் திட்டத்துக்குத் தேவையான இதர வசதிகள் விரைவில் பூர்த்தியாகி விடும் என்று கண்டோய் தெரிவித்தார். ■

கோவிலில் பிளாஸ்டிக் உதிர்ப்பான் நிறுவியது ரோட்டரி

நாசிக் நகரிலிருந்து 60 கி.மீ., தொலைவில் இருக்கும் வாணி என்ற இடத்தில் சப்தஸ்ருங்கி கோயிலுக்கு அருகில் பிளாஸ்டிக் பாட்டில்களை உதிர்க்கும் இயந்திரத்தை RC நாசிக் க்ரேப் சிட்டி D 3030 நிறுவியது. ஏழு மலைகளின் நடுவில் அமைந்திருக்கும் ஆலயத்தில் சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பது கடினமான வேலை என்று சங்கத்தில் முன்னாள் செயலாளர் ஜியோதிகா பாய் சொன்னார்.

தில்லியில் தனியார் நிறுவனத்தில் இருந்து ரூபாய் 60,000திற்கு பிளாஸ்டிக் உதிர்க்கும் இயந்திரம் வாங்கப்பட்டது. ஆலயத்திற்கு விஜயம் செய்த முதல் அமைச்சர் தேவேந்திர பத்னாவிஸ், பிளாஸ்டிக் உதிர்க்கும் இயந்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். “சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக நாங்கள் வேலை செய்கிறோம் என்பதைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார்.’’ 100 ஒரு லிட்டர் பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் 100 கிலோ எடை சுமக்கும் பிளாஸ்டிக் உதிர்ப்பான், 220 வோல்ட் மின்சாரம் உதவியுடன் மணிக்கு 10 முதல் 20 பாட்டில்களை உதிர்க்கும்.

சங்கத்தின் IPP, அல்கா சிங் ‘வளாகத்தைச் சிறந்த முறையில் பராமரிப்பதால், கோவிலின் அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்’ என்கிறார். ஆலய அதிகாரிகள் மறுசுழற்சி செய்வதற்காக துண்டாக்கப்பட்ட பிளாஸ்டிக்கை அனுப்புகிறார்கள். இந்தக் கருவி கிராமப்புறத்து மக்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது மேலும் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது.■

உள்ளூர் பள்ளிகளை மிளிரச் செய்யும் மொராதாபாத் ரோட்டரி

ரஷீதா பகத்

உத்தரப் பிரேதசம் மொராதாபாத் 22 கிமீ தொலைவில் உள்ள ஃபதேபூர் நகர் புத்துயிர் பெற்றது போல் சுறுசுறுப்பாகத் தோன்றியது! அங்கே பிராத்மிக் வித்யாலயா பள்ளியிலும் பிரதம் வங்கியின் கிளையிலும் எல்லோரது கைகளிலும் துணிப் பைகள். அவற்றில் ரோட்டரியின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால், யாரும் பாலிதீன் பையோ பிளாஸ்டிக் பையோ வைத்திருக்கவில்லை.

விஷயம் இதுதான். உத்தரப் பிரதேச அரசு பிளாஸ்டிக் பைகளுக்குக் கடந்த வாரம் தடை பிறப்பித்தது. அதை ஏற்று, பொறுப்பாக மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்கத்தினர் (D3100) மேற்கொண்ட செயல்பாடுதான் இது. அரசு உத்தரவால் துணிப் பைகளையும் நார்ப் பைகளையும் வாங்கிச் செல்வற்காகத் தான் அங்கே ஏராளமானோர் வந்திருந்தனர்.

ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநரும் மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான

ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ப்ரதம் வங்கி இந்த நகரை பாலிதீன் இல்லாத நகரமாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

அகிலேஷ் கோதிவால் அழைப்பை ஏற்று நான் மொராதாபாத் சென்றிருந்தேன். தில்லி அடைந்ததும், விமான நிலையத்தில் என்னை வரவேற்ற ரோட்டரியினருடன் ஐந்து மணி நேரம் காரில் பயணம் செய்து, அந்தத் தொடக்கப் பள்ளிக்குச் சென்றேன். அங்கு 100 மாணவர்கள் படிக்கிறார்கள். இந்தப் பள்ளியில்தான் ரோட்டரி சங்கம் கைகழுவும் இயக்கத்தை (WinS project) தொடங்கியது. அத்துடன், அங்கு ரோட்டரி சங்கத் தலைவராக மாதுரி குப்தா பொறுப்பேற்றார். அவர் இந்தப் பள்ளி மாணவர்கள் தூய்மை பராமரிப்புக்காக சோப்கள், துண்டுகளை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

பாலிதீனுக்குப் பதில் துணிப் பைகள்

அங்கே குழந்தைகளை மாதுரி அழைத்துச் சென்று, பள்ளிகளில் கைகழுவும் திட்டத்தை (WinS) அறிமுகப்படுத்தி, கைகளை எப்படிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற பழக்கவழக்கத்தை மீண்டும் ஒரு முறை சொல்லிக் கொடுத்தார். அந்தப் பள்ளியை ரோட்டரி சங்கம் மூன்று ஆண்டுகளாகத் தத்து எடுத்துள்ளதாக அகிலேஷ் கோதிவால் தெரிவித்தார். கைகழுவுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். கழிவறைகள் சுத்தமாக்கப்பட்டு பளிச்சிடுகின்றன. போதிய குடிநீர் கிடைக்கிறது. குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் யோகா பயிற்சி தருகிறோம். முறையாக உடல் நலப் பரிசோதனை நடத்துகிறோம். சீருடைகள், பாடப்புத்தகங்களை வழங்கி வருகிறோம். தற்போது, மின்வழிக் கல்விக்கான கையேடுகளையும் ஒரு கணிப் பொறியையும் அளித்துள்ளோம் என்றார் அவர். அங்கு மின்சாரம் இல்லாததால் கம்ப்யூட்டர் இன்னும் பொருத்தப்படவில்லை.

ரோட்டரி சங்கத்துக்கு தேவகிநந்தன் ஜெயின் 2014-15ம் ஆண்டு

மொராதாபாத் ஹெரிட்டேஜ் ரோட்டரியினர் துணிப்பைகளை விநியோகிக்கின்றனர்.

தலைவராக இருந்தது முதல் இன்று வரையில் மொத்தம் ரூ.1.5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவற்றுடன் மேலும் மூன்று மின்வழிக் கல்விக்கான வழிகாட்டி கருவிகள் வழங்கப்படும்.

நகரில் பிளாஸ்டிக்கை ஒழிப்பதற்கான பாலிதீன் இல்லாத நகரம் என்ற திட்டத்தை ப்ரதம் வங்கியின் தலைவர் ராம் நாயக் தொடங்கிவைத்தார். அவரது வங்கி பிளாஸ்டிக் பைக்குப் பதிலாக 20 ஆயிரம் துணிப் பைகளை விநியோகித்துள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ப்ரதம் வங்கி உத்தரப் பிரதேசத்தில் 413 கிளைகளின் மூலம் விவசாயிகளுக்கும் சிறு, குறு தொழில்களுக்கும் கடனுதவி செய்து வருகிறது என்றார் அவர். ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ப்ரதம் வங்கி இந்த நகரை பாலிதீன் இல்லாத நகரமாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும், சூரிய ஒளி மின்சக்தித் திட்டத்திலும் பத்து ஆண்டுகளாக ஈடுபட்டுவருகிறது. இதன் விளைவாக எங்களது வங்கியின் 60 கிளைகள் சூரிய சக்தியிலேயே இயங்குகின்றன. மொராதாபாத் கிளையும் சூரிய ஒளி சக்தியில் இயங்குகிறது என்றும் அவர் கூறினார்.

மேலும் ரோட்டரி சங்கம் தத்து எடுத்துள்ள பள்ளியிலும் சூரிய ஒளி சக்தி வசதியை தங்களது வங்கி ஏற்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுத்தமும் சுகாதாரமும்

ரோட்டரி சங்கத் தலைவர் மாதுரி, இந்தப் பள்ளிச் சிறுவர்கள் சுகாதாரமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க வகை செய்யப்படும். அதன் முதல் கட்டச் செயல் கைகளைச் சுத்தமாகக் கழுவும் பழக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்துவது. குளிர் காலத்தில் அவர்களுக்கு ஷூ கிடைக்க வகை செய்ய உள்ளோம். பள்ளி மாணவர்களுக்கு என்ன தேவை என்று பள்ளி நிர்வாகத்தினரிடம் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு நாப்கின்கள் இன்று அளித்தோம். ஒன்றை தினமும் பள்ளிக்கு வரும்போது கொண்டுவரும்படி அறிவுறுத்தினோம்.

அடுத்த நாள் நான் மொராதாபாதில் உள்ள ஆதர்ஷ் நகர் ஆரம்பப்

மொராதாபாத் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் ஒரு பள்ளியில் ஸானிட்டரி நாப்கின் இயந்திரத்தை நிருவியது. PDG அகிலேஷ் கோதிவால், சங்கத் தலைவர் அனுஜ் அகர்வால் அவர்களும் உள்ளனர்.

மொராதாபாத் ஹெரிட்டேஜ் சங்கத் தலைவர் மாதுரி குப்தா குழந்தைகளுக்கு கை கழுவும் முறையை கற்றுக் கொடுக்கிறார்.

பள்ளிக்குச் சென்றேன். அங்கே இரு சாதாரண அறைகள் மட்டுமே இருந்தன. சுகாதார வசதியோ ரொம்ப சுமார். நகரின் மிகவும் மோசமான இடத்தில் அந்தப் பள்ளி அமைந்திருந்தது. அங்கே படிக்கும் சிறுவர் சிறுமியர் 80 பேர் ஏழைகள். வீட்டு வேலை செய்யும் பெண்கள், கூலித் தொழிலாளர்களின் குழந்தைகள் என்றார் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் திலோத்தமா கோதிவால்.

Wins இயக்கத்தை இந்தப் பள்ளியில் ரோட்டரி சங்கம் தொடங்கும்போது, ஓராண்டில் மாற்றிக் காட்டுவதாக ரோட்டரி சங்கம் உறுதியளித்தது. மொராதாபாதிலிருந்து சந்தௌசி என்ற இடத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு மேல்நிலைப் பள்ளியிலும் ரோட்டரி சங்கம் தனது பணிகளை மேற்கொண்டிருக்கிறது. அங்கு குடிநீருக்காகத் தொட்டி அமைத்து, குடிநீர் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. பள்ளிகளில் WinS திட்டத்தின் வழிகாட்டுதல்படி சுகாதாரமாக இருப்பது குறித்தும் பயிற்சி தரப்பட்டது. அடுத்த கட்ட பணியின்போது, நாப்கின்களை எரிக்கும் சாதனம் வழங்கப்படும் என்றும் திலோத்தமாக கூறினார்.

மொராதாபாத் ரோட்டேரியன்கள் பள்ளியில் WinS திட்டத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள். ராம்சந்திர சர்மா கன்யா இடைநிலைக் கல்லூரிக்கும் சென்றேன். அங்கு 12ஆவது வகுப்பு வரையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. மொத்தம் 750 பெண்கள் படிக்கிறார்கள். இந்தப் பள்ளியையும் மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்கம் தத்து எடுத்துள்ளது.

அங்கு சானிடரி நாப்கின் விநியோகிக்கும் இயந்திரத்தை நான் தொடங்கி வைக்கும்படி அதன் தலைவர் அனுஜ் அகர்வால் கேட்டுக் கொண்டார்.

சுத்தமான பள்ளி

இந்தப் பள்ளியில் மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்கம் பள்ளியில் WinS திட்டத்தை ஏற்கெனவே அறிமுகம் செய்துவிட்டது. நான் அங்கிருந்தபோது, அனுஜ், அடுத்த வாரம் உப்புநீரைச் சுத்திகரிக்கும் RO இயந்திரம் இந்தப் பள்ளியில் நிறுவப்படும் என்று உறுதி அளித்திருந்தார். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அங்கே RO இயந்திரம் வைக்கப்பட்டுவிட்டது.

உத்தரப் பிரதேச அரசு 1090 என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் கீழ் சிறுமியர் அனைவரும் அதிகாரம் பெற்று சக்தி தேவதைகள் (power angels) ஆகிறார்கள். இதன் மூலம் அவர்கள் சுயபாதுகாப்புடன் இருக்கக் கற்றுக் கொள்கிறார்கள். மாணவியருக்கு தற்காப்புக் கலையைக் கற்றுத் தரத் திட்டமிருக்கிறோம். அதற்காக 100 மாணவியருக்குப் பயிற்சி தருவது குறித்து மாநில காவல்துறைத் தலைவருடன் (IG) பேசி வருகிறோம் என்றார் அனுஜ் அகர்வால்.

இவர்கள் பயிற்சி பெற்ற பிறகு பிற மாணவியருக்குக் கற்றுத் தருவர். காவல் துறையினரைப் போல் பலம் பெறுவர். பள்ளியின் முதல்வர் பாரதி அகர்வால் மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்கத் தலைவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இந்தப் பள்ளி ஜொலிக்கிறது என்றால் அதற்கு ரோட்டரி சங்கமே காரணம் என்று பூரிப்போடுகூறினார்.■

சுண்ணாம்பினால்

பார்வையிழப்பு இனி இல்லை!

ஜெய்ஸ்ரீ

வெற்றிலை போடுவதற்கான சுண்ணாம்பு கடந்த பத்தாண்டுகளில் 2,000 குழந்தைகளின் கண்களைப் பாதித்துள்ளது.

இந்த அதிர்ச்சியான தகவலை சென்னையில் சங்கர நேத்ராலயா ஏற்பாடு செய்த விழிப்படலம் மற்றும் கேரடோப்ராஸ்தசிஸ் என்ற கண் அறுவைச் சிகிச்சை குறித்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

வெற்றிலை போடுவோர் சிறுவர்களைக் கடைக்கு அனுப்பி சுண்ணாம்பு பாக்கெட் வாங்கச் செய்கிறார்கள். அந்த பாக்கெட் உடைந்து, சுண்ணாம்புத் தூள் சிதறி, அச்சிறுவர்களின் கண்களில் பட்டு பாதிப்பு ஏற்படுகிறது.

அதற்காகப் பலமுறை அறுவைச் சிகிச்சை செய்த பிறகும் பல சிறுவர்களுக்குப் பார்வை திரும்பவில்லை என்று சங்கர நேத்ராலயாவின் மூத்த மருத்துவ ஆலோசகரும் கருத்தரங்கின் அமைப்புச் செயலருமான Dr கீதா ஐயர் கூறினார்.

சுண்ணாம்பில் காரத் தன்மை (alkalinity) அதிகம் இருப்பதால், அமில-காரச் சமநிலையைப் பெரிதும் பாதிக்கும். அந்த ரசாயனம் விழி மீதான படலத்தைச் சிதைக்கும். கண்களில் உள்ள லென்ஸ், நரம்பு ஆகியவையும் பாதிக்கப்படும். கண்களில் படியும் சுண்ணாம்புத் துகள்கள் எளிதில் கரையாததால், நிறைய தண்ணீர் தெளித்தும் பயன்தருவதில்லை. இவை எல்லாம் மயக்க மருந்து அளித்த பிறகு, ஆபரேஷன் தியேட்டரில் சிகிச்சை சமயத்தில் செய்ய நேருகிறது. ஆபரேஷன் செய்த பிறகு அமோனிக் சவ்வு (amniotic membrane) பொருத்தி, காயம் ஆறுவதற்குக் காத்திருக்க வேண்டும். சிலருக்கு ஆரம்பகட்ட சிகிச்சைக்கே நான்கு முறை ஆபரேஷன் செய்ய வேண்டி வரும். அப்போதும் கூட ஓரளவு மட்டுமே பார்வை திரும்பும் என்று அவர் விளக்கினார். இத்தகைய பாதிப்பு குழந்தைகளின் படிப்பையும் வாழ்க்கையையும் பாதிக்கும். ஏன், உளவியல் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

அரசுக்கு வேண்டுகோள்

அகில இந்திய கண்சிகிச்சை சங்கம் (All India Ophthalmological Society), இந்திய விழிப்பார்வை சங்கம் (Cornea Society of India) மற்றும் ஹைதராபாதில் உள்ள LV பிரசாத் கண் மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த கண்சிகிச்சை நிபுணர்கள் மதுரை, அரவிந்த் கண் மருத்துவமனை, தில்லி AIIMS மருத்துவமனை நிபுணர்களும், கிண்டி ரோட்டரி சங்கத்தின் (D 3232) உறுப்பினர்களும் பங்கேற்ற இந்த மாநாட்டில் குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கைய நாயுடு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பிளாஸ்டிக் பையில் சுண்ணாம்பு விநியோகிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று அவரிடம் மருத்துவர்கள் கோரிக்கை வைத்தனர்.

அந்தக் கோரிக்கை மனுவில், அமில வகைகளை, விற்பனை செய்வதற்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்றும்; அமிலங்கள் பெண்கள் மீது தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதில், அவர்களது கண்கள் பெருமளவு பாதிக்கப்படுகிறது, சரியான சிகிச்சை இல்லாவிட்டால் பார்வை இழக்கும் அபாயமும் உண்டு.

நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கைய நாயுடு நானும் சங்கர நேத்ராலயாவில் சிகிச்சை பெற்றிருக்கிறேன். எனக்கு சில ஆண்டுகளுக்கு முன் காட்ராக்ட் ஆபரேஷனை Dr பிரேமா பத்மநாபன் செய்தார். இப்போது என் பார்வை

குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, தமிழ்நாட்டு ஆளுநர் பன்வாரிலால் புரோஷித், மாநில சுகாதாரத் துறை அமைச்சர் C விஜய பாஸ்கர், மீன்வளத் துறை அமைச்சர் D ஜெயக்குமார் மற்றும் சங்கர நேத்ராலயா தலைவர் Dr SS பத்ரிநாத் மற்றும் மருத்துவர்கள்.

நன்றாக இருக்கிறது என்று கூறிய அவர், சங்கர நேத்ராலயாவின் சிறப்பு நிலைத் தலைவர் (Chairman & emeritus) Dr SS பத்ரிநாத் ஏழைகளுக்கும் செய்துவரும் சேவைகளைப் பெரிதும் பாராட்டினார்.

பாதுகாப்பான பாக்கெட்டில் சுண்ணாம்பு, அமிலங்களை விற்பதற்கும் ஒழுங்குமுறை நடவடிக்கை நாடாளுமன்றத்தின் மூலம் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், மாநில சுகாதாரத் துறை அமைச்சர் C விஜயபாஸ்கர், மீன்வளத் துறை அமைச்சர் D ஜெயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ரோட்டரியின் பங்கு:

சங்கர நேத்ரலயாவில் அமைந்துள்ள Dr G சீதாலட்சுமி நினைவு விழிப்படல சிகிச்சை கிளினிக்குக்கு கிண்டி ரோட்டரி சங்கம் மொத்தம் 48,500 டாலர் மதிப்பிலான நவீன கருவிகள், மருந்துகள் ஆகியவற்றை அளித்து உதவியுள்ளது. இவை மலேசியாவின் அலோர் ஸ்டார் ரோட்டரி, பினாங் ரோட்டரி சங்கம் (D 3300) ஆகியவற்றின் உலகளாவிய நிதியத்தின் மூலமாக அளிக்கப்பட்டன.

இந்த கிளினிக் சுண்ணாம்பு, அமிலம் போன்ற ரசாயன பாதிப்புக்கு சிகிச்சை அளிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தது. ஆஸ்டியோ-ஆட்டோன் கெரடோப்ரோஸ்டெசிஸ் (Osteo-odonto keratoprosthesis) எனப்படும் அதி நவீன சிகிச்சை முறையை மேற்கொள்ளும் மருத்துவமனைகள் இரண்டு மட்டுமே உள்ளன. அவற்றில் இது ஒன்றாகும்.

இந்த மருத்துவமனையுடன் நீண்டகால நட்பும் கொண்டுள்ளோம் என்று ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் L நீலகண்டன் தெரிவித்தார். கலிபோர்னியாவின் நைல்ஸ் ஃப்ரெமோன்ட் ரோட்டரி சங்கம் (D 9170) 800 பேருக்குக் கண் சிகிச்சை அளிப்பதற்காக 97,500 டாலர் உளகளாவிய நிதியை வழங்கியுள்ளது.

இந்த நடமாடும் மருத்துவமனை ஆபரேஷன் பிரிவையும் நடத்தி, சென்னை, அதன் புறநகர் பகுதிகளுக்கு சேவை புரிந்து வருகிறது. மருத்துவமனையில் ஏழைகளுக்கு இலவசமாகவே சிகிச்சை அளிக்கப்படுகிறது. ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து நலிவுற்றோருக்கு இத்தகைய சேவைகளைப் புரிய மருத்துவமனை தயாராக இருக்கிறது என்றார் நீலகண்டன்.

சுண்ணாம்பினால் பார்வை பாதிக்கப்படுவதை விளக்கும் ஒரு நிமிட குறும்பட விடியோ நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. சுண்ணாம்பினால் கண்ணுக்கு ஊறு நேருவது குறித்து விழிப்பு ஏற்படுத்தும் வகையில் சங்கத்தின் ஆதரவில் மாநிலம் முழுவதும் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.■

சந்தௌசியில் ரோட்டரியின் கண் மருத்துவமனை

ரஷீதா பகத்

சந்தௌசி ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்தே 60 ஆண்டுகளாக ஒரு திட்டப்பணியைப் பராமரித்து வருகிறார்கள். உ.பி-இல் மொராதாபாத்தில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள சந்தௌசி என்ற இடத்தில் சந்தௌசி ரோட்டரி சங்கம் 1958 இல் நிறுவப்பட்டது.

அறுபது வருடங்களுக்குப் முன்பு, ஒரு சிறிய கண் மருத்துவமனையாகத் தொடங்கி, இன்று ஒரு மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மலர்ந்துள்ளது, விழித்திரை அறுவை சிகிச்சை உட்பட சிறப்பு கண் பராமரிப்பு அளிப்பதைத் தவிர நோய்க்குறியியல், பிசியோதெரபி, தோல் நோய்கள், போன்ற மருத்துவ சேவைகளையும் வழங்குகிறது. தங்களது ஆரம்ப நாட்களை விவரிக்கும் சங்க முன்னாள் தலைவர் ஹரி ஷங்கர் அகர்வால் கூறுகையில், ராஜ் துலாரி தேவி என்பவர், ஒரு உள்ளூர் நகைக் கலைஞரான அவரது கணவர் சுந்தர்லாலின் நினைவுச் சின்னமாக தானம் செய்யப்பட்ட 5 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் தொடங்கப்பட்டது என்றார். இப்போது 100 Sq km பரப்பளவில் உள்ள இந்த மருத்துவமனைக்கு பரேலி, புலந்த்ஷர், பனாயு, சம்பல், போன்ற மாவட்டங்களில் இருந்தும் நோயாளிகள் வருகிறார்கள்.”

அடுத்த இரு வருடங்களுக்குப் பிறகு, கண் ஆலோசனை வாரம் ஒரு முறை வழங்கப்பட்டது, 1980ம் ஆண்டுக்குப் பிறகு தினசரி ஆலோசனை மற்றும் சிகிச்சையளிக்கப்பட்டது. இப்போது இந்த கண் மருத்துவ மனையில் நான்கு நிரந்தர கண் அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர்; சரும சிகிச்சையைப் போன்ற மற்ற மருத்துவ சேவைகளுக்கு, சூரத்திலிருந்து மருத்துவர்கள் வருகிறார்கள், தோல் ஒட்டுமுறை, ஒப்பனை அறுவை சிகிச்சை மற்றும் பிற தோல் வியாதிகளுக்கும் ஏழை மக்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

கண் மருத்துவத்தில், பெரும்பாலான சிகிச்சைகள் கண்புரை அறுவை சிகிச்சையை சார்ந்தே இருக்கிறது என்று சங்க தலைவர் அனில் குமார் அகர்வால் கூறுகிறார்; “நாங்கள் ஒரு வருடத்திற்கு 6,000 கண்புரை அறுவைச் சிகிச்சைகள் செய்கிறோம்,” என்றார். புறநோயாளிப் பிரிவில், ஒவ்வொரு ஆண்டும் 65,000 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

3 கோடி வருடாந்திர பட்ஜெட்

கடந்த ஒரு வருடமாக, இந்த கண் மருத்துவமனையில் விழித்திரை ஆலோசனை மற்றும் அறுவை சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு வாரமும் தில்லியிலிருந்து ஒரு விழித்திரை நிபுணர் வருகிறார் என்று சங்கத்தின் முன்னாள்

ரோட்டரி சுந்தரலால் கண் மருத்துவமனை

பிரசிடென்ட் சதீஷ் சந்த் குப்தா மேலும் கூறுகிறார். “இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சுமார் 60 சதவீத நோயாளிகள் ஏழைகள். நாங்கள் அவர்களுக்கு மானிய விலையில் சிகிச்சை அளிக்கிறோம். நோயாளியின் பணம் செலுத்தும் திறனைப் பொறுத்து, கண்புரை நோயாளிகளுக்கு IOL-க்கு 2,600 முதல் 26,000 வரை கட்டணம் வசூலிக்கிறோம். சிகிச்சைக்காக இங்கு வரும் எந்த வொரு நோயாளிக்கும் மருத்துவக் காப்பீடு இல்லை, என்பதையும் அவர் சேர்க்கிறார்.

D 3110-யின் இந்த சிறப்புமிக்க திட்டப்பணிக்கு, வருடாந்திர பட்ஜெட் ரூ.3 கோடி ஆகும், அத்துடன் வரும் இலாபத்தை நிறுவனத்தில் உபகரணங்களை நவீனப்படுத்த அல்லது ரோட்டரி இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்டில் முதலீடு செய்யப்படுகிறது.

இந்த சங்கம் எந்தவிதமான நிதிகளுக்காகவோ அல்லது உலகளாவிய மானிய முயற்சி களுக்காகவோ ஒருபோதும் ரோட்டரி பவுண்டேஷனை அணுகியதில்லை, “ஏனென்றால் எங்களுக்கு அதற்கான தேவை எப்போதுமே இருந்ததில்லை” என்று அவர் கூறுகிறார்.

அப்படியென்றால் CSR நிதிகள் பற்றியும்; கார்ப்பரேட்டுகளை ஈடுபடுத்த திட்டங்களை அவர்கள் வைத்திருக்கிறார்களா என்றும், என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் ரோட்டரி குழுவினரிடம் நான் கேட்கிறேன். ஒற்றுமையாக, அவர்கள் கூறுகிறார்கள், “தேவையில்லை; பணம் எப்போதுமே ஒரு பிரச்சினையாக இருக்காது.”

இந்த திட்டங்களைச் செய்யும் இத்தொண்டு நிறுவனம் 5 கோடி ரூபாய்க்கு ஒரு நிலையான வைப்புத் தொகையை வைத்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது! அவர்களுக்கு சொந்தமான நிலத்தின் மதிப்பு ரூ.5 கோடிக்கு மேல் உள்ளது. உறுப்பினர்களில் ஒருவர் தெளிவாக கூறுகிறார், “மருத்துவமனை அல்லது மேனேஜ்மெண்ட் இன்ஸ்டிடியூட் மூலம் உருவாகும் லாபத்திலிருந்து ஒரு பைசா கூட சங்க நடவடிக்கைகள், கூட்டங்கள் அல்லது சங்கத்திற்காக பயன்படுத்தப்படுவதில்லை.”

மிகச்சிறந்த இந்த இரு திட்டப்பணிகளுக்கு நேரம், ஆற்றல் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதில் மிகவும் அர்ப்பணிப்புடன் இருக்கும் இந்த 30 உறுப்பினர்கள் சங்கம் எந்த புதிய உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வதில் உண்மையில் ஆர்வம் காட்டுவதில்லை.

ஒரு ஏழைக்கு அறுவைசிகிச்சை தேவைப்பட்டால், நாங்கள் பணத்தை டெபாசிட் செய்து டாக்டரிடம் தயவுசெய்து சிகிச்சை இல்லாமல் யாரையும் திருப்பிஅனுப்பாதீர்கள் என்று கூறுகிறோம்.

கைக்கெட்டும் விலையில் தரமான கல்வி

மேனேஜ்மென்ட் இன்ஸ்டிடியூட் பற்றி தெரிவிக்கையில் இந்த சங்கத்தின் செக்ரட்டரி குப்தா, 7 ஏக்கர் பரப்பளவில் பரந்திருக்கும் இது, 2008ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்கு B Ed, BSc, BBA, BCA, B Com மற்றும் BA பாடங்களை கிட்டதட்ட 700 மாணவர்களுக்கு வழங்குகிறது, இதில் 300 பேர் பெண்கள் என்றும் கேம்பஸ் மூலம் பணிவாய்ப்பும் இங்கு நடக்கிறது என்றும் கூறுகிறார். “நாங்கள் 50 லட்சம் ரூபாய்க்கு வாங்கிய நிலத்தில் இந்த இன்ஸ்டிடியூட்டைக் கட்டியிருக்கிறோம், அது எங்கள் உறுப்பினர்களால் சேகரிக்கப்பப் பட்ட பணம்.”

சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து உயர்கல்வி பயில விரும்புபவர்கள் ரோட்டரி நிறுவனத்தை அணுகு கிறார்கள், மேலும் தகுதியுள்ள ஏழைகளுக்கு கட்டணத் தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. எனினும், பயிற்சி கட்டணம் ஆண்டுக்கு ரூ.5,000 முதல் 25,000 வரை நியாயமாக இருக்கிறது,

கண் மருத்துவமனைக்கான வருங்காலத் திட்டத்தைப் பற்றி கூறுகையில், முன்னாள் தலைவர்

மருத்துவமனை அல்லது மேனேஜ்மெண்ட் இன்ஸ்டிடியூட் மூலம் உருவாகும் லாபத்திலிருந்து ஒரு பைசா கூட சங்க நடவடிக்கைகள், கூட்டங்கள் அல்லது சங்கத்திற்காக பயன்படுத்தப்படுவதில்லை.

மற்றும் கண் மருத்துவமனையின் செக்ரட்டரி தினேஷ் அகர்வால், ‘‘கடந்த வருடம் நாங்கள் ஆப்டிமெட்ரி இன்ஸ்டிடியூட்டைத் தொடங்கி இரண்டாண்டு ஆப்டிமெட்ரி பாடத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள் ளோம். கண் மருத்துவம் சம்பந்தமாக, நாங்கள் அதை எங்களால் முடிந்த அளவிற்கு சிறந்த நிலைக்கு கொண்டு செல்ல விரும்புகிறோம். பணம் எங்களுக்கு எப்போதுமே ஒரு தடையாக இருந்ததில்லை என்று கூறுகிறார்.

ஒவ்வொரு வெளி நோயாளியிடமும் வெறும் 50 ரூபாய் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு ஏழைக்கு அறுவைசிகிச்சை தேவைப்பட்டால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள், நாங்கள் பணத்தை டெபாசிட் செய்து டாக்டரிடம் தயவுசெய்து சிகிச்சை இல்லாமல் யாரையும் திருப்பிஅனுப்பாதீர்கள் என்று கூறுகிறோம்,’’ என்கிறார்.

30 உறுப்பினர்கள் கொண்ட இந்த சிறிய சங்கத்தால் செய்யப்பட்ட அற்புதமான மனிதாபிமான சேவையைப் பற்றிய ஆச்சரியத்துடனே நான் சந்தௌசியை விட்டு வெளியேறினேன். உ.பி. போன்ற ஒரு மாநிலத்தில் சுகாதாரப் பணிகளில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது பாராட்டத்தக்கது. ஆனால் ரோட்டரி மேனேஜ்மெண்ட் இன்ஸ்டிடியூட் வாயிலாக வழங்கப்படும் தரமான கல்வி மிகவும் பாராட்டத்தக்கது. குறிப்பாக அருகில் உள்ள அரசு கல்லூரியில், பத்தாண்டுகளுக்கும் மேலாக B Com படிப்புக்காக வகுப்புகள் நடைபெறவில்லை. ஆனால் சேர்க்கை நடைபெறுகிறது; மாணவர்கள் தாங்களே படித்துக் கொண்டு, தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெறுகிறார்கள்!

இந்த ரொட்டேரியன்களின் அர்ப்பணிப்பு பற்றி, PDG அகிலேஷ் கொடிவால், ‘இந்த மாவட்டம் ஒரு வருடத்திற்கும் மேலாக மாவட்டத் தகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தாலும், RC சந்தௌசியின் ரொட்டேரியன்கள், அதே அளவிலான ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்புடன் தங்களுடைய திட்டங்களைத் தொடர்ந்தனர், ரோட்டரி டாக்டர்களின் உதவியுடன் தொடர்ந்து போலியோ முகாம்களை நடத்தினர்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

இந்தியாவில் நிதி திரட்டுதல்

உலக அளவில் அதிக நிதி அளிக்கும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. மொத்தம் 19.1 மில்லியன் டாலர் (சுமார் ரூ.131.90 கோடி) திரட்டப்பட்டுள்ளது.

- உலக அளவில் D3141 ரோட்டரி இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஏழு மாவட்டங்கள் 10 லட்சம் டாலர் இலக்கை எட்டியுள்ளன.
- 15 புதிய AKS உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.
- TRFக்கு 69 சதவீத ரோட்டரி சங்கங்கள் பங்களித்துள்ளன.
- TRFக்கு 3080, 3131, 3132 மற்றும் 3212 மாவட்டங்களில் அனைத்து சங்கங்களும் பங்களித்துள்ளன.
- 535 புதிய Major Donorகள் நன்கொடை கொடுத்துள்ளனர்.
- இந்தியாவிலிருந்து 22 சதவீதம் உறுப்பினர்கள் நன்கொடை வழங்கியுள்ளனர். அதில், 3060வது மாவட்டத்திலிருந்து (D 3060) 64 சதவீதம், 3000வது மாவட்டத்தில் (D 3000) 52 சதவீதமும் 3142வது மாவட்டத்திலிருந்து (D 3142) 51 சதவீதமாகும்.

Top 5 Giving Clubs from India:

Zone	District	Club Name	2017-18 Total Contribution
5	3231	Gudiyatham, Tamil Nadu	$457,065.19
6A	3292	Central Butwal, Nepal	$301,000.00
4	3054	Mehsana, Gujarat	$244,384.67
4	3141	Bombay North, Maharashtra	$243,779.31
4	3141	Mumbai Downtown Sea Land, Maharashtra	$232,504.46

ரோட்டரி தினம்

ரொட்டேரியன்கள் 2018-19ம் ஆண்டு உத்வேகம் காட்டவேண்டும் என்று RIP பார்ரி ரஸ்ஸின் வலியுறுத்தியுள்ளார். பெரிய சங்கமோ சிறிய சங்கமோ பல சங்கங்களாக இணைந்து தங்களது சிந்தனைகள், திறமை, ஆதாரங்களைப் பகிர்ந்து கொண்டு ரோட்டரி தினத்தைக் கொண்டாடலாம்.

யோசனைகளுக்கு இணையதளம்: http://www.rotaryleader-en.org/rotaryleader-en/en201807?pg=3#pg3

ஹாம்பர்க் மாநாடு:

ஜெர்மனி ஹாம்பர்க் நகரில் 2019ம் ஆண்டு நடைபெறும் ரோட்டரி மாநாட்டில் பங்கேற்க டிசம்பர் 15ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம். அதற்கான இணையதளம்: http://www.riconvention.org/en/hamburg/register

MyRotaryயில் பதிவு செய்ய

ரோட்டரி அலுவலர்கள் தங்களது உறுப்பினர்கள, ரோட்டரி மாநாட்டிற்கு பதிவு, மின்னஞ்சல் மூலமான சந்தாக்களைப் பராமரிக்க ‘எனது ரோட்டரி’ (My Rotary) பிரிவில் பதிவு செய்துகொள்ளலாம். ரோட்டரிசங்கத் தலைவர்களும் அதைச் செய்யலாம்:

- ரோட்டரி சங்கத்துக்கென குறிக்கோளை வகுத்து அது குறித்த சாதனைகளை Rotary Club Central மூலம் அறிக்கையாக அளிக்கலாம்
- ரோட்டரி உறுப்பினர்கள் குறித்த சந்திப்பு இடம், தேதி ஆகியவற்றையும் பதியலாம்.
- அடுத்த ஆண்டு ரோட்டரி அலுவலர்கள் பட்டியலை டிசம்பர் 31ம் தேதிக்குள் அளிக்கலாம்
- உறுப்பினர்களின் மின்னஞ்சல் முகவரிகளை இணையம் வழியாகப் புதுப்பிக்கலாம்.
- ஆன்லைன் டைரக்டரியை பார்த்துக் கொள்ளலாம்

ரோட்டரி – கார்ப்பரேட் சமூகப் பங்களிப்பு கூட்டு

கார்ப்பரேட் நிறுவனங்களுடன் பணியாற்றியதன் மூலம் 2016ம் ஆண்டு அக்டோபர் முதல் TRF (இந்தியா) $14 லட்சம் பெற்றுள்ளது.

கார்பரேட் நன்கொடையாளர்கள்

Vajpayee...

orator, economic reformer, affable politician

Shakti Sinha

It was an irony of fate that a communicator par excellence as Atal Bihari Vajpayee had to spend almost the last decade of his life in virtual silence. If irony has a macabre element, this was it. Fortunately for Atalji, as he was popularly known, history and succeeding generations would remember him for his myriad achievements. And for his eloquence. It was often said that the Goddess Saraswati had stationed herself on his tongue because what he spoke was genuine wisdom and not just fine words.

The conventional opinion about him is that he was a conciliator, which he was, but that's not the full picture. On key issues, once he had come to a conclusion, there was no going back. His infinite capacity was to listen, try and understand different points of view and try and

With Pakistan Prime Minister Nawaz Sharif. Also seen in the picture (from R) Jaswant Singh, Sartaj Aziz and Mushahid Hussain.

With L K Advani.

arrive at a consensus, not at the lowest common denominator. This meant that even junior officers in the course of official briefing could speak up. Because he used to be so absorbed in listening, he gave the impression that he had wandered off. But ever so often, he would ask for a clarification, linking something said to an earlier statement. That meant that no loose statements could be made.

For me, it was doubly difficult as I had to also pay close attention as he would sometime wonder why X had said Y! The mind, ever alert, was sifting information, analysing it and coming to a conclusion. It was normally not instantaneous, but once a decision was made, there was no going back.

I remember after the Kargil war he told Yashwant Sinha, the then Finance Minister, to go ahead with taking tough decisions, if required, to pay for the war. He was clear that people would understand, if a case was made out.

The empathy factor

I would attribute part of his success as a statesman to the empathy factor. Once, when advised to put greater pressure on Nawaz Sharif, his reply was classic — put yourself in Nawaz Sharif's shoes. There was silence and the issue was not raised again.

To give a further example of his capacity for empathy, once there was a stormy discussion in Parliament over Deve Gowda's decision to hike the price of urea or some other fertiliser. Atalji's reaction was classic. Though he himself had spoken against the hike, he told me in private that Deve Gowda would not roll back the hike despite the near universal demand. He recognised Deve Gouda's obstinacy, but more than that revealed his astute understanding that the latter was asserting his leadership over his coalition partners.

But he was also very generous and far-sighted. When, during the tenure of the same government, Mulayam Singh as Defence Minister made a statement in the Lok Sabha about the successful conclusion of the Sukhoi deal, he got up, broke parliamentary tradition and praised the government for concluding the deal, which was in the national interest. This praise took not just the members but also the minister by surprise. I remember that a senior BJP parliamentarian expressed surprise, even bewilderment, to me as to why Atalji had to praise Mulayam Singh's actions! The answer, I guess, was that some things were above party politics.

Economic reformer

After Atalji formed the government in 1998, we had a series of meetings on what should be the priorities of the government on the economy front. India was then facing the adverse effect of the Asian crisis and something concrete had to be done. While we struggled and were thinking of some big announcement that would catch the national imagination, he felt that better roads were the need of the hour.

We were five or six in the room, some with much greater exposure

> He was generous and far sighted. When Mulayam Singh as Defence Minister announced the successful conclusion of the Sukhoi deal, Atalji broke parliamentary tradition and praised the government, surprising everyone.

to economics, but he was the one who recognised the importance of roads as the minimum requirement for solid economic development. That led to the launching of the Golden Quadrilateral and the North-South East-West national highway development programme. Later, the Pradhan Mantri Gram Sadak Yojana was added to it so that the rural areas did not get left out of the connectivity network. Today we take decent roads for granted and aspire for world-class access-controlled highways that are now coming up. This was unimaginable prior to 1998. This initiative's contribution to the Indian growth story cannot be over-estimated. At that meeting he resisted the populist impulse that we, the less-experienced, offered.

At Pokhran after the successful nuclear tests in 1998. Also in the picture: George Fernandes and former Indian President Abdul Kalam who was then Scientific Advisor to the Prime Minister.

Pokhran blast

கண்டதும் காதல் என்பார்கள். அந்த அனுபவம் எனக்கு 10 வயதிலேயே குச்சுப்புடி நடனத்தைப் பார்த்த மாத்திரத்தில் ஏற்பட்டுவிட்டது. குச்சுப்புடி நடனத்தால் உலகையே ஈர்த்த ஜாம்பவான் வேம்பட்டி சின்னசத்தியம் வழங்கிய நாட்டியத்தைப் பார்க்க என் தாயார் அழைத்துச் சென்றார்.

அவர் ஆந்திர மாநிலம் குச்சுப்புடி கிராமத்திலிருந்து இரண்டே இரண்டு ரூபாய் மற்றும் ஏராளமான கனவுகளோடும் சென்னைக்கு வந்து குச்சுப்புடி கலையைப் படிப்படியாக வளர்த்து உலகத் தரம் வாய்ந்த பயிற்சி நிறுவனத்தை அமைத்து சாதனை புரிந்தார்.

அவர் சென்னையில் 1963ம் ஆண்டு குச்சுப்புடி அகாடமியைத் தொடங்குவதற்கு முன்பு எங்கள் வீட்டுக்கு அருகே ஒரு தெருவில் சிறிய அறைகளில்தான் குச்சுப்புடி நாட்டியத்தைச் சொல்லிக் கொடுத்து வந்தார். எனது தாயார் ஆந்திரப் பண்பாட்டை எனக்குள் ஊட்டவேண்டும் என்பதற்காக அவரிடம் நாட்டியம் கற்க அனுப்பினார். வேம்பட்டியின் ஆரம்பகால மாணவிகளில் நானும் ஒருத்தி. ஏற்கெனவே எனக்கு நாட்டியம் கற்றுத் தர என் தாயார் ஏற்பாடு செய்தார். சரியாக கற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் அம்மா என்னை வேம்பட்டியிடம் அனுப்பினார். “நமக்கு எங்கே கலை வரப்போகிறது, ஏதோ இவர் கஷ்டப்படுகிறாரே என்றுதான் அம்மா அனுப்புகிறார்” என்றுதான் நினைத்தேன்.

ஆனால், குச்சுப்புடியை வேம்பட்டி சின்னசத்தியம் கற்றுத்தரும் விதத்தால் கவரப்பட்டேன். ஆர்வம் அதிகரித்தது. எனக்குள் ஒரு நாட்டியக் கலைஞர் இருப்பதே அப்போதுதான் உணர்ந்தேன். அதனால், குச்சுப்புடி நாட்டியத்தைக் காதலித்தேன்.

குச்சுப்புடி என்று எல்லோரும் குறிப்பிட்டாலும் அதை உண்மையில் கூச்சிபுடி என்றுதான் உச்சரிக்க வேண்டும். ஆந்திரப் பிரதேசத்தில் குசேலபுரம் அல்லது குசிலவபுரம் என்ற கிராமத்தின் பெயரிலிருந்துதான் அச்சொல் உருவானது. கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள குசேலபுரம் கிராமத்தில் ஏராளமான புலவர்கள், கலைஞர்கள் வாழ்ந்து வந்தனர். ஆந்திர மாநிலத்தில் நாட்டியக் கலை கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே வளர்ந்து, 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஜயநகர சாம் ராஜ்யத்தின்போது மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டது. குசேலபுரம் கிராமத்தில் 17ம் நூற்றாண்டில் குச்சிப்புடி என்ற நாட்டியக் கலை வகை உருவாக்கப்பட்டது. விஜயநகரம் வீழ்ச்சி அடைந்த பிறகு, அன்னியர் படையெடுப்பின் காரணமாக கலைகளில் வீழ்ச்சி தென்படத் தோன்றியது.

நாட்டியக் கலைஞர்கள் உள்பட ஏராளமான கலைஞர்கள் பிழைப்பு தேடி “வந்தாரை வாழவைக்கும்” தமிழகத்தில் குடிபெயர்ந்தனர். அச்சுதப்ப நாயக்கர் அவர்களில் பலருக்கு நிலம் கொடுத்து வாழச் செய்தார். அங்கே அந்தக் கலைஞர்கள் மெலட்டூர் பாகவத மேளா என்ற நாட்டியத்தைப் பிரபலப்படுத்தினர். அப்போது, ஆண்கள்தான் நாட்டியம் ஆடுவர். ஊர் ஊராகப் பயணம் செய்து புராணங்களின் அடிப்படையில் கதைகளை அமைத்து நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை வழங்கினர்.

நவாபின் பரிசு

17ம் நூற்றாண்டில் கோல்கோண்டாவை ஆண்ட நவாப் ஹபுல் ஹஸன் குதீப் தானிஷா என்பவர் ஆட்சி செய்து வந்தார். ஒருமுறை ஒரு குழு நடத்திய நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்தார். அதனால் கவரப்பட்ட அவர் அந்தக் குழுவினருக்கு குசேலப்பரம் என்னும் கிராமத்தில் நிலம் பரிசாக வழங்கி, அந்தப் பாரம்பரிய நாட்டியக் கலையைத் தொடர்ந்து பல இடங்களில் நடத்தி பரப்பவேண்டும் என்று உத்தர விட்டார்.

இதன் விளைவாக குச்சிப்புடி நாட்டியம் சாதி, மதம், இனம், மொழி கடந்து பரவுவதற்கு வழியேற்பட்டது. அந்த நாட்டியக் குழுக்கள் நாட்டியத்தில் புதிய உத்திகளைப் புகுத்தியும் வளர்ந்தது.

அதே சமயம் யதி நாராயண தீர்த்தரும், அவரது சீடர் சித்தேந்திர யோகியும்தான் தனது வாழ்நாளை அர்ப்பணித்து குச்சுப்புடி நடனத்தை பாரம்பரியத்தின் அழகோடு வளர்த்தனர் என்கிறார்கள். அதுவும் சித்தேந்திர யோகி குசேலபுரம் கிராமத்தையே குச்சிப்புடி நாட்டியத்தின் தொட்டிலாக மாற்றினார். அங்கு ஒவ்வொரு ஆண் குழந்தையையும் நாட்டியத்துக்காக அர்ப்பணிக்கும்படி மக்களைத் தூண்டினார். குசேலபுரத்தை குச்சுப்புடி கிராமமாகவே மாற்றினார். பாமா கலாபம் உள்ளிட்ட சில நாட்டிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து குச்சுப்புடியை மெருகூட்டி அழகாக்கினார்.

வரலாற்றின் மாறுதல்களுக்கு ஏற்ப குச்சுப்புடி நாட்டியத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக் காலத்தில் வீர சைவ நெறி ஆந்திர மண்ணில் வேரூன்றி வளர்ந்தபோது, யட்ச கான பாணியில் சிவ பெருமானின் லீலைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

பிறகு, வைணவ நெறி பரவியபோது, தமிழகத்தின் பாகத மேளா பாரம்பரியத்துக்கு நெருக்கமான வடிவில் நாட்டிய நாடகங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குச்சுப்புடி பாகவதலு என்று அழைக்கப்பட்ட நாட்டியக் கலைஞர்கள் விஷ்ணுவின் லீலைகளைச் சித்திரிக்கும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தி, பிரபலப்படுத்தினர். வேதாந்தம் லட்சுமிநாராயண சாஸ்திரி, வேம்பட்டி வேங்கடநாராயண சாஸ்திரி, சிந்த வேங்கடராமையா போன்றோர் இதில் பெரிய அளவில் பங்களிப்புச் செலுத்தினர்.

இவர்களில் வேதாந்தம் லட்சுமி நாராயண சாஸ்திரி பெண்களை ஈடுபடுத்தி, புரட்சி செய்தார்.

நாடு சுதந்திரம் பெற்றபின், உலக நாட்டிய வரைபடத்தில் குச்சிப்புடிக்கு ஓர் இடத்தைப் பெற்றுத் தந்தவர் வேம்பட்டி சின்னசத்தியம். அவரால்தான் மறுமலர்ச்சி கண்டது. மிகச் சிறந்த நாட்டியக் கலை மாமேதையான அவர் குச்சுப்புடி நாட்டிய வடிவத்தின் புனிதம், பாரம்பரியம் மாறாமல் ஓர் ஒழுங்கமைவை ஏற்படுத்தினார். அதனால், உலக அளவில் பரவியது.

''பாப்பா'' ரத்னா குமார்.

சிறந்த பரத நாட்டியக் கலைஞர்களான வைஜயந்திமாலா பாலி, ஹேமமாலினி, ராதா, லட்சுமி விஸ்வநாதன், ரத்னா (பாப்ப) குமார் உள்ளிட்ட பலர் வேம்பட்டியின் அறிவுரைப்படி குச்சுப்புடி நாட்டிய அகாடமியில் கற்றுக் கொண்டனர். அவர்களில் ரத்னா (பாப்பா) குமார் வேம்பட்டி பாணியை உலகளவில் பரப்புவதற்காக அமெரிக்காவில் குச்சுப்புடி நாட்டியக் கலை நிறுவனத்தை 1975ம் ஆண்டு முதல் முதலில் நிறுவினார்.

குச்சுப்புடி என் வாழ்க்கையே மாற்றிவிட்டது. எட்டு வயதில் இருந்தபோது, நான் வேதாந்தம் ஜகந்நாத சர்மாவிடம் கொஞ்சம் குச்சுப்புடி கற்றுக் கொண்டேன். பிறகு, வேம்பட்டி பெத்த சத்தியத்திடம் சிறிது கற்றேன். ஓராண்டுக்குப் பின் வேம்பட்டி சின்ன சத்தியத்திடம் மேலும் பயிற்சி எடுத்து எனது கலையை மேம்படுத்திக் கொண்டேன்.

எனக்கு 14 வயது இருந்தபோது, துரதிர்ஷ்டவசமாக அம்மை பாதிப்பால் தழும்புகள் ஏற்பட்டு, அழகையை இழந்தேன். என் வாழ்க்கையில் அதிசயத்தை ஏற்படுத்தியது குச்சிப்புடி நாட்டியம்தான்!

எனக்கு 14 வயது இருந்தபோது, துரதிர்ஷ்டவசமாக அம்மை பாதிப்பால் தழும்புகள் ஏற்பட்டு, அழகையை இழந்தேன். கண் பார்வை பாதிக்கப்பட்டது. இவையெல்லாம் மனத்தளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. என் வாழ்க்கையில் அதிசயத்தை ஏற்படுத்தியது குச்சிப்புடி நாட்டியம்தான்! என்னை முழுமையாக மீட்டெடுத்தது. உடல் மொழி மேம்பட்டது. குச்சுப்புடி மீது காதல் ஏற்பட்டது. 10 ஆண்டுகள் கற்றுக் கொண்டேன். புதிய உத்வேகம், உற்சாகம் எனக்குள் ஏற்பட்டது. இப்படியெல்லாம் நடக்கும் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை என்று உணர்ச்சி மேலிடக் கூறினார்.

இந்தியாவின் எல்லா சாஸ்திரீய நாட்டியக் கலைஞர்களைப் போலவே, குச்சுப்புடியும் பண்டைய கலையின் நாட்டிய சாஸ்திரக் கூறுகளைக் கொண்டிருந்தது. பரத நாட்டியத்தின் பல அம்சங்கள் அதில் இருந்தன. அதே சமயம் அந்த நாட்டியத்திற்கென தனிச் சிறப்பும் மேலோங்கியிருந்தது. பாரம்பரிய குச்சுப்புடி நாட்டியத்தில், ஒரு கதாபாத்திரத்தை அறிமுகம் செய்வதற்கு சுருக்கமான பிரவேச தரவு

என்ற அறிமுக நாட்டியம் இடம்பெறும். சென்ற நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் பெண் வேடங்களையும் ஆண்களே ஏற்று நடித்தனர். சிலர் பாரம்பரியத்திலிருந்து மாறாமல், அதையே கடைப்பிடித்தும் கலையை வளர்த்தனர்.

பின்னர் வேம்பட்டி சத்திய நாராயண சர்மா புராண, வரலாற்று நாயகியரை மையமாகக் கொண்டு நாட்டியத்தை வடிவமைத்தார். ''பாமா கலாபம்'' நாட்டியத்தில் ''சத்தியபாமா'' என்ற கதாநாயகி, ''உஷா பரிணயம்'' நாட்டியத்தில் ''உஷா'' என்ற முக்கிய கதாபாத்திரம், ''மோகினி ருக்மாங்கதா'' என்ற நாட்டியத்தில் ''மோகினி'' என்ற கதாநாயகி, ''சசிரேகா'' நாட்டியத்தில் ''சசிரேகா'' மற்றும் ''கொல்ல கலாபம்'' நாட்டியத்தில் ''கொல்லபாமா'' என நாயகியருக்கு முக்கியத்துவம் அளித்து நாட்டிய நாடகங்களை வழங்கினார்.

சத்தியபாமா வேடத்தை நான் போட்டு தயாராவதற்கு இரண்டு மணி நேரம் ஆகிவிடும். ஆனால், மேடையில் நாட்டியத்தை வழங்கும்போது, எனது வயதையும் நான் ஆண் என்பதையும் மக்கள் மறந்துவிடுவார்கள் என்றார் கலா கிருஷ்ணா.

வேம்பட்டி சின்னசத்தியம் நாட்டியத்துக்கு மேலும் மெருகூட்டினார். ''ஸ்ரீ கிருஷ்ண பாரிஜாதம்'', ''க்ஷீர சாகர மாதனம்'', ''ஸ்ரீநிவாச கல்யாணம்'', ''விப்ரநாராயணா'', ''சாகுந்தலம்'' ஆகிய பல நாட்டியங்களை மேடையேற்றி பல மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

யதி நாராயண தீர்த்தர் வழங்கிய ''கிருஷ்ணலீலா தரங்கிணி'' இசை நாட்டிய நாடகம் மிகவும் பிரசித்தி பெற்றது. அதில், ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் இலக்கிய நயம்பட இசையோடு கூடிய நாட்டியத்தை இணைத்து அளித்தார். அப்போதுதான் தரங்கம் என்ற வடிவம் அறிமுகம் ஆனது. அதில், பித்தளைத் தட்டின் மீது ஒரே ஓர் நாட்டியக் கலைஞர் நின்றபடி நடனமாடுவது, சிலர் தண்ணீர்க் குடங்களைக் கரகம் போல தலையில் ஏந்தியபடி நாட்டியமாடுவர்.



குச்சுப்புடி குரு வேம்பட்டி சின்னசத்யம்.

சித்தேந்திர யோகி வடிவமைத்த பிரபந்த நர்த்தனம் என்ற நாட்டிய வகையில் வழங்கப்பட்ட ''பாமா கலாபம் மிகச் சிறந்த நாட்டியமாகும். அதில், சொற்சிலம்பத்துடன் சிக்கலான நாட்டியமும் இடம்பெறும்.

குச்சிப்புடி கவுத்வம் என்ற வகை நாட்டியம் முற்றிலும் வித்தியமாசமானது. இது மிக மிகக் கடினமானது. மயில், சிம்மானந்தினி கவுத்வம் போன்ற நாட்டிய நிகழ்ச்சி களில் மேடையில் வண்ணப் பொடிகளைத் தூவியிருப்பார்கள். அதன் மீது வெள்ளைத் துணியையோ காகிதத்தையோ அமைத்திருப்பார்கள். நாட்டியக் கலைஞர் இசைக்கு ஏற்ப மேடையில் நாட்டியம் ஆடுவார். அவர் வண்ணப் பொடிகள் மீது வைக்கப்பட்ட வெள்ளைத் துணியின் மீது நாட்டியம் ஆடி முடிப்பார். அந்தத் தாளையோ வெள்ளைத் துணியையோ எடுத்துப் பார்த்தால், வண்ணத்தில் மயில், சிங்கம் போன்ற ஓவியம் அமைந்திருக்கும்.

(மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த மன்னாதி மன்னன் திரைப்படத்தில் நாட்டிய மேதையான மன்னன் (எம்ஜிஆர்) வண்ணக் குழம்பில் கால் பதித்து நாட்டியம் ஆடுவார். அவர் கால் பதித்த இடத்தில் இறுதியில் சிங்க வடிவமாக உருவாகியிருக்கும். அதுவும் இதுபோன்ற வகைதான்!)

குச்சுப்புடி நாட்டியம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இன்று மிகவும் போற்றப்படுகிறது. 20ம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் பிராமணர்கள் மட்டுமே கற்றுக் கொள்ளவேண்டும் என்ற குறுகிய நிலை மாறி, திறமையும் ஆர்வமும் உள்ள யாரும் கற்றுக் கொள்ளலாம் என்று விரிந்துவிட்டது. அது போல் ஆண்கள் மட்டும் கற்கும் நிலையும் மாறி, ஏராளமான பெண்கள் இத்துறையில் ஜொலிக்கிறார்கள். பல பெண்கள் ஆண் வேடங்களிலும் நாட்டியமாடி அசத்தி வருகிறார்கள்.

ஒரு கலை காலத்துக்கு ஏற்ப மாறி, நெளிவுசுளிவோடு இருந்தால், பரவும். விரிவடையும் என்பதற்கு குச்சுப்புடி உதாரணம்.■

17ம் நூற்றாண்டில் கோல்கோண்டாவை ஆண்ட நவாப் ஹபுல் ஹஸன் குதீப் தானிஷா என்பவர் குசேலப்பரம் என்னும் கிராமத்தில் நிலம் பரிசாக வழங்கி, அந்தப் பாரம்பரிய நாட்டியக் கலையைத் தொடர்ந்து பல இடங்களில் நடத்தி பரப்பவேண்டும் என்று உத்தர விட்டார்.

ரத்னா பாப்பா குமார், குச்சுப்புடி நடனக்கலைஞர்

Top 10 Districts from India Total Contributions

India Rank	District	Total Contribution (USD)
1	3141	2,157,938
2	3000	1,271,692
3	3131	1,215,843
4	3190	1,134,867
5	3231	1,115,668
6	3060	1,097,666
7	3232	1,048,630
8	3011	880,295
9	3201	856,750
10	3142	679,954

Rotary

Rotary at a glance

Rotarians : 12,04,289

Clubs : 35,712

Districts : 538

Rotaractors : 2,58,198

Clubs : 11,226

Interactors : 5,28,701

Clubs : 22,987

RCC members: 2,28,597

RCC : 9,939

Membership Summary

As on August 1, 2018

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	113	4,681	219	64	229	170
2982	68	2,919	130	65	112	46
3000	127	5,074	436	297	671	195
3011	80	3,424	713	58	110	25
3012	85	3,421	664	41	128	56
3020	78	3,992	229	117	466	351
3030	88	4,686	542	84	304	164
3040	96	2,132	224	62	124	140
3053	69	2,776	456	20	56	95
3054	128	5,874	939	96	319	469
3060	100	4,176	496	64	123	137
3070	103	2,913	282	68	158	57
3080	77	3,220	218	74	216	108
3090	76	2,017	55	32	37	122
3100	71	1,709	84	11	72	146
3110	114	3,866	322	51	49	104
3120	74	3,177	384	38	61	52
3131	129	5,201	1,103	115	284	90
3132	97	3,650	357	66	211	150
3141	90	5,153	1,104	120	254	83
3142	94	3,236	552	72	196	65
3150	98	3,525	335	93	234	109
3160	71	2,408	123	30	48	81
3170	125	5,393	467	62	310	161
3181	73	3,073	241	35	181	105
3182	83	3,153	230	37	275	95
3190	131	4,892	605	155	359	51
3201	141	5,287	332	104	132	49
3202	129	4,792	232	105	436	46
3211	139	4,445	273	14	89	124
3212	98	4,004	356	114	280	142
3231	78	3,054	220	56	203	239
3232	107	4,325	641	150	321	80
3240	88	2,985	339	65	151	154
3250	98	3,830	657	51	209	183
3261	70	2,567	343	17	102	42
3262	90	3,294	398	48	73	75
3291	145	3,686	683	82	132	596
India Total	**3,721**	**1,42,010**	**15,984**	**2,833**	**7,715**	**5,157**
3220	66	1,824	240	86	199	76
3271	81	1,416	249	54	16	13
3272	161	2,859	401	46	37	38
3281	205	5,545	803	237	92	187
3282	143	4,055	441	134	48	41
3292	117	4,386	639	124	117	108
S Asia Total	**4,494**	**1,62,095**	**18,757**	**3,514**	**8,224**	**5,620**

Source: RI South Asia Office

அஞ்சல் தலைக்குப் பின் அழகான கதை!

பிரதீப் ஜெயின்

ரோட்டரியைக் கவுரவப்படுத்தும் வகையில் 150 நாடுகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் தலைகளை வெளியிட்டிருக்கின்றன என்பது தெரியுமா? வேறு எந்த அமைப்புக்கும் இல்லாத வகையில் அதிக அளவு ரோட்டரிக்குத்தான் இத்தகைய கவுரவம் கிடைத்திருக்கிறது.

ரோட்டரிக்கு முதல் முறையாக அஞ்சல் தலையை 1931ம் ஆண்டு ஆஸ்திரியா நாடுதான் வெளியிட்டது. வியன்னாவில் நடைபெற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் மாநாட்டையொட்டி ஆறு வகையான தபால்தலைகள் அப்போது வெளியிடப்பட்டன. 1955ம் ஆண்டுமட்டும் 27 நாடுகள் பல்வேறு நிகழ்வுகளையொட்டி 80க்கும் மேற்பட்ட தபால் தலைகளை வெளியிட்டுள்ளன. ரோட்டரி அமைப்பின் 50வது ஆண்டு விழாவையொட்டி அஞ்சல் தலையை வெளியிட்ட முதல் நாடு பெல்ஜியம்தான்.

அஞ்சல் தலை சேகரிப்பது ஒரு முக்கிய பொழுதுபோக்கு. அஞ்சல் தலை சேகரிப்பதை ஆங்கிலத்தில் ஃபிலடலி (philately) என்று குறிப்பிடுகிறார்கள். இந்தச் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. கிரேக்கத்தில் philos என்றால் அன்பு என்றும் atelic என்றால் வரியில்லாமல் என்றும் பொருள். அதாவது, இதைப் பெறுபவர் வரி செலுத்தவேண்டாம் என்பது பொருள்.

தபால் தலை சேகரிப்பு (philately) என்பது ஓர் ஆராய்ச்சிப் பணியாகும். தபால் தலைகளைச் சிலர் பயன்படுத்துவதற்காகச் சேகரித்து வைத்திருப்பார்கள். சிலர் தபால் தலைகளின் வடிவம், அதன் காகிதம், தெரிவிக்கும் கருத்து, இதர அடையாளங்கள், வேறுபாடுகள், நாடுகள் என்ற அடிப்படையில் சேகரிப்பார்கள்.

மற்ற பொழுதுபோக்குகளை விட அஞ்சல் தலை சேகரித்தல் பலன் தருவதாகும். அஞ்சல் தலை சேகரிக்கும்போது, வரலாறு, கலை, கலாசாரம், புவியியல், அறிவியல், பல்வேறு அமைப்புகள் என பல விஷயங்களைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைக்கும். செலவில்லாதது.

ரோட்டரி இன்டர்நேஷனல் பல்வேறு துறைகளில் 75 ஃபெலோஷிப்களை வழங்கி வருகிறது. அஞ்சல் தலை சேகரிப்பு குறித்த ரோட்டரி (Rotary on Stamps) என்பது பொழுதுபோக்கு மற்றும் தொழில் சார்ந்த பெல்லோஷிப்கள் (Recreational and Vocational Fellowships) அளிக்க உதவும் ரோட்டரியின் பிரிவாகும். உலகம் முழுதுமுள்ள RI அமைப்பு, அதன் மாவட்ட, உள்ளூர் ரோட்டரி சங்கங்கள், சேவைத் திட்டங்கள் தொடர்பாகவும் RI கொள்கை சார்ந்ததாகவும் வெளியிடப்படும் அஞ்சல் தலைகளைச் சேகரிப்பதாகும்.

இதுபோல் பயனுள்ள பொழுதுபோக்குகளிலும் தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டும் ரொட்டேரியன்கள் மேலும் வெளிச்சம் பெறவும் ஃபெலோஷிப் பெறுவதற்கும் ஊக்கம் பெறுகிறார்கள் என்று RI குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் ரோட்டரி அஞ்சல் தலைகள் பல முறை வெளியிடப்பட்டுள்ளன.

புது தில்லியில் 1987ம் ஆண்டு நடைபெற்ற ஆசிய மண்டல மாநாட்டை ஒட்டியும், போலியோ சொட்டு மருந்து செலுத்துவது குறித்த இயக்கத்தையொட்டி 1998ம் ஆண்டும் ரோட்டரி அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. அதே ஆண்டு

ரோட்டரிக்கு முதல் முறையாக அஞ்சல் தலையை 1931ம் ஆண்டு ஆஸ்திரியா நாடுதான் வெளியிட்டது.

நான் 1974ம் ஆண்டு ரோட்டராக்ட் அமைப்பில் சேர்ந்ததுதான் எனது ரோட்டரி பயணத்தின் தொடக்கம். பிறகு 1971ம் ஆண்டு ரோட்டரியில் அஞ்சல் தலை சேகரிப்பு என்ற பிரிவில் இணைந்தேன்.

ஒரு முறை ரோட்டரி அஞ்சல் தலைகள் குறித்தும் அதன் ஃபெலோஷிப் குறித்தும் தி ரோட்டேரியன் இதழில் படித்தேன். அதையடுத்து அஞ்சல் தலை சேகரிப்பு குறித்த ரோட்டரி (Rotary on Stamps or RoS) பிரிவில் உறுப்பினராக இணைந்தேன். அந்த அமைப்பு காலாண்டு இதழை வெளியிட்டு வருகிறது. RI நடத்தும் ஒவ்வொரு மாநாட்டிலும் RoS அமைத்து வருகிறது. ரொட்டேரியன்கள் தாங்கள் சேகரித்துள்ள அஞ்சல் தலைகளைப் பார்வைக்கு வைக்கிறார்கள்.

அமெரிக்கா லாஸ் வெகாஸில் 1986ம் ஆண்டு நடைபெற்ற RI மாநாட்டின் போது அஞ்சல் தலை சேகரிப்பு குறித்த RoS கூட்டத்தில் பங்கேற்றேன். அதையடுத்து, சிங்கப்பூர், பாங்காக், இங்கிலாந்து பெர்மிங்ஹாம் ஆகிய இடங்களிலும் நடந்த மாநாடுகளில் பங்கேற்றேன் என்கிறார் கட்டுரை ஆசிரியர்.

சட்டம் குறித்த ரோட்டரி கவுன்சிலை சிறப்பிக்கும் வகையில் ரூ.8 மதிப்புள்ள அஞ்சல் தலை ஜனவரி 12ம் தேதி தில்லியில் வெளியிடப்பட்டது. இவற்றுடன் ரோட்டரி நூற்றாண்டைக் கொண்டாடும் விதத்தில் 2005ம் ஆண்டு சிறப்புத் தபால் தலையும் வெளியிடப்பட்டது.

ஒரு காலத்தில் நாடு முழுவதும் ரோட்டேரியன்கள் தனிப்பட்ட முறையிலும், ரோட்டரி சங்கங்களின் மூலமும், மாவட்டங்கள் வழியாகவும் ரோட்டரி நற்பணிகள் குறித்து வரலாறு படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் அஞ்சல் தலைகளின் மூலம் அதைச் சாதித்துக் காட்டிவிட்டனர்.

இது குறித்த மேலும் தகவல்களை அறிந்துகொள்ள இணையதளம்: http://www.rotaryonstamps.org/

கட்டுரை ஆசிரியர்
RC பாட்டலிபுத்ரா
D 3250வை சேர்ந்தவர்.

D 3131 கின்னஸ்
சாதனையை நிகழ்த்தியுள்ளது

ரோட்டரி நியூஸ் குழு

உடலுறுப்பு தானத்திற்காக பிரமாண்டமான அளவில் 23,181 உறுதிமொழிகள் செய்ததன் மூலம் ‘எட்டு மணிநேரத்தில் உடலுறுப்பு தானத்திற்காக ஆன்லைனில் அதிகபட்சமானோர் பதிவு செய்தது’ என்ற ஒரு புதிய கின்னஸ் சாதனையை புனே காந்திபவன் (D 3131) ரோட்டரி சங்கம் நிகழ்த்தியுள்ளது. இந்த நிகழ்விற்கு நாடு முழுவதும் 950 நகரங்களைச் சேர்ந்த மக்கள் பதிவு செய்தனர்.

“நெருங்கிய உறவினர் ஒருவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாக சமீபத்தில் இறந்தார், இது தான் என்னை இந்த முயற்சி செய்யத் தூண்டியது,’’ என்கிறார் சங்க பிரசிடென்ட் அம்ருதா தியோகான்கர்.

புனேவில் உள்ள சாஹ்யத்ரி ஹாஸ்பிட்டலுடன் இணைந்து, உடலுறுப்பு உறுதிமொழி எடுப்பதற்காக ஒரு இணையதளம் www.giftlife.co.in உருவாக்கப் பட்டது. மண்டல உடலுறுப்பு மாற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஆர்த்தி கோகலே வழிகாட்டியாக இருந்தார். இது சமூக மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பு மூலமாக இந்த நிகழ்வை DG சைலேஷ் பலேகர் விளம்பரப்படுத்தினார், உள்ளூர் சேனல்கள் மற்றும் ரேடியோ சேனல்களில் ஒளிபரப்பப்பட்டது. இந்த நகரத்தில் உள்ள நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் உள்ளவர்கள் தங்களின் உறுதி மொழியை பதிவு செய்ய சிறப்பு கூடங்களை 300க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் அமைத்தனர்.

DG சைலேஷ் பலேக்கர் மற்றும் சங்கத்தலைவர் அம்ருதா தியோகான்கர்

மகாராஷ்டிரா மாநில அளவிலான பந்த் மற்றும் சில பகுதிகளில் இணையசேவை முடக்கம் போன்ற சவால்களை ரொட்டேரியன்கள் சந்திக்க வேண்டியிருந்தது, “அன்றைய நாளின் முடிவில் கின்னஸ் சான்றிதழை கையில் வைத்திருந்து என்னை ஆச்சர்யப்படுத்தியது,’’ என்று குதூகலிக்கிறார் அம்ருதா. NOTTO டைரக்டர் டாக்டர் விமல் குமார் பந்தாரி தான் கின்னஸ் உலக சாதனைகளுக்கு தீர்ப்பளிப்பவராக இருந்தார்.

உங்களது பயிற்சியாளர் உங்களுக்கு ஏற்றவரா?

டாக்டர் ஷீலா நம்பியார்

நீங்கள் உங்களது உடற்பயிற்சி பயணத்தை தொடங்கி இருந்தாலும் அல்லது ஏற்கனவே அதில் ஈடுபட்டிருந்தாலும், நீங்கள் ஒரு தனிப்பட்ட பயிற்சியாளரை கற்றுக்கொடுக்கவும், வழிநடத்தவும் வைத்துக் கொள்ள விரும்பலாம். பெரும்பாலானோர் தங்களது பயிற்சியாளர் கூடுதல் உத்வேகத்தை வழங்குவார் என்று நம்பிக்கை வைத்திருப்பார்கள். எனவே நீங்கள் சரியான பயிற்சியாளருடன்தான் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பதை எப்படித் தெரிந்து கொள்வீர்கள், மேலும் அவர் உங்களுக்கு ஏற்றவர் தான் என்பதை எவ்வாறு முடிவு செய்வீர்கள்?

பயிற்சியாளர்களுக்கு சான்று அளிக்கும் விதத்தில் பல அமைப்புகள் இருக்கின்றன. அவை IFAA-இந்தியா, (இண்டர்நேஷனல் ஃபிட்னஸ் அண்ட் ஏரோபிக் அகாடமி), ACE (அமெரிக்கன் காலேஜ் எக்ஸர்சைஸ்), ACSM (அமெரிக்கன் காலேஜ் ஆஃப் ஸ்போர்ட்ஸ் அண்ட் மெடிசின்) அல்லது நேஷனல் அகாடமி ஆஃப் ஸ்போர்ட்ஸ் மெடிசின் மற்றும் பல. உங்களது பயிற்சியாளர் தகுதி வாயிலாக உடற்பயிற்சி நிபுணராக இருக்கலாம், அவர் வலுவூட்டும் பயிற்சிகள் அல்லது பிளேட்டுகள் போன்ற குறிப்பிட்ட துறையில் தனித்துவம் பெற்றவராக இருக்கலாம். பல பயிற்சியாளர்கள் ஒருவேளை தடகள வீரர்களாகவும் அல்லது விளையாட்டு வீரர்களாகவும் அல்லது பாடி பில்டர்களாகவும் இருக்கக்கூடும், அவர்கள் உடற்பயிற்சி வசதிகளால் ஈர்க்கப்பட்டு அவர்களது வாடிக்கையாளர்களுடன் பணியாற்ற பயிற்சி பெற்று இருப்பர். ஒரு பயிற்சியாளருடன் நீங்கள் உங்களது பணியை துவங்குவதற்கு முன்பாக அவரது பின்புலம் குறித்து சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களது பயிற்சியாளரின் திறனும் அறிவும் முக்கியம் என்றாலும், அதைக் காட்டிலும் மிக முக்கியமானது அவரது தனிப்பட்ட நபர்களுக்கிடையேயான திறன், உணர்ச்சி ரீதியான மற்றும் சமூக அறிவு மற்றும் வழிகாட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கான திறன் போன்றவையாகும்.

உங்களது பயிற்சியாளரின் உடற்பயிற்சி தத்துவம் என்ன?

உங்களது பயிற்சியாளரின் உடற்பயிற்சி குறித்த கருத்து கேட்பது மதிப்புமிக்கது. அது வெறுமனே பார்ப்பதற்கு கொஞ்சம் தடிமனாகவோ அல்லது ஒல்லியாகவோ ஆவதாக இருக்கிறதா அல்லது முழுமையானதாகவும், ஊட்டச்சத்து, செயல் நோக்கம் மற்றும் ஒட்டுமொத்த நலன் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கிறதா? வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொள்கிறாரா அல்லது சொந்த முன்னோக்கு பார்வையில் செயல்படுகிறாரா? மற்றவர்களின் இலக்குகளை அடைய உதவுவதில் அவர் நம்பிக்கை கொள்கிறாரா?

இதோ நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில கேள்விகள்

- அவர் உடற்பயிற்சியின் பல்வேறு அம்சங்களான ஏரோபிக்ஸ், வலிமை, நெகிழ்வு முதலானவற்றை

குறித்த புரிதல் கொண்டிருக்கிறாரா, அது உங்களுக்கு எந்த வகையில் பொருந்தும்?

- அவர் உணவு கட்டுப்பாடு குறித்த முக்கியத்துவத்தை உணர்ந்து உள்ளாரா? மேலும் உங்களுக்கு அவர் சரியான உணவு கட்டுப்பாடு குறித்து அறிவுறுத்துகிறாரா அல்லது உங்களை ஊட்டச் சத்து நிபுணரிடம் பரிந்துரை செய்கிறாரா? உங்களிடம் உங்களது உணவுக்கட்டுப்பாடு பழக்கங்கள் குறித்து பேசுகிறாரா?
- உங்களது உடல்நிலை குறித்து கையாளுவதற்கு போதுமான வகையில் நடந்து கொள்கிறாரா? நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளியாகவும், மருந்துகளை எடுத்துக் கொள்பவராகவும் இருப்பின், உடற்பயிற்சியின் போது உங்களை நிர்வகிக்கும் திறன் கொண்டிருக்கிறாரா? அல்லது ஒருவேளை நீங்கள் முதியவராக இருப்பின், அவரால் ஒரு வயதான வாடிக்கையாளரை கையாள முடியுமா?
- உங்களது வாழ்க்கைபாணி குறித்த விவரமான கேள்விகளை அவர் கேட்கிறாரா?
- உங்களது மீதி நாளை முழுமையாக்கும் பொருட்டு உங்களுக்கு ஊக்கமளிக்கும் குறிப்புகளை அவர் தருகிறாரா?
- உங்களுக்கு உத்வேகம் கொடுத்து சவால் விடுகிறாரா? அவர் எதிர்மறையான விஷயங்களை தருகிறாரா (அதாவது-நீங்கள் குண்டாக இருக்கிறீர்கள், நீங்கள் எடையை குறைக்க வேண்டும்) அல்லது அவரது அணுகுமுறையில் நேர்மறையாக நடந்து கொள்கிறாரா (அதாவது-எடையை குறைப்பது என்பது நீங்கள் ஒரு ஆரோக்கியமான மற்றும் மிகவும் மகிழ்ச்சியாக அனுபவிக்கக் கூடிய வாழ்க்கையை தரக்கூடிய ஒன்று என்று கூறுபவராகவும், நீங்கள் முன்னேறும்போது உங்களை பாராட்டுபவராகவும் இருக்கிறாரா?)
- உங்களை எந்த அளவு பயிற்சி செய்ய வைக்க வேண்டும் என்ற சவாலுக்கு அவர் அணுக வேண்டும் என்று அறிந்துள்ளாரா?
- உங்களை தொடர்ந்து மற்ற வாடிக்கையாளர்களுடன் ஒப்பீடு செய்கிறாரா?
- அவரால் நீங்கள் செயல்நோக்கம் அளிக்கப்பட்டு, ஊக்கம் அளிக்கப்படுகிறீர்களா?
- நீங்கள் எட்டக்கூடிய இலக்குகளை அமைத்து கொள்ளவும் அவற்றை அடையவும் உங்களுக்கு உதவுகிறாரா?
- உடற்பயிற்சிகளை கற்றுத் தந்து, விளக்குகிறாரா, நீங்கள் எதற்காக அதை செய்கிறீர்கள் அது உடலின் எந்தப் பகுதிக்கு நல்லது என்பன போன்ற விஷயங்களை நீங்கள் புரிந்துகொள்ள உதவுகிறாரா?

ஒவ்வொரு தனி நபரும் வித்தியாச மானவர், அதற்கு ஏற்றவாறு அவர் நடத்தப்படவேண்டும். உங்களுக்காக நீங்கள் அமைத்துக் கொள்ளும் இலக்குகள், உங்களது இலக்குகளாக இருக்க வேண்டும், பயிற்சியாளரின் இலக்குகளாக இருக்க கூடாது. நீங்கள் செயல்நோக்கம் அளிக்கப்படுவதும், ஊக்கமூட்டப்படுவதும் நன்றுதான்.

இறுதியாக, ஒரு பயிற்சியாளர் என்பவர் நீங்கள் அவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்று எண்ணினார் எனில், அவர் உண்மையாகவே மனதளவில் உங்களது ஆர்வத்தின்பால் செயல்படவில்லை. நீங்கள் ஒரு சரியான பயிற்சியாளரைக் கொண்டு இருந்தீர்கள் என்றால், உங்களால் முடிந்தவரை நீங்கள் தானாகவே அவ்வப்போது உடற்பயிற்சி செய்ய முடியவும், அது குறித்த போதுமான அளவு தெரிந்து வைத்திருக்கவும் வேண்டும், மேலும் நீங்கள் எதற்காக அதை செய்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பது குறித்த புரிதலையும் கொண்டிருக்க வேண்டும். ஒருவேளை மற்றவர்களிடமிருந்து ஊக்கமளிக்க பெறாமல், உங்களது சொந்த உடற்பயிற்சி வழக்கத்தை நீங்களாகவே கையாளக்கூடிய அளவு நீங்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவர், உடல்நிலை-வாழ்க்கைமுறை ஆலோசகரான ஆசிரியர், இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளார்: கெட் சைஸ் வைஸ்; கெயின் டூ லாஸ்
www.drsheela.nambiar.com

தற்செயலாகக் கிடைத்த புத்தகங்கள்

சந்தியா ராவ்

சந்தர்ப்பங்கள் வாசிப்பை புதிய மற்றும் ஆச்சரியமான அனுபவங்களாக மாற்றுகின்றன

சில மாதங்களுக்கு முன்பு, என் மகன் அண்மையில் சாமர்செட் மோகத்தின் தி ரேஸர்'ஸ் எட்ஜ் என்ற நூலை படித்ததாக கூறியிருந்தான். அது எதைப் பற்றிய நூலென்று என்னால் நினைவுபடுத்த முடியாவிட்டாலும், 1930-களில் அதிக ஊதியம் பெற்றதாக நம்பப்படும் ஒரு திறமை வாய்ந்த எழுத்தாளரின் நூலைப் படிக்க அவன் முயற்சி எடுத்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஓவியர் பால் கோகெய்னின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட தி மூன் அண்ட் சிக்ஸ்பென்ஸ் நாவலை நாங்கள் கல்லூரியின் படித்தோம்; அவரது ஆஃப் ஹியூமன் பாண்டேஜ் என்ற பாதி சுயசரிதை நூல் பிரபலமாக இருந்தாலும், இது எனக்கு பிடித்தமானது.

ஒரு சில வாரங்கள் கழித்து நான் திருவண்ணாமலைக்குப் போக வாய்ப்பு கிடைத்தது. சென்னைக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு நகரம் அது. அங்கே அருணாச்சலேஸ்வரர் மலையைச் சுற்றிலும் துறவிகள் ஆசிரமங்கள் அமைத்து வாழ்கின்றனர். இந்த நகரம் புனித நகரமாகக் கருதப்படுகிறது. அவரகளில் மிகவும் மதிப்பு வாய்ந்தவர் ரமண மகரிஷி ஆவார்; அவரது ஆசிரமத்துக்குத்தான் நாங்கள் போயிருந்தோம். நான் மணி சாரிடம் எனது கொள்ளுத்தாத்தா ரமண மகரிஷியின் பக்தர், மகரிஷிக்கு மருத்துவம் பார்த்த மருத்துவக் குழுவில் அவரும் இருந்தார் என்று கூறியபோது, அவர் என்னை அங்கே இருந்த ஆவணக்காப்பகத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஜானிடம் அறிமுகம் செய்து வைத்தார். ஜான் எனது கொள்ளுத்தாத்தா டாக்டர். ஸ்ரீனிவாசராவ் இருக்கும் எல்லா படங்களையும் தாராளமாக எடுத்துக் காட்டினார். ரமண மகரிஷி மற்றும் ஒரு காக்கேசிய மனிதரோடு எனது கொள்ளுத்தாத்தா இருக்கும் படங்களைப் பார்த்தபோது ஜான், அது கைஹேக். தி ரேஸர்'ஸ் எட்ஜ் நாவலில் சாமர்செட் மோகம் தனது மைய கதாபாத்திரத்தை கைஹேகை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கினார் என்று நம்பப்படுகிறது; மேலும் அவர் விவரிக்கும் அந்தப் புனிதர் நிச்சயமாக ரமண மகரிஷிதான் என்றார்.

இந்தத் தகவல் புறக்கணிக்கப் படமுடியாதபடி பரவசமாகவும், தற்செயல் என்று நிராகரிக்கப்பட முடியாதபடியும்இருந்தது. இது ஒரு அறிகுறி போல தோன்றியது:



அப்புத்தகத்தைப் படி! அதைப் பற்றி மேலும் அறி! அதே வேளையில், ஆசிரம புத்தகக் கடையில், ஒரு புதிரான தலைப்புடன் கூடிய ஒரு புத்தகத்தை நான் கண்டெடுத்தேன்: பால் பிரண்டன் எழுதிய தி சேர்ச் இன் சீக்ரெட் இந்தியா என்ற புத்தகத்தை எடுத்தேன். அந்த புத்தக பின்பக்கத்தில் அவரைப் பற்றி கீழ்திசை ஆன்மீக பாரம்பரியத்தின் இருபதாம் நூற்றாண்டின் வெளிப்பாட்டாளரில் ஒருவர் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் ஆரோக்கியமான விமர்சனத்தையும் நியாயமான பகுத்தறிவதையும் வரவேற்கும் ஒரு பத்திரிக்கையாளர் அவர் என்பது தான் இதை வாங்க முடிவு செய்தது. நான் அதை விருந்தினர் இல்லத்திற்குப் போய் படிக்கத் தொடங்கும் வரை காத்திருக்க என்னால் முடியவில்லை. சென்னைக்கு டாக்ஸியில் திரும்பிப் போகையிலும் படித்துக் கொண்டே இருந்தேன்.

பிரண்டனைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் இணையம் எப்போதும் போல பல விடைகளைத் தந்தது. முதலில் தெரிந்து கொள்பவர்களுக்கு, பால் பிரண்டன் என்பது ராஃபேல் ஹர்ஸ்ட் என்பவரின் புனைப் பெயராகும். அவருடைய இந்தப் புத்தகம் என் அம்மா பிறந்த 1934-ம் ஆண்டு வெளியிடப்பட்டு, மிக அதிகமாக விற்பனையாகி, அதிகமான மறுபதிப்புகளும் செய்யப்பட்டது. எல்லாவற்றையும் கருத்தில் கொள்ளும்போது, அவர் தான் மேல்நாடுகளுக்கு இந்திய ஆன்மீகத்தையும், யோகக்கலையையும் அறிமுகம் செய்துள்ளார். முற்கால பயணிகள் இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள பக்கீர்களின் விசித்திரமான கதைகளுடன் ஐரோப்பாவுக்குத் திரும்பி வந்தனர். தற்காலப் பயணிகளும் அவ்வப்போது அதே போன்ற கதைகளைக்கொண்டு வருகின்றனர். விசித்திர யோகிகள் என்று சிலராலும், பக்கீர்கள் என்று பிறராலும் கூறப்படும் அந்தக் கதைகளின் பின்னுள்ள உண்மை என்ன? சிரமப்பட்டு கடைப்பிடிப்போருக்கு அளவற்ற மனோ ஆற்றலைத் தரும் மிகப்பழையதான அறிவூற்று இந்தியாவில் உள்ளது என்று நம்மை



ரமண மகரிஷி

வந்தடையும் புதிரான செய்திகளின் பின்னுள்ள உண்மை என்ன? இதனைக் கண்டறியும் நீண்ட பயணத்தை நான் தொடங்கினேன்.

தனது குழந்தைப் பருவம் மற்றும் பயணத்தை மேற்கொள்வதற்கான ஆர்வத்தூண்டுதல்களைப் பற்றி முதலில் விளக்கியபின் ஒரு எகிப்திய வித்தைக்காரர், அகமத்நகர் அருகில் மும்பையில் தன்னைத் தானே பார்சிகளின் தேவதூதர் என்று சொல்லிக்கொண்ட ஒரு மெஹர்பாபா ஒரு எழுத்துப் பலகையில் பிரண்டனிடம் நான் உலக வரலாற்றைய் மாற்றுவேன் என்று எழுதிக்காட்டியது, மூச்சுப்பயிற்சியின் மூலம் சாவை வெல்லக் கூடிய திறனுள்ள அடையாறு துறவி பிரம்மசுகானந்தா என்ற யோகி, காஞ்சிபுர சங்கராச்சாரியார் ஆகியோரைப் பற்றியெல்லாம் விவரிக்கிறார். பிரண்டன் தன்னை உயர் யோக உண்மைகளைப் பற்றி நிரூபிக்கக்கூடிய ஒரு ஆச்சாரியாரிடம் அனுப்புமாறு சங்கராச்சாரியரிடம் வேண்டிக்கொள்ள அவரே தன்னை ரமண மகரிஷியிடம் அனுப்பியதாகத் தெரிவிக்கிறார்.

மகரிஷியின் முன்னிருக்கும்போது நிலவும் மௌன அனுபவத்தை பிரண்டன் விளக்குவதும் பிறர் விவரிப்பதும் ஒரே மாதிரியுள்ளது: இந்த மனிதருக்குள் ஏதோ உள்ளது. அது காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும் இரும்பைப் போல எனது கவனத்தைக் கவ்விப்பிடிக்கிறது. அவரிடமிருந்து எனது பார்வையைத் திருப்ப முடியவில்லை. முதலில் எனக்கிருந்த மனக்கலக்கம், குழப்பம் ஆகியவை மெதுவாக அகன்றன. அவரது வித்தியாசமான கதிர்வீச்சு என்னை முழுமையாக ஆக்கிரமித்தது. அதுவரையில்லாதபடி அவரைப்பார்த்து மௌனத்தில் மூழ்கியிருந்த இரண்டு மணி நேரத்தில் ஒரு உதறித்தள்ள முடியாத மாற்றம் என் மனதுக்குள் புகுந்தது. ரயிலில் வரும்போது என் மனதில் எழுந்த மிகக்கவனமாகத் தொகுக்கப்பட்ட கேள்விகள் ஒவ்வொன்றாக பறந்தோடின... ஒரு அமைதியான ஆறு என்னருகில் ஓடுவதைப் போலுணர்ந்தேன். எனக்குள் ஒரு பேரமைதி புகுந்து ஆக்கிரமிப்பதை உணர்ந்தேன். சிந்தனையால் சித்திரவதைக்காளான எனது மூளை சிறிது ஓய்வெடுக்கத் தொடங்கியது என்று இருந்தது அந்த புத்தகத்தில்.

அதேவேளையில், “ஏ ரேஸர்’ஸ் எட்ஜ்-ஐ பற்றி நான் ஓய்வின்றி சிந்தித்தேன். அதைப் படிக்க எனக்குப் பொறுமையின்றி ஏ சேர்ச் இன் சீக்ரெட் இந்தியா அருகில் வைத்தேன். ஏ ரேஸர்’ஸ் எட்ஜ்-ல் விவரிக்கப்படும் பல பாத்திரங்களில் லாரி டாரெல்லும் ஒருவர். அந்நாவலில் மோகம் தன் சொந்தப்பெயரில் வருகிறார். போரில் பணியாற்றிய பின்னர் லாரி டாரெல் மிக அமைதியான மனதுடன் வருகிறார். ஆனால் நாவலில் அவர் உள் நோக்கிய சிந்தனைவயப்பட்டிருந்ததாக வருகிறது. இந்தப் பயணம் அவரை உலகின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்கிறது. பல அனுபவங்களைத் தருகிறது; ஒரு கோவணம் மட்டுமே அணிந்த மனிதரின் ஆசிரமத்தில் மிகச் சிறிதளவே பேசும் அவருடன் இருந்தது லாரியின் ஆன்மாவுடன் பேசியது போலிருந்தது. ஒரு சிறந்த நாவலின் எளிமையான நீண்ட சுருக்கம் இது. ஆனால் இது ஒரு மேற்கோள் மாதிரி மட்டுமே.

தி ரேஸர்’ஸ் எட்ஜ் நாவலில் சாமர்செட் மோகம் தனது மைய கதாபாத்திரத்தை கைஹேகை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கினார் என்று நம்பப்படுகிறது;

நாவலின் இறுதியில், அந்த சிறந்த ஆன்மிகவாதி தன்னொழுங்குடையவராக தன்முன் காண்பதாக லாரி மோகத்திடம் கூறுகிறார். அதற்கு மோகம் சந்தேகத்துடன் அவரை நோக்கி அமெரிக்காவின் ஓய்வற்ற, எப்போதும் பறந்துகொண்டேயிருக்கும், ஒழுங்கற்ற, தன்னலவாதிகளாக விளங்கும் மக்களிடம் நீங்கள், ஒரு மனிதர், எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்று ஒரு நிமிடம் கற்பனை செய்ய உங்களால் முடியுமா? என்று கேட்கிறார். லாரி, நான் முயற்சிக்கிறேன் என்று கூறுகிறார். தொடர்ந்து அவர் கூறுகிறார்: ஒரு மனிதர் சக்கரத்தைக் கண்டுபிடித்தார். ஒரு மனிதர் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்.... குளத்திலுள்ள நீரில் ஒரு கல்லை விட்டெறிந்தால் அண்டசராசரம் முன்னிருந்ததைப் போல் இருப்பதில்லை. அதில் விளைவு உண்டாகிறது... நீரில் ஏற்படும் ஒரு சலனவட்டம் இன்னொரு வட்டத்தை ஏற்படுத்துகிறது. இன்னொன்று இன்னொன்றை ஏற்படுத்துகிறது. எனது வாழ்க்கை முறை மகிழ்ச்சியையும், அமைதியையும் தருவதாக சிலபேர் உணர்ந்தால், அவர்கள் தாங்கள் உணர்ந்ததை வேறு சிலரிடம் கூறுவார்கள்.

லாரியின் வாழ்க்கை முறையானது நாவலைப் படித்து அறிய வேண்டியது. பிரண்டனின் சில பாத்திரங்கள் ஏற்படுத்திய நீர்க்குமிழிகள் தொடர்ந்தபடி இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. மோகம், ரமணர் ஆசிரமத்திற்கு வந்து ரமணரை சிறிது சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. அவர் நிச்சயமாக பிரண்டனின் நூலின் பாதிக்குப்புக்குள்ளாகியிருக்கிறார் – பிரண்டன் தனது நாவல் ஏ சேர்ச் இன் சீக்ரெட் இந்தியா-ஐ வெளியிட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, இந்த இரு நூல்களும் என்னிடம் வந்தது ஓர் அதிசயம் என்பதில் ஐயமில்லை.■

அசாம் குழந்தைகளுக்கு மறுவாழ்வு

கிரண் ஜெஹ்ரா

எக்பால் ஹுசைன் இதய சிகிச்சைக்குப் பின்...

குழந்தை மூச்சுவிடத் திணறினாலோ இதயம் வேகமாகத் துடித்தாலோ அது பிறவியில் வந்த இதய நோயாக இருக்கும் என்று எங்களுக்கு முன்பு தெரியாது என்று அசாம் மாநிலத்தின் பில்புராய் கிராமத்தைச் சேர்ந்த மனிகா பரூவா கூறினார்.

அவரது ஒரு வயது குழந்தை தபோஷி பரூவா விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென்று நினைவிழந்து விழுந்தது. பதறிப் போய் தேஜ்பூரில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர் அது பிறவி இதய நோய் என்றும் அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். மனிகா நம்பிக்கையை இழந்துவிட்டார்.

அவர்களிடம் அதற்குப் பணம் ஏது? அப்போது அந்த மருத்துவர் ரோட்டரி சங்கத்தின் 'வாழ்க்கைப் பரிசு' ('Gift of Life') என்ற திட்டம் மூலம் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை நடத்தப்படுவது குறித்து கூறியிருக்கிறார். அத்துடன் மனிகா குடும்பத்தினருக்கு கிரேட்டர் தேஜ்பூர் ரோட்டரி சங்கத்துடன் (D 3240) தொடர்பை ஏற்படுத்தினார். அதையடுத்து, ரோட்டரி சங்கத்தின் 'வாழ்க்கைப் பரிசு' திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஷிவானி திபேர்வால் என்பவரை மனிகா சந்தித்தார்.

அவர்கள் அந்த கிராமத்தை விட்டு வெளியே எங்கேயும் பயணம் செய்ததில்லை. அவர்களுக்குத் தாய்மொழியைத் தவிர வேறு எதுவும் தெரியாது. முன்பின் தெரியாதவர்கள் உதவுவதை அவர்கள் நம்பவில்லை. அவர்களுக்குத் திட்டம் குறித்து எடுத்துரைத்து, நம்பிக்கை அளிப்பது சிரமமாக இருந்தது என்றார் ஷிவானி.

ஒருவழியாக மனிகாவின் மகள் தபோஷியுடன் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 8 குழந்தைகள் தில்லிக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்கு ஆரம்ப கட்ட சோதனைகளை நடத்துவதற்கும் குடும்ப உறுப்பினருடன் தில்லி செல்வதற்கும் ரோட்டரி சங்கம் ரூ.1.50 லட்சம் அளித்தது. அவர்கள் தங்குவதற்கும் உணவுக்கும் மானவ் அஷ்ரய் (Manav Ashray) என்ற தன்னார்வ அமைப்பு ஏற்பாடு செய்தது.

அறுவைச் சிகிச்சை மற்றும் சிகிச்சைக்குப் பிறகான மருத்துவ உதவி ஆகியவற்றுக்கு, தில்லி ஈஸ்ட் என்ட் ரோட்டரி சங்கம், D 3011, மற்றும் தி ரோட்டரி ஃபவுண்டேஷன் ஆகியவற்றின் 'வாழ்க்கைப் பரிசு' திட்டத்துக்கான உலகளாவிய நிதி பெறப்பட்டது. எட்டுக் குழந்தைகளுக்கும் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை முடிந்துவிட்டது.

என் குழந்தை தபோஷி தற்போது ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வீட்டுக்கு வந்துவிட்டாள். ரோட்டரி அமைப்பினர் எங்கள் குடும்பத்தினரோ, நண்பர்களோ இல்லை. ஆனால், தேடி வந்து என் மகளுக்கு புதிய வாழ்க்கையைக் கொடுத்திருக் கிறார்கள், என்றார் மனிகா.

இதில் முக்கியப் பங்காற்றிய ஷிவானியே பிறவி இதய நோய்க்கு ஆளானவர். எனக்கே அந்த வலி தெரியும். அதனால்தான் அவர்களது மன வேதனையை உணர்ந்து, உதவ முன்வந்தேன் என்றார். இந்தப் பணிக்குக் கரம் கொடுத்த ஷில்லாங் ரோட்டரி சங்கத்தை (D 3240) சேர்ந்த கிரண் ஜோஷிக்கு நன்றி தெரிவித்தார். ஒவ்வொரு வாரமும் குறைந்தது மூன்று குழந்தைகள் இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் திட்டத் தின் கீழ் பலன் பெறுகிறார்கள் என்றார் ஷிவானி.

வாழ்க்கைப் பரிசு திட்டத் தின் நோக்கம் பிறவி இதயக் கோளாறால் அவதிப்படும் குழந்தைகளின் குடும்பங்களுக்கு நேரும் உளவியல் பாதிப்பு, பொருளாதார சிக்கல் ஆகியவற்றைக் குறைத்து, குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்க்கை அளிப்பதுதான் என்று திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் A.C. பீட்டர் கூறினார்.

தபோஷி பருவா தன் தந்தையுடன் மருத்துவமனையில்.

ஜெய்ப்பூர் ரோட்டரியின் ஒற்றுமை

ரோட்டரி செய்தி குழு

RIDE *பரத் பாண்டியாவுடன் ஜெய்ப்பூர் ரோட்டரி சங்க புதிய தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்.*

தங்கள் நட்பு மற்றும் ஒற்றுமையை பறைசாற்றும் ஒரு அறிய நிகழ்ச்சியில் மாவட்டம் 3054ஐ சேர்ந்த ஜெய்ப்பூர் மெட்ரோ, ஜெய்ப்பூர் ஈஸ்ட், ஜெய்ப்பூர் ஹைட்ஸ், ஜெய்ப்பூர் மகாநகர் மற்றும் ஜெய்ப்பூர் சிட்டி ஆகிய ஐந்து ரோட்டரி சங்கங்கள், RIDE டாக்டர் பாரத் பாண்டியாவின் தலைமையில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடென்டுகள் மற்றும் செகரட்டரிகளுடைய பதவி ஏற்பை ஒன்றிணைந்து நடத்தின.

250க்கும் மேற்பட்ட ரொட்டேரியன்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். Dr பாண்டியா தனது உரையில், "சேவைத் திட்டப்பணிகளை எடுத்துக்கொண்டு, சமூகத்திற்கு சேவை செய்ய அனைவருக்கும் உந்துசக்தியாக இருக்கவும்" ரொட்டேரியன்களை வலியுறுத்தினார். அத்தகைய ஒற்றுமையைக் காண்பித்ததற்காக அவர் அந்தச் சங்கங்களைப் பாராட்டினார், மேலும் அவர்கள் எதிர்காலத்திலும் அத்தகைய கூட்டு நிறுவல்களை மீண்டும் செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

K L ஜெயின், D 3054 இன் மிக மூத்த ரொட்டேரியன்,நிகழ்ச்சியின் தலைவராக இருந்தார் மற்றும் RC ஜெய்ப்பூர் மெட்ரோவின் சார்ட்டர் பிரசிடென்டான D S பாண்டரி, துணைத்தலைவராக இருந்தார். இந்நிகழ்வில் ஐந்து சங்கங்களால் முப்பத்தி ஐந்து புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர், மேலும் சில சேவைத் திட்டப்பணிகளும் அறிவிக்கப்பட்டன.

டாக்டர் பாண்டியா RC ஜெய்ப்பூர் மெட்ரோ திட்டப்பணியில் 300 பள்ளி குழந்தைகளுக்கு, சீருடைகள் மற்றும் பள்ளி உபகரணங்களை விநியோகித்தார். அதேவேளையில் RC ஜெய்ப்பூர் மகாநகர் ஒரு தண்ணீர் குளிரூட்டியை பானி பார்க்கில் உள்ள ஒரு மாவட்ட நீதிமன்றத்தில் அமைத்தது.

ரூ.2 லட்சம் செலவில் ஒரு பிசியோதெரபி மற்றும் டயாலிசிஸ் சென்டர் அமைப்பதற்கு RC ஜெய்ப்பூர் ஹைட்ஸ் மற்றும் ஷியாம் நகர் விகாஸ் சமிதி ஆகியவற்றிற்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ரோட்டரி ஆண்டின் போது த்ராயாவதி ஆற்றின் பக்கங்களிலும் மரங்கள் நடும் திட்டத்தை RC ஜெய்ப்பூர் சிட்டி உறுதிப்படுத்தியது.■

RC கும்பகோணம் சென்ட்ரல் — D 2981
ரூ.50,000 மதிப்புள்ள சிறப்பாக வடிவமைக்கப்பட்ட காலணிகளை சேக்ரெட் ஹார்ட் ஹாஸ்பிட்டலில் உள்ள தொழுநோயாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த மருத்துவமனையில் 200 நோயாளிகளுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

RC திருச்செங்கோடு ஹை-டெக் — D 2982
பல்வேறு அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் தட்டுகள், எழுதுபொருட்கள் போன்றவை உட்பட பல வகையான உபயோகப் பொருட்களை வழங்கியது. அந்த குழந்தைகளுக்காக ஒரு பல் மருத்துவ சோதனை முகாமும் நடத்தப்பட்டது.

RC கோதாவரி பலகோல் — D 3020
ஆந்திர பிரதேசத்தின் கடற்கரை நகரமான பலகோல் சுற்றியுள்ள 35 கிராமங்களைச் சேர்ந்த 600 நபர்கள் பயனடையும் வகையில் மருத்துவ சோதனை முகாமை ஏற்படுத்தி ரூ.50,000 மதிப்புள்ள மருந்துகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

RC மதுரை — D 3000
நலிவடைந்த பெண்களுக்கு தையல் பயிற்சி வழங்க ரூ.7.6 லட்சம் மதிப்புள்ள ஒரு தொழில்பயிற்சி மையம் கட்டப்பட்டுள்ளது. இச்சங்க உறுப்பினர்கள் 15 தையல் மெஷின்களை இந்த மையத்திற்கு நன்கொடை அளித்துள்ளனர், இம்மையம் ஒவ்வொரு காலாண்டிலும் 120 பெண்களுக்கு பயிற்சி அளிக்கும்.

சங்க சேவைகள்

RC புசாவல் ரெயில் சிட்டி — D 3030

சங்க உறுப்பினர் முஷால்தண்டா என்னும் கிராமத்தில் ஒரு அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு குடைகள், புத்தகங்கள், எழுது பொருட்கள், பற்பசை மற்றும் மதிய உணவுப் பெட்டிகளை கொடுத்து மகிழ்வித்தனர்.

RC ஆஜ்மீர் மெட்ரோ — D 3053

DG பிரியேஷ் பந்தாரி முன்னிலையில் ஆஜ்மீர் வளர்ச்சி ஆணையத்தின் கமிஷனரான பிரபலமான IAS அதிகாரி நமித் மேத்தா இந்தச் சங்கத்தில் இணைந்தார்.

RC உதம்பூர் — D 3070

ரஜௌரியில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனையில், RC ரஜௌரி சங்கத்துடன் இணைந்து ஒரு ஐந்து நாள் கண் பரிசோதனை மற்றும் அறுவைசிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. 150 நோயாளிகளுக்கு கண்புரை அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது, இதில் கண்புரை நோயால் பார்வையிழந்த 15 வயது சிறுமியும் அடக்கம்.

RC ஷாஹாபாத் மார்க்கண்டா — D 3080

ரோட்டரி சின்னம் பொறித்த பெரிய குடைகளை வெயிலில் வாடும் செருப்புத்தைப்பவர்களுக்கு சங்கத்தினர் வழங்கினர்.

மாவட்டம் 3141

நலிவுற்ற குழந்தைகளுக்காக பிறவியிலேயே இருக்கும் இதய கோளாறு, செவிச் சுருள் மற்றும் எலும்பு சம்பந்தமான பிரச்சனைகளின் அறுவை சிகிச்சைக்கான நிதி உதவிகளை வழங்க, முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் மற்றும் PRID அசோக் மகாஜன் முன்னிலையில் மகாராஷ்டிரா மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

RC பண்டரிபுரம் — D 3150

புதிய சங்க பிரசிடென்டாக P கோட்டையா பதவியேற்ப்பு நிகழ்ச்சியில் ஏழை பெண்களுக்கு தையல் மெஷின்கள் வழங்கப்பட்டது. CSR முயற்சியின் பகுதியாக ரூ.75,000 மதிப்புள்ள இந்த மெஷின்களை கல்படருவு ஸ்பின்னிங் மில்ஸ் நன்கொடையளித்தது.

RC நெல்லூர் — D 3160

பென்சலகோன கிராமத்தில் ரெட்டிஜனா சேவா சங்கத்துடன் இணைந்து கண் மருத்துவ முகாம் ஏறக்குறைய 100 மக்களுக்கு பரிசோதனை செய்து, அறுவைசிகிச்சைகள் செய்யப்பட்டு, கண்ணாடிகள் வழங்கப்பட்டது, அத்துடன் குண்டகட்டா கிராமத்தில் அரசு ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு எழுது பொருட்கள் மற்றும் பள்ளிபைகள் வழங்கப்பட்டன.

RC மூத்பித்ரி — D 3181

மாணவர்களுக்கு பாதுகாப்பான சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கு, அரசு பள்ளிகளுக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் கொடுக்கப்பட்டது.

RC கடூர் — D 3182

Y சித்தரல்லி கிராமத்தில் உள்ள ஒரு அரசு பள்ளி மாணவர்களுக்கு, பள்ளி பைகள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் போன்றவை வழங்கப்பட்டது. மற்ற ரொட்டேரியன்களுடன் சேர்ந்து சங்க பிரசிடென்ட் KH ஸ்ரீநிவாஸ் அவர்களும் இருந்தார்கள்.

RC திருச்சூர் சென்ட்ரல் — D 3201

ஒரு அரசு பள்ளியில் தங்கியுள்ள 850 மேற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு படுக்கை விரிப்புகள், துண்டுகள், சோப், அரிசி மற்றும் இதர ரேஷன் பொருட்கள் போன்ற நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டது. சில சங்க உறுப்பினர்கள் பணமாகவும் பொருளாகவும் நன்கொடை அளித்தனர்.

சங்க சேவைகள்

RC திருப்பூர் சவுத் — D 3202

மாவட்ட அரசு மருத்துவமனையில் ரூ.2 இலட்சம் செலவில் கட்டப்பட்ட காத்திருப்பு நிழற்குடையை **IPDG PM** சிவஷங்கரன் தொடங்கிவைத்தார். மருத்துவ மனைக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு இந்த புதிய வசதி, பயன்படும்.

RC சிவகாசி சென்ட்ரல் — D 3212

நகரத்தில் மற்றும் அதைச் சுற்றியுள்ள பள்ளிகளின் மாணவர்களுக்கு ரூ.10,000 மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களை இச்சங்கம் வழங்கியது. நான்கு மாணவர்களுக்கு ரூ.8,000 கல்வி உதவித்தொகையும் முதியோர் இல்லத்திற்கு ரூ.4000 மதிப்புள்ள அரிசி பைகளையும் சங்கம் நன்கொடை அளித்துள்ளது.

RC வேலூர் நார்த் — D 3231

காட்பாடியில் உள்ள தாரபடவேடுவில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மெத்தை தலையனைகளுடன் கூடிய கட்டில்கள் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 250 கர்ப்பிணி பெண்களுக்கு சிகிச்சையளிக்கவும் கைகுழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கும் பயன்படுத்தப்படும்.

RC கேங்டாக் சவுத் — D 3240

மாவட்ட நிதி உதவியுடன் கிழக்கு சிக்கிமில் அஹோ கிஷன் மேல்நிலை பள்ளிக்கு கைகழுவும் நிலையங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பான்கள் பொருத்தப்பட்டது மற்றும் பெஞ்சுகள் மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்கள் வழங்கப்பட்டது.

RC பேலூர் — D 3291

சங்கத்தின் புதிய வருட தொடக்க திட்டத்தில் மாணவர்களுக்கு உதவித்தொகை மற்றும் புத்தகங்கள் மற்றும் பெண்களுக்கு தையல் மிஷின்கள் வாங்க நிதி திரட்டுதல் போன்றவை செய்யப்பட்டது. PRIP ராஜேந்திர சாபூ சிறப்பு விருந்தினராகவும் DG முகுல் சின்கா கௌரவ விருந்தினராகவும் இருந்தனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்,
வடிவமைப்பு: L குணசேகரன்

லட்சியங்களுக்குச் சிறகுகள்!

கிரண் ஜெஹ்ரா

மதுரை நெக்ஸ்ட் ஜென் ரோட்டரி சங்கம், D 3000, நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் 5,000 இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றியது.

இன்று ஏராளமானோர் பல படிப்புகளை முடித்தும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அளவுக்கு வேலை கிடைப்பதில்லை; அனுபவம் இல்லாததால், போதிய ஊதியமும் கிடைப்பதில்லை என்று அண்மையில் ரோட்டரி தலைவராக இருந்த அமர் வோரா கூறினார்.

தற்காலத்தில் ஆன்லைன் வழியாகவே பணி நியமனம் செய்யப் படுகிறது. நாங்கள் சிறிய நகரில் இருக்கிறோம். மதுரை பகுதியில் வேலை தேடும் இளைஞர்களில் பலர் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் ஆவர். சிரமத்துக்கு இடையில் பட்டப்படிப்பு முடித்த, மிகக் குறைந்த வருவாய் உள்ள குடும்பத்தின் இளைஞர்களைக் கொண்டாடுகிறோம். ஆனால், அதற்குப் பிறகு? என்று கேள்வி எழுப்பிய வோரா, அவர்களுக்குப் போதிய வழிகாட்டுதல் இல்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் எங்களது ரோட்டரி சங்கம் போதிய அளவுக்குப் விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறது. அதைக் கொண்டு அடுத்த ஆண்டு முதல் ஆன்லைன் தளம் தொடங்க இருக்கிறோம் என்றார்.

ரோட்டரி சங்கம் நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் HCL ஹனிவெல் மற்றும் சோலைமலை உட்பட 45 நிறுவனங்கள் பங்கேற்றன. முகாமில் சுமார் 100 இளைஞர்கள் பல்வேறு பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டனர்.■

COLLECT ROTARY ON STAMPS

More than 100 nations have issued Postage stamps honouring Rotary and its activities

USA 1955 (50th year)

Rotary On Stamps
Active RI fellowship
www.rotaryonstamps.org

Japan 1978

India 1987

India 2005 (Centenary)

Germany 1980 (75th year)

"Rotary on Stamps" - a comprehensive beginner's collection available at Rs. 3200/-
For Details contact -

Rtn. Pradip Jain, FRPSL, Philatelist, Expert, Rotarian since 1977
WWW.PHILA-ART.COM, Whatsapp +91 9334132612 Email : philapradip@gmail.com

Phila Art
www.phila-art.com

சுயசரிதைகள் தோல்வியுறும்போது

TCA ஸ்ரீநிவாச ராகவன்

சுயசரிதைகளை வாசிப்பவர்களுக்கு நான் சொல்லப்போவது பரிச்சயமானதாக இருக்கும், அதாவது இதில் இரண்டு வகைகள் உண்டு: ஒன்று பிரதிபலிக்கக் கூடியவை, மற்றது ஒன்றை பின் தொடர்ந்து வரக்கூடிய மோசமான ஒன்று. முதலில் கூறியது சிறப் பானது; பின்னால் செ ான்னது மோசமானது.அதாவது, நீங்கள் ஒரு சுயசரிதையை படிக்கும்போது சிறந்த சாதனையாளர்களால் வழங்கப்படும் நுண்ணறிவுகளையே எதிர்நோக்குகிறீர்கள், அவர்களது வாழ்க்கை குறித்த கால வரிசைப் படியான எடுத்துரைத்தலை அல்ல, இது சாதனையாளர்கள் சாதனைகளை பற்றி பேசாமல் இருக்கும்போது, அந்த எழுத்துக்கள் உங்களிடமும் என்னிடமும் இருப்பது போன்ற சுவையற்ற செய்திகளாக இருக்கும்.

நான் முடிவு செய்தவரை, மிகவும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அரசு நிர்வாக அதிகாரிகள் தான். அவர்கள் தாங்கள் எவ்வாறு குழம்பி தோல்வியுற்றார்கள் என்பதை குறித்து விவரிக்கவும், நிரூபிக்கவும் தங்களது சுயசரிதைகளை பயன்படுத்துகிறார்கள். எனவே நான் அவற்றைப் படிப்பதை நிறுத்தி விட்டேன். அது என்னை - கிரிக்கெட் வீரர்கள், பொருளாதார நிபுணர்கள், அரசியல்வாதிகள் மற்றும் நீ திபதிகள் ஆகியோரின் சுயசரிதைகளை படிக்கச் செய்தது. அங்கேதான் ஒரு விசித்திரமான முரண்பாடு இருக்கிறது. உதாரணமாக, கிரிக்கெட் விளையாடும் திறனை பொறுத்து, சஞ்சய் மஞ்சரேக்கர் மற்றும் சச்சின் டெண்டுல்கர் இருவருக்கும் இடையே எந்த ஒப்பீடும் செய்யமுடியாது. ஆனால் மஞ்சரேக்கர் மிக அற்புதமான சுயசரிதையை வழங்கியுள்ளார், டெண்டுல்கரின் புத்தகமோ மிகவும் சலிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஆனால் பேட்டிங்கில், அது அப்படியே எதிர்ப்புறமாக மாறுபடுகிறது: மஞ்சரேக்கர் மிகவும் சலிப்பை ஏற்படுத்தக்கூடிய பேட்ஸ்மேன், சச்சினோ அற்புதமானவர். டேவிட் கோவர், அவர் பேட்டிங்கிலும் மேதை மற்றும் ஒரு அற்புதமான சுயசரிதையையும் எழுதியுள்ளார்.

அம்பயர்களுக்கும் பல கதைகள் உண்டு. அவர்களில் டிக்கி பேர்ட் சிறந்தவர். 1974 ஆம் ஆண்டில் அவர் தனது நீண்ட பயணத்தை துவங்கியதில் இருந்தே, அவரிடம் மிக சுவாரஸ்யமான கதைகள் இருக்கின்றன. அதில் சிறந்தது 1983 ஆம் ஆண்டு இந்தியா வெற்றி பெற்ற உலகக்கோப்பை இறுதிப்போட்டி குறித்தது. 15ஆம் ஓவரிலேயே கபில்தேவ் இந்த போட்டியில் இந்தியா வெற்றி பெறப் போகிறது என்று கூறினாராம். பேர்ட் அவரிடம் ஏன் என்று கேட்டிருக்கிறார். அதற்கு கபில்தேவ், ஏனெனில் மேற்கிந்திய அணி இதை மிக எளிதாக எடுத்துக் கொண்டு விளையாடுகிறார்கள் என்று கூறினாராம். பேர்ட் அவரை நம்பவில்லை. ஆனால் இறுதியில் அவர் சொன்னது போலவே நடந்தது.

மற்ற நான்கு பிரிவுகளில் - அரசியல்வாதிகள், அரசு நிர்வாக ஊழியர்கள், நீதிபதிகள் மற்றும் பொருளாதார நிபுணர்களில் - மிகச் சிலர் மட்டுமே பிரதிபலிக்க கூடியவர்களாக உள்ளனர். எரிச்சலூட்டும் விதமாக, அவர்களுள் பெரும்பாலானோர் தற்பெருமை பேசுபவர்களாக உள்ளனர். அரசு நிர்வாக ஊழியர்கள் பெரும்பாலான பகுதிகளில், தங்கள் வேலை குறித்த மனக்கவலையை கூறுகின்றனர். இது ஏனெனில், அவர்களுக்கு மிக அரிதாகவே அங்கீகாரம் கிடைக்கிறது. ஆனால் இதை மீட்டமைக்க கூடிய ஒரு அம்சம் உள்ளது: ஏனெனில் அவர்கள் முகமற்றவர்கள், அரசு நிர்வாக ஊழியர்கள் பொது மக்களின் விமர்சனங்களையும் எதிர்கொள்வ தில்லை. அவர்கள் ஒரு இடத்தில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு, அடுத்த வேலையில் குழப்பத்தை ஏற்படுத்த சென்றுவிடுகின்றனர்.

அரசியல்வாதிகள், எப்படி யாயினும் மிக நுணுக்கமாகக் கவனிக்க படுபவர்கள், மேலும் அவர்களே மிக அதிக அளவிலான துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள். ஆனால் அவர்களும் மிக அரிதாகவே அங்கீகாரமோ அல்லது முகஸ்துதியோ கிடைக்கப்பெறுகிறது, இது பரிதாபத்திற்குரிய விஷயம் தான், ஏனெனில் அவர்களில் பெரும்பாலானவர்கள் உண்மை யிலேயே நிறைய நல்ல செயல்களை செய்பவர்கள். ஆனால் இயற்கை யாகவே, அவர்களது தவறான செயல்கள் மட்டுமே கவனத்தைப் பெறுகிறது, எனவே தற்பெருமை செய்வது அவசியமாகிறது.

பல நீதிபதிகள் பெரும்பாலான பகுதியாக தங்களின் வாழ்க்கை கதைகளையே எழுதுகின்றனர், ஆனால் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, அவர்களது எழுத்தின் தரம் மோசமடைந்துவிட்டது. அவர்களுள் பெரும்பாலானோர் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட முடிவிற்கு வந்தனர் என்பது குறித்து எழுதுவதில்லை, ஆனால் இது, அவர்கள் தங்களது தீர்ப்பில் ஏற்கனவே இதை வழங்கி இருக்கிறார்கள் என்பதும் காரணமாக இருக்கலாம். ஒரே பிரச்சனை என்னவென்றால், தீர்ப்புகள் மிகவும் கடினமான ஒன்றாக இருக்கிறது.

பொருளாதார நிபுணர்களை பொறுத்தவரை, மிகச் சிலர் மட்டுமே சுயசரிதைகள் எழுதுகின்றனர், அதிலும் மிக ஆச்சரியமான விஷயம் என்னவெனில், இவ்வுலகம் எப்போதும் தங்களால் மட்டுமே இயங்குவதாக அவர்கள் கருத்தில் கொள்கின்றனர் என்பது. அந்த விஷயத்தில் பல்வேறு துறைகளில் இருக்கும் மற்ற கல்வியாளர்களும் அதையே செய்கின்றனர். இது ஏன் இப்படி இருக்கிறது என்று கல்வியாளராக இருக்கும் என் மனைவியிடம் கேட்டேன். அதற்கு அவர்,''அது மிகவும் எளிதானது. யாரோ தங்கள் சுயசரிதையை எழுத அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!'' என்றார். ■

LATIM

COLOUR COATED STEEL

Coloured steel that stands the test of time

LATIM's high quality galvanized / galvalume colour coated steel coils available in various designs, thickness, size & colours can be used for various applications - Roofings, Claddings, Crimping, Furnitures, False Ceilings, Shutter Doors, Vehicle Bodies, Decorative Container & Trunks, etc. **Ideal for Interior and Exterior Applications.**

Colour coating Plant at Umbergaon, Gujarat

- **Colour coated roofing sheet in various profiles design available on special request**
- **Available in various thickness, sizes and colours.**

LATIM GROUP

Corporate Office : 401, Navkar Plaza, 4th Floor, Bajaj Road, Vile Parle (West), Mumbai - 400056.
Tel : (022) 26202290, 26203399, 26203434, 26201166

Works : Industrial Plot No. 270, 271, GIDC, Umbergaon, Valsad. Gujarat - 396171

• E-mail : sales@latimsourcing.com • Web : www.latimprofile.com

Signature Advertising

ROTARY SERVICE PROJECTS

VIDEO CONTEST

2018-19

Calling all **Rotary clubs in Zones 4,5 & 6A** to actively participate in this contest and win exciting cash prizes.

Club presidents and secretaries from participating clubs need to submit a video entry (not more than **three minutes duration**) about a project that is undertaken this year, under The **Rotary Foundation's six areas of focus**. These are:

- **Peace and conflict prevention/ resolution**
- **Disease prevention and treatment**
- **Water and sanitation**
- **Maternal and child health**
- **Basic education and literacy**
- **Economic and community development**

The contest will be judged by an esteemed panel convened by RID C Basker.

The **top 3 entries** (from each of the respective **RI Zones of 4,5 &6A** in India) will win the following cash awards:

1st Prize: INR 100,000

2nd Prize: INR 50,000

3rd Prize: INR 25,000

The last date of submission of videos is **May 31, 2019.**

Please submit your video entries to Rotary News Trust online at:
rotaryprojectsvideo@gmail.com

You may also mail in your entries to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai, Tamil Nadu 600008. Phone: 044 4214 5666

Rotary

Rotary District 3012 | BE THE INSPIRATION R.I. THEME 2018-19

Subhash Jain AKS
District Governor 2018-19

A tribute to the Martyrs...
by Rotary Club Noida
Meeting at holiday Inn

DISTRICT MEMBERSHIP & PUBLIC IMAGE SEMINAR - 2018

Saturday, 11th August 2018 • Hallmark Banquet, Delhi

District 3012 Celebrating Commitment to Excellence...